பக்கங்கள் : பதினான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆடி 26 வெள்ளிக்கிழமை (11.08.2006)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 256

# விமானத் தாக்குதலில் நூற்றுக்கும் அதிகமான பொதுமக்கள் பலி!

## மூதூரில் அரசுப் படைகள் மூர்க்கம்

திருகோணமலை, ஓகஸ்ட் 11

மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் மீது நேற்று அரசுப் படைகள் நடத்திய - மிகக் கொடூரமான - விமானக் குண்டு வீச்சுகள், பல்குழல் எறிகணைச் செலுத்திகள் மூலமான ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களில் சிக்கி அப்பாவிப் பொதுமக்கள் நூறுக்கும் அதிகமானோர் உடல் சிதறிப் பலியாகினர் என்ற அதிர்ச்சித் தகவல்கள் நேற்று புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து வெளிவந்தன. படையினரின் மூர்க்கத்தில் முந்நூறுக்கும் அதிகமான பொதுமக்கள் படுகாயமடைந்தனர் என்றும் செய்திகள் தெரிவித்தன.

(14ஆம் பக்கம் பார்க்க)

### கால்வாய்க் கதவை நெருங்கியது இராணுவம்

# மாவிலாறில் நேற்று பெருஞ்சமர் மூண்டது

## இருமுனைகளில் படைகள் நகர்வு இராணுவத்தில் 41 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 11

சர்ச்சைக்குரிய மாவிலாறு அணைக்கட்டின் கால்வாய்க் கதவு அமைந்துள்ள பகுதியைக் கைப்பற்றும் நோக்குடன் இலங்கைப் படைகள் அப்பிரதேசத்தில் பெரும் எடுப்புடன் இரு முனைகளில் படை நகர்வுகளை நேற்று விடிகாலை 4 மணியளவில் ஆரம்பித்ததையடுத்து அங்கு உக்கிரச்சமர் வெடித்தது.

அரசு - புலிகள் சமாதான ஒப்பந்தத்தின் பின்னர் களத்தில் வெடித்த மிக மோசமான - உக்கிரமான- சமர் இதுவெனச் செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

சுமார் பத்தாயிரம் வரையான துருப்புகளைக் களத்தில் இறக்கி, இரண்டு முனைகளில் இந்த வலிந்த படையெடுப்பு ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது என்றும் கூறப்பட்டது.

வான்படை விமானங்கள் குண்டுமாரி பொழிய, பல்குழல் ஏவுகணைகளின் ஷெல் மழையோடு, கல்லாறுப் பகுதியிலிருந்து இந்த நகர்வுகள் இரண்டு பக்கமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(14ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவிடம் போராயுத உதவி கோருகின்றது இலங்கை பட்டியலைச் சமர்ப்பித்துவிட்டு பதிலுக்காகக் காத்திருப்பு!

புதுடில்லி, ஓக.11

விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்காக அவசர போராயுத உதவிகளை இந்தியாவிடம் இலங்கை கோரியிருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

தமிழ் பொதுமக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படமாட்டா என்ற உறுதிமொழியுடன், போராயுதங்களின் பட்டியல் ஒன்றைச் சமர்ப்பித்துள்ள இலங்கை அரசு, அது தொடர்பில் புதுடில்லியின் பதிலுக்காகக் காத்திருக்கின்றது என்று 'டைம்ஸ் ஒவ் இந்தியா' தகவல் வெளியிட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளை ஒடுக்கும் விடயத்தில் மேற்கு நாடுகள் மேலதிகமாக எதனையும் செய்யப் போவதில்லை என்பதை உணர்ந்து செய்வதறியாது குழம்பிப்போயிருக்கும் இலங்கை அரசு, தனது படைகளுக்கு அவசரமாகத் தேவைப்படும் போராயுதங்களையும், இராணுவ உதவியையும் இந்தியாவிடம் கோரியிருக்கிறது என்றும் 'டைம்ஸ் ஒவ் இந்தியா' குறிப்பிட்டிருக்கிறது.

தேவைப்படும் ஆயுதங்கள் மற்றும் தளபாடங்களின் விவரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்று புதுடில்லியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

முடிவில்லாத போரில் சிக்கியுள்ள இலங்கைத் தீவுடன் இராஜதந்திரத் தொடர்புகளை மட்டும் பேண விரும்பும் புதுடில்லி, கொழும்புடன் ஆழமான இராணுவத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளப் பின்னடிக்கிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## அல்லை படைமுகாம் ஆயுதக்கிடங்கு பெரும் வெடிப்பினால் தகர்ந்தது!

திருகோணமலை, ஓகஸ்ட் 11

கந்தளாயில் அல்லைப் படைமுகாமில் அமைந்திருந்த இராணுவத்தின் பிரதான ஆயுதக் களஞ்சியம் நேற்றிரவு திடீரென வெடித்துச் சிதறியது.

அல்லை படைமுகாமில் கேட்ட பெரும்வெடி ஓசையை அடுத்து அங்கு அமைந்திருந்த பிரதான வெடிமருந்துக் களஞ்சியம் தகர்ந்துபோனதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

வெடிமருந்துக் களஞ்சியத்தில் பெரும் வெடிப்பு நிகழ்ந்திருப்பதை கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் உறுதிப்படுத்தின. எனினும், அங்கு இடம்பெற்ற வெடிப்புக்கான காரணம் என்ன என்பது உடனடியாகத் தெரியவரவில்லை. படைத் தரப்பில் உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டனவா என்பதையும் உடனடியாக அறிந்துகொள்ள முடியவில்லை.

தொடர்ச்சியாக குண்டுகளை ஏவியதால் சூடு

(14ஆம் பக்கம் பார்க்க)





மாவிலாற்றைக் கைப்பற்றும் பெருஞ்சமரில் படுகாயமடைந்த படையினரை ஹெலி ஏற்றி இறக்குவதையும், சிகிச்சைபெறும் சிப்பாய் ஒருவரையும் படங்களில் காணலாம்.

## தொண்டு நிறுவன ஊழியர் இன்று யாழ். நகரில் மௌனப் பேரணி

யாழ்ப்பாணம்,ஓக.11

அரசசார்பற்ற தொண்டு நிறுவனமான பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் பதினேழு ஊழியர்கள் மூதூரில் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து யாழ். நகரில் இன்று பிற்பகல் மௌனப் பேரணி நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் இந்தப் பேரணியை ஒழுங்கு செய்துள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு நல்லூரில் உள்ள யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலக முன்றிலிலிருந்து ஆரம்பமாகும் மௌனப் பேரணி அங்கிருந்து யாழ். மாவட்ட செயலகத்தைச் சென்றடையும்.

அரச சார்பற்ற தொண்டு நிறுவனத்தின் ஊழியர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மௌனப் பேரணியில் சகல

(14ஆம் பக்கம் பார்க்க)

### தோப்பூரிலும் சமர் வெடித்தது

திருகோணமலை, ஓக.11

இலங்கைப் படைகள் மாவிலாறுப் பகுதியில் ஆரம்பித்த படை நகர்வுகளை எதிர்கொண்டு அங்கு இருமுனைகளில் எதிர்ச்சமர் புரிந்து வரும் விடுதலைப் புலிகள் அதே சமகாலத்தில் திருகோணமலை

(14ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் புலிகளின் பகுதியில் மனிதப் பேரவலம்! 42ஆயிரம்பேர் உணவு, தண்ணீர் இன்றித் தவிப்பு!!

### வெளிநாடுகளின் அவசர நிவாரண உதவியை கோருகின்றனர் புலிகள்

திருகோணமலை, ஓக.11

கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள ஈச்சிலம்பற்று, சம்பூர், வெருகல், கதிரவெளி, வாகரை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இடம் பெயர்ந்து சிக்குண்டு போயிருக்கும் சுமார் 42 ஆயிரம் பொதுமக்கள் உணவு, தண்ணீர் மற்றும் மருத்துவ வசதிகள் இன்றி அந்தரிக்கின்றனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரதேசங்களில் உருவாகி இருக்கும் பெரும் மனிதாபிமான நெருக்கடி குறித்து விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் சி.புலித்தேவன் கொழும்பில் உள்ள பிரிட்டன் மற்றும் நோர்வே நாடுகளின் ராஜதந்திரிகளின் கவனத்துக்கு அவசர தகவல் அனுப்பியுள்ளார்; தொலைபேசி மூலமும் தொடர்புகொண்டு பேசியுள்ளார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

### அல்லை - கந்தளாய் வீதி மூடப்பட்டது!

திருகோணமலை, ஓக.11

கடும் சண்டை நடைபெற்று வரும் மாவிலாற்றை அண்டிய அல்லை - கந்தளாய் வீதியில் பொது மக்களின் போக்குவரத்துக்களை படையினர் தடைசெய்துள்ளனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

### நாச்சிமார் கோவிலருகே நேற்றுக் கிளைமோர்

யாழ்ப்பாணம்,ஓக.11

நாச்சிமார் கோவிலடியில், அரசடிக்குச் சமீபமாக கே.கே.எஸ். வீதியில் பாதுகாப்புப் பணியில் இருந்த படையினர்மீது நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் கிளைமோர்த்தாக்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தொண்டு நிறுவன ஊழியரின் படுகொலை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது

## யாழ். அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஓக.11

தன்னார்வ பணிகளில் ஈடுபடுவோரை கொலை செய்வதையும், அச்சுறுத்தலுக்கு உள்ளாகி தாக்கப்படுவதையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம் இந்த வகையில் பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் ஊழியர்களின் படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் நீதியின்முன் நிறுத்தப்படவேண்டும்.

- இவ்வாறு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் தெரிவித்துள்ளது.

இது விடயமாக, மேற்படி இணையம் விடுத்த அறிக்கையில்:-

மூதூர் நகரில் அரச சார்பற்ற நிறுவனமான பட்டினிக்கு எதிரான பிரான்ஸ் நிறுவனத்தில் பணிபுரிந்த நான்கு பெண்கள் உட்பட பதினேழு தமிழ் ஊழியர்கள் கொடூரமாக சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளனர் என அந்நிறுவனப் பணிப்பாளர் நாயகம் புளொட் மிரியெல் அதிர்ச்சி செய்தியை வெளியிட்டுள்ளார். அத்துடன், இலங்கையில் தங்கள் பணியை இடைநிறுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மூதூர் நகரிலிருந்து விடுதலைப் புலிகள் வெளியேறிய பின் அதாவது 05.08.2006 (சனிக்கிழமை) அன்று காலை இலங்கை இராணுவம் பிரவேசித்த பொழுது மேற்படி நிறுவனப் பணியாளர்கள் அனைவரும் தங்களை அடையாளப்படுத்தும் நிறுவனப் பெயர் பொறிக்கப்பட்ட அங்கிகளை அணிந்திருந்த போதும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். நிறுவனத்தின் 25 வருட வரலாற்றில் இவ்வித கோர நிகழ்வுகள் ஏதும் எந்த நாட்டிலும் இடம்பெறவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கில் பணிபுரியும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு எச்சரிக்கைகள் கொடுக்கப்பட்டும், உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய நிகழ்வுகளும், சில கொலைகளும் நிகழ்ந்துள்ளன. அரச கட்டுப்பாடற்ற பதிகளுக்குள் ஊடுருவி அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்களை கொலை செய்வதும், வாகனங்கள் தாக்கப்படும் நிகழ்வுகளும் அதிகமுண்டு. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணியாளர்களும் கடத்தப்பட்டுள்ளார்கள்.

அரச சார்பற்ற நிறுவனங்கள், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கொடூரமாகப் பாதிக்கப்பட்ட மக்களின் யதார்த்த குரலாக மட்டுமல்ல அவர்களின் துயரங்களுக்கு நம்பிக்கை ஒளியாகவும் பணியாற்றி வருகின்றனர். அங்கு நிகழும் கொடூர அடக்குமுறைகளின் உண்மையை வெளியுலகிற்கு கொண்டு வரக்கூடியவர்களாகவும், நீதியின் குரலாகவும், உண்மைக்கு சாட்சியாகவும் அவர்கள் இயங்கி வருவதாலும் தான் அவர்கள் பரவலாகத் தாக்கப்படுவதற்கு முக்கிய காரணியாகும்.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், இந்த நடவடிக்கையை வன்மையாகக் கண்டிப்பதுடன், மக்களின் உரிமைக் குரலாக இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இருப்பையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்தி இப்பயங்கர கொலையை செய்தவர்கள் நீதியின்முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் -

இத்தகைய மனிதாபிமானமற்ற செயல்கள் சமாதான செயற்பாட்டை கேள்விக் குறியாக்குவதாக அமைவதுடன், யுத்த, இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களின் உதவிகளிற்கும் பெருந்தடையாக அமைகிறது எனவும் - தெரியப்படுத்துகிறது.

இறந்தவர்களிற்கு எமது கண்ணீர் அஞ்சலிகளையும், அவர்களின் உறவுகளிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம். - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# சண்டிலிப்பாயில் புதனன்று குடும்பஸ்தர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்,ஓக.11

சண்டிலிப்பாயில் நேற்றுமுன்தினம் பி.ப. 6.45 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சண்டிலிப்பாய், மடத்தடியைச் சேர்ந்த சின்னராசா வசந்தகுமார் (வயது 31) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

சண்டிலிப்பாய்ச் சந்தியில் கடைச்சல் தொழிலகம் ஒன்றை நடத்திவரும் இவர், கடையைப் பூட்டிவிட்டு சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோதே சுடப்பட்டுள்ளார்.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அருகிலுள்ள இராணுவ முகாமுக்குள் குண்டு வெடிப்புச் சத்தம் கேட்டதாகவும் -

அதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட குடும்பஸ்தர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார் என்றும் - கூறப்பட்டது.

இதற்கிடையில் - சம்பவ இடத்திற்கு விஜயம்செய்த மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் விசாரணை நடத்தியதுடன், பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார். (எ-204-13-15-78-190)

# கைதடி சுற்றிவளைப்பு இளைஞர் ஒருவர் கைது

கைதடி,ஓக.11

கைதடி குமாரநகர், உதயசூரியன் வீதி ஆகிய பகுதிகள் நேற்று அதிகாலை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

இத்தேடுதலின்போது ஐந்து வீட்டுத்திட்டத்தைச் சேர்ந்த சி.மோகன் என்ற இளைஞன் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பகுதியில் இருந்து துப்பாக்கி ஒன்றைப் படையினர் கைப்பற்றியுள்ளனர் எனக் கூறப்பட்டது. (எ-75)

# மாவிலாறு அணையை திறந்தமை அரசுக்கு கிடைத்த பெரு வெற்றி

## பாராட்டுகிறார் விமல் வீரவன்ஸ

மாவிலாறு அணைக்கட்டை இராணுவத்தினர் திறந்து விட்டமை அரசுக்குக் கிடைத்த மிகப் பெரும் வெற்றியாகும் என்று பாராட்டியிருக்கிறது ஜே.வி.பி.

''இலங்கையிலேயே மிகப் பெரும் பிரச்சினையாக உருவெடுத்த மாவிலாறு அணைக்கட்டை படையினர் மிகச் சிறந்த திட்டமிடல் மற்றும் தாக்குதல்கள் மூலம் மீட்டெடுத்தமை அரசுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி'' - என்றார் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ.

''புலிகளுக்கு அடிபணியாது படையினரின் திறமை மீது நம்பிக்கை வைத்துத் தொடர்ச்சியாகப் போராடி நாட்டுக்குத் துணிவுடன் வெற்றி பெற்றுத் தந்த அரசை ஜே.வி.பி. பாராட்டுகிறது. அந்தப் பகுதியில் புலிகள் தொடர்ந்து நடமாடாமல் பாதுகாப்பதும் அரசின் பிரதானமான கடமை'' என்றும் வீரவன்ஸ கூறியிருக்கிறார்.

# இராணுவக் காவலரணை அகற்றுமாறுகோரி யாழ். மத்திய கல்லூரி மாணவரும் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.11

யாழ். மத்திய கல்லூரி மாணவர்களும் தமது பாடசாலைக்கு அருகில் உள்ள இராணுவக் காவலரண்கள், பொலீஸ் அலுவலகம் என்பவற்றை அகற்றுமாறுகோரி நேற்று பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் குதித்தனர்.

இராணுவக் காவலரண் மற்றும் பொலீஸ் அலுவலகம் அகற்றப்படும்வரை தமது பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடரும் என்றும் யாழ். மத்திய கல்லூரியின் தமிழ் மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக, மேற்படி ஒன்றியம் விடுத்த செய்திக் குறிப்பில்:-

எமது கல்லூரியைச் சூழ இராணுவக் காவலரண்கள் அமைந்திருப்பது எமது கல்விச் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கின்றன.

அத்துடன், பொலீஸாரின் 51ஆவது படைப்பிரிவின் அலுவலகமும் எமது கல்லூரிக்கு அண்மையில் அமைந்துள்ளமை எமக்குப் பெரும் அச்சத்தை உண்டுபண்ணுகிறது.

யுத்தம் ஒன்று ஏற்படுமானால், எமது உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலைமை உள்ளது என்றும் அச்சமடைகின்றோம்.

பொலீஸார் வீதித்தடைகளை அமைத்து நாம் பாடசாலைக்கு இலகுவில் செல்லும் பாதைகளை மூடியுள்ளனர்.

எமது கல்லூரி சுதந்திரமான கற்றல் செயற் பாடுகளை எதிர்நோக்கி நிற்கின்றது. இந்நிலை யில், இராணுவம் எமது சுதந்திரமான கல்விக்கு வழிவிட்டு எமது கல்லூரிச் சூழலில் இருந்து அகலவேண்டும் - என்றுள்ளது. (எ-86-203)

# மாவிலாறு தடுக்கப்பட்டது ஏன்? சபையில் சம்பந்தன் விளக்கம்

கொழும்பு,ஓக.11

மாவிலாற்றுக்கப்பால் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியிலான நீர் விநியோகத் திட்டத்தை திருமலை அரச அதிபர் இடைநிறுத்தியமையால் தான் புலிகள் மாவிலாறு அணைக்கட்டை மூடினர் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் எம். பி. நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நேற்று சபை ஒத்திவைப்பு வேளை விவகாரத்தில் அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் அமைக்கப்படவிருந்த நீர்ப்பாசனத் திட்டம் கைவிடப்பட்டதால் புலிகள் தமது பகுதியின் நீர்த் தேவையைப் பூர்த்திசெய்வதற்காகவே மாவிலாறு அணைக்கட்டை மூடினர்.

மாவிலாறு அணைக்கட்டு நீர்ப்பாசனம் மூலம் 65 வீதமான காணியில் தமிழ் மக்கள் பயிர் செய்கின்றனர். 35 சதவீதமானகாணியில் சிங்களவர்கள் பயிர் செய்கின்றனர். இப்படியிருக்க இன ரீதியாகவோ சிங்கள மக்களை விரட்டியடிப்பதற்காகவோ புலிகள் மாவிலாறு அணைக்கட்டை மூடவில்லை.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் மக்கள் நீருக்காகப் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். மாவிலாறு அணைக்கட்டைத் திறக்கும்படி கோரி அங்கு ஊர்வலம் போனவர்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்றிருந்தால் இதை உணர்ந்து கொண்டிருக்க முடியும்.- என்றார் சம்பந்தர்.




சென்.ஜோன்ஸ், சுண்டுக்குளி மாணவர்களுக்கு ஆதரவாக

# யாழ். கல்வி வலய மாணவர்கள் நேற்று கல்விச் செயற்பாடுகளைப் புறக்கணித்தனர்

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் மாணவர்கள் நேற்று தமது கல்விச் செயற்பாடுகளை முழுமையாகப் பகிஷ்கரிப்புச் செய்தனர்.

இதனால், மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்ததுடன், பாடசாலைகளும் வெறிச்சோடிக் காணப்பட்டன.

தமது கல்லூரிக்குச் சமீபமாகவுள்ள இராணுவக் காவலரணை அகற்றுமாறு கோரி யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவர்கள் நடத்திவரும் பகிஷ்கரிப்புப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தே யாழ். கல்வி வலயப் பாடசாலை மாணவர்கள் நேற்றைய தினம் கல்விச் செயற்பாடுகளைப் பகிஷ்கரித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் - பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் யாழ்.இந்துக் கல்லூரி மாணவர்களுக்கும் இராணுவத்தினருக்குமிடையே நேற்றுக் காலை முறுகல்நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளைப் பகிஷ்கரிப்புச் செய்து விட்டு பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்களை இராணுவத்தினர் தடுத்து நிறுத்தி விசாரணை செய்ய முற்பட்டனர் என்றும் - இதன்போது இராணுவத்தினருக்கும் மாணவர்களுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டதாகவும் - கூறப்பட்டது. இதனைத் தொடர்ந்து வீதியில் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டதுடன், கற்களும் வீசப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக அப்பகுதியில் நேற்றுக் காலை பெரும் பதற்றம் நிலவியது.

பகிஷ்கரிப்பைத் தொடர்ந்து, சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் யாழ். அலுவலகத்தில் நேற்று முற்பகல் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

இதற்கிடையில் - சென்ஜோன்ஸ் கல்லூரியின் தமிழ் மாணவர் ஒன்றியத்தினர் தமது போராட்டத்தின் நியாயப்பாடுகளை விளக்கி நேற்று யாழ். அரச அதிபரிடம் மகஜர் கையளித்ததுடன், இராணுவத்தளபதிக்கான மகஜரையும் அரச அதிபரிடம் கையளித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-86-203)

தமிழ் - முஸ்லிம் ஒற்றுமைக்காக உழைத்த

# மௌலவி ஸஹீலின் விடுதலை குறித்து அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக 11

மௌலவி எஸ்.எம் ஸஹீல் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். மௌலவியின் விடுதலை தொடர்பாக, அரசும் சம்பந்தப்பட்டவர்களும் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது யாழ். மாவட்டபொது அமைப்புகளின் ஒன்றியம். இது தொடர்பாக, ஒன்றியம் விடுத்த பத்திரிகைச் செய்திக் குறிப்பில்:-

தமிழ்-முஸ்லிம் மக்களின் இன ஒற்றுமையை மேம்படுத்தி இனமத பேதமின்றி சகோதரத்துவத்துடன் வாழ அயராது அரும்பணியாற்றிவந்த யாழ். முஸ்லிம் மக்களின் பிரதிநிதியான மௌலவி எஸ்.எம்.ஸஹீல் புத்தளத்தில் அமைந்துள்ள அவரது வீட்டில் வைத்து 09.08.2006 அன்று அதிகாலை 2 மணியளவில் கடத்தப்பட்டுள்ளார்.

இனங்களுக்கிடையான, தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையிலான ஒற்றுமையை விரும்பாத தீயசக்திகளான இராணுவ துணைக் குழுக்களாலும், இராணுவப் புல[illegible]. இவர் கடத்தில் செல் [illegible]. இவர் நடைபெறவிருந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாநகரசபை வேட்பாளராக நியமிக்கப்பட்டதன் ஊடாக யாழ். குடாநாட்டில் தமிழ் - முஸ்லிம் நல்லுறவை வெளிக்காட்டியுள்ளார்.

மொழியால் நாம் ஒன்றுபட்டவர்கள் என்பதனை இவரின் கடந்த கால செயற்பாடுகள் காட்டி நிற்கின்றன. தமிழ் பேசும் மக்களின் மேம்பாட்டிற்காக உழைத்த இவரை கைது செய்து கடத்திச் சென்றுள்ளனர்.

• இவ்வாறான ஈனச்செயல்கள் இனங்களுக்கிடையான ஒற்றுமையைச் சீர்குலைத்து அடக்கு முறைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் மக்களின் குரல்வளையை நசுக்கி இனங்களை அடக்கி ஆழ நினைக்கும் அரசின் இனவாத போக்கை யாழ்.மாவட்ட பொது அமைப்பின் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

கடத்திச் செல்லப்பட்ட மௌலவி எஸ்.எம்.ஸஹீல் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். இதற்கு அரசும், சம்பந்தப்பட்டவர்களும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.- என்று அதில் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# யுத்த நிறுத்தத்துக்கு இது அந்திம காலம்

பௌத்த - சிங்களப் பேரினவாதமும், மேலாண்மைப் போக்குமுடைய தென்னிலங்கைச் சக்திகளின் தாளத்துக்கு - இசைக்கு - மஹிந்தவின் அரசு ஆடுகின்றது என்பதைத் திரும்பத் திரும்ப இப்பத்தியில் சுட்டிக்காட்டி வந்தோம். அது இப்போது செயலில் தெளிவாக வெளிப்பட்டு அம்பலமாகி வருகின்றது.

*''திருகோணமலை மாவட்டம் சம்பூரில் புலிகள் நிலை கொண்டிருப்பது திருகோணமலைத் துறைமுகத்துக்கும், திருகோணமலை நகருக்கும் பாரிய பாதுகாப்பு அச்சுறுத்தல். இதை அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவினரே தெளிவுபடுத்தியுள்ளனர். ஆகவே, சம்பூர்ப் பிரதேசத்திலிருந்து விடுதலைப் புலிகளை விரட்டியடித்து அதனை அரசு தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டும்.''*

- இப்படி ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும், எம்.பியுமான விமல் வீரவன்ஸ, கடந்த செவ்வாயன்று நாடாளுமன்றத்தில் ஆணையிடுமாற்போல் சூளுரைத்திருந்தார்.

அந்த ஆணையை சிரமேற் கொண்டு நிறைவேற்றும் வேலையை அரசுத் தலைமை விரைந்து ஆரம்பித்து விட்டது என்பதை நேற்று விடிகாலை மாவிலாற்றுப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட - பெரும் எடுப்பிலான - யுத்த நகர்வு முயற்சி நிரூபிக்கின்றது.

மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கை என்ற பெயரிலோ அல்லது வேறு ஏற்பாட்டிலோ இனிமேல் பெரும் படை நகர்வு முயற்சிகளோ அல்லது வான் வழி விமானக் குண்டு வீச்சுகளோ அல்லது ஆட்டிலறி மற்றும் ஷெல் தாக்குதல்களோ தங்களது பிரதேசங்கள் மீது அரச தரப்பினால் மேற்கொள்ளப்படுமானால், அது யுத்த நிறுத்தம் செயலிழந்து போய், முழு யுத்தப் பிரகடனம் செய்யப்பட்டதாகவே அர்த்தப்படுத்தப்படும் என்று புலிகள் ஏற்கனவே எச்சரித்திருந்தனர். அந்த எச்சரிக்கை நோர்வே அனுசரணைத் தரப்பு மூலம் அரசுத் தலைமைக்குத் தெரியப்படுத்தப்பட்டுவிட்டது என்றும் புலிகள் தெரிவித்திருந்தனர்.

அந்த எச்சரிக்கைக்கு மத்தியிலேயே கல்லாறு, மாவிலாறுப் பகுதிகளில் இருந்து புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள சம்பூர் மற்றும் கதிரவெளிப் பிரதேசங்கள் மீது பெரும் எடுப்பில் நேற்றுக் காலை தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. விமானங்கள் குண்டு மாரி பொழிகின்றன. பல்குழல் எறிகணைச் செலுத்திகளிலிருந்து ஷெல்கள் சீறிப் பாய்கின்றன. பீரங்கி மழை வேறு.

இப்போது திருகோணமலையில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் சிவிலியன் இலக்குகள் மீதே இந்த யுத்தத் திமிர் நடவடிக்கை கண்வைத்திருப்பதாகத் தோற்றுகின்றது.

ஏற்கனவே, இலங்கை இராணுவத் தளபதி மீது கொழும்பில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல் முயற்சியை அடுத்து திருகோணமலை சம்பூர்ப் பகுதியை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டு வீச்சுக் காரணமாக அங்கு பல்லாயிரக் கணக் கான மக்கள் நிர்க்கதியாகி, அவலப்பட்டு, அகதிகளாக இடம்பெயர்ந்திருந்தனர். அந்த அகதிகளே நேற்று ஆரம்பிக்கப்பட்ட கொடூர இராணுவ நடவடிக்கையில் இலக்கு வைக்கப்பட்டு அல்லோலகல்லோலப்பட்டு அலைக்கழிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

அரசுப் படைகள் மாவிலாற்றில் தற்போது ஆரம்பித்திருக்கும் புதிய இராணுவக் கெடுபிடி நடவடிக்கை, முழு அளவி லான யுத்தத்தை வருந்தி வரவழைக்கும் ஏற்பாடின்றி வேறில்லை.

மாவிலாற்று தண்ணீர்ப் பிரச்சினையை அடுத்து எழுந்த யுத்தம் மூதூர் மோதலோடு முடிவுக்கு வந்து. ஆற்றில் தண்ணீர் திறந்துவிடப்பட்டதுடன் தணிந்துவிடும் என்றுதான் பலரும் எதிர்பார்த்தனர்.

ஆனால், கால்வாயில் தண்ணீரைத் திறந்து விடுவதற்காகக் கால்வாய்க் கதவு அமைந்துள்ள பிரதேசத்துக்குப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனும், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரும் சென்றவேளை அந்தப் பிரதேசத்தை இலக்கு வைத்துப் படையினர் பீரங்கிகளையும், ஷெல்களையும் பொழிந்து தள்ளினர். அதனால், பதுங்கு குழிகளுக்குள் பாய்ந்து, தப்பிப் பிழைத்து மீண்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் அதன் பின்னர் ஒரு முக்கிய கருத்தைத் தெரிவித்தார்.

''இந்த நடவடிக்கைகள் தண்ணீருக்கானவை அல்ல, வேறு நோக்கம் கொண்டவை போலத் தோன்றுகின்றன.'' - என்றார் அவர். அதுதான் இப்போது நிதர்சனமாகி வருகின்றது.

மாவிலாற்றுத் தண்ணீர்ப் பிரச்சினையை மையமாக முன்னிறுத்தி, திருகோணமலை மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து புலிகளை ஒட்டு மொத்தமாகத் துடைத்தழிப்பதே அந்த வேறு நோக்கம் என்பது இப்போது அரசுப் படைகள் ஆரம்பித்துள்ள புதிய படை நகர்வு நடவடிக்கைகள் மூலம் தெளிவாகியிருக்கின்றது.

அரசுப் படைகளின் இந்த இராணுவ நடவடிக்கையை சுட்டிக் காட்டித் தகவல் வெளியிட்ட புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ. இளந்திரையன், ''இந்நடவடிக்கைகளைக் கொழும்பின் யுத்தப் பிரகடனமாகவே அர்த்தப்படுத்த முடியும்.'' - என்று கூறியிருக்கின்றமை கவனிக்கத்தக்கது.

ஆக, யுத்தநிறுத்தத்துக்கு வழி செய்த புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு முடிவு வேளை - அந்திமகாலம் - வந்து விட்டது என்பது உறுதியாகி வருகின்றது.

தமிழ் மக்கள் மீது யுத்தத்தை விதித்தோர் அதன் விளைவுகளை அறுவடை செய்யவும் - எதிர்கொள்ளவும் - இனித் தயாராக வேண்டி இருக்கும்.

புலிகளை அழிக்கின்றோம் என்ற பெயரில் பொதுமக்களைக் கொன்றொழிக்கும் நாசகார வேலை கிழக்கில் தீவிரமடைந்திருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. இந்த வினையின் விளைவு எங்காவது வெளிப்படும் என்பதும் எதிர்பார்க்கப்படக்கூடியதே.



மறைந்த நரம்பியல் நிபுணரும் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட முன்னாள் விரிவுரையாளருமான வைத்திய கலாநிதி விசாகசுந்தரம் குணானந்தனின் அஞ்சலி நிகழ்வுகள் நேற்று யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரை மண்டபத்தில் நடைபெற்றபோது -

குணானந்தனின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருப்பதையும் - யாழ். பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் ம.சிவசூரிய, பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் கே.குமாரவடிவேல் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்துவதையும் - அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

*(படங்கள் கவிதரன்)*

## புலமைப்பரிசில் பரீட்சை திருமலையில் ஒத்திவைப்பு

கொழும்பு, ஓக.11

எதிர்வரும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறவுள்ள 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை, பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சை ஆகியன திருகோணமலை மாவட்டத்தில் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாகவே பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (1-202)

## பேராசிரியர் குணானந்தன் மறைவுக்கு யாழ். மருத்துவபீடத்தில் நேற்று அஞ்சலி

யாழ்ப்பாணம், ஓக.11

மறைந்த நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணரும் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரையாளருமான வைத்தியகலாநிதி விசாகசுந்தரம் குணானந்தனின் அஞ்சலி நிகழ்வுகள் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் மருத்துவபீட மாணவர் ஒன்றியத்தின் விரிவுரை மண்டபத்தில் நடைபெற்றது.

மருத்துவபீட மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.சிவமயூரதன் தலைமையில் நடைபெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் ம.சிவசூரிய, யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் கே.குமாரவடிவேல் உட்பட விரிவுரையாளர்கள் பலர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

இதில் மருத்துவபீடத்தைச் சேர்ந்த மாணவர்கள், விரிவுரையாளர்கள், வைத்தியர்கள் மற்றும் தாதிமார் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர். (1-13)

## மனித உரிமை நெருக்கடியை நோக்கி நகரும் இலங்கை நாடு

### சிறுவர் பாதுகாப்பு நிதியம் விடுக்கும் எச்சரிக்கை

கொழும்பு, ஓக.11

இலங்கையின் கிழக்குப் பகுதியில் மோதல்கள் தொடர்வதனால் மனித உரிமை சிக்கல் ஒன்றை நோக்கி நாடு விரைந்து கொண்டிருக்கிறது என்று சிறுவர் பாதுகாப்பு நிதியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மூதூரில் ஏற்பட்ட மோதல் காரணமாக 20 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் கந்தளாய்க்கு இடம்பெயர்ந்திருப்பதாகத்தெரிகின்றது. இந்த மக்களில் சுமார் 12ஆயிரம் குடும்பங்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் பாய்கள், விரிப்புகள், ரவல்கள், சுகாதாரப் பொதிகள், சமையல் பாத்திரங்கள் போன்றவற்றை வழங்கியுள்ளது.

மோதல்களிலிருந்து உயிர் தப்புவதற்காக மக்கள் இடம்பெயர்ந்துள்ளார்கள். றொக்கட்டுகள், ஆட்லறி தாக்குதல்களிலிருந்து தப்புவதற்காக மக்கள் தம் வீடுகளிலிருந்து வெளியேறி இருக்கிறார்கள் என்று சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் திட்ட இயக்குநர் றிச்சர்ட் மாவர் கூறியுள்ளார். இது ஒரு மனித உரிமை நெருக்கடி. சிறுவர்களைப் பெரிதும் பாதித்துள்ள விடயம் என்றார் அவர்.

சர்வதேச மனிதநேய நிறுவனம் ஒன்றின் பணியாளர்கள் 15 பேர் கொல்லப்பட்ட சம்பவத்தை அவர் கடுமையாகக் கண்டித்தார். மனிதநேய அமைப்புகள் இப்பகுதிகளில் பணிபுரிவது பெரும் ஆபத்தை எதிர்கொள்வதாகவிருக்கும் என்பதையே இந்தக் கொலைகள் வெளிப்படுத்தும் தெளிவான செய்தியாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப)

## தொண்டர் ஆசிரியர்களின் போராட்டம் 3ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது

### யாழ். வலயத்தின் செயற்பாடுகள் முடக்கம்

வலி.வடக்கு, ஓக.11

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் முன்னால் தொண்டர் ஆசிரியர்கள் மேற்கொண்டுவரும் மறியற்போராட்டம் காரணமாகக் கல்வி வலயத்தின் நடவடிக்கைகள் நேற்று மூன்றாவது நாளாகவும் தடைப்பட்டுள்ளன.

நேற்றுக்காலை அலுவலக ஊழியர்கள் சமுகம்கொடுத்தபோதிலும் தொண்டர் ஆசிரியர்கள் அலுவலகத்தின் முன் மறியற்போராட்டத்தில் ஈடுபட்டமையால் அலுவலகத்தினுள் செல்லமுடியாத நிலையில் திரும்பிச்சென்றுள்ளார்கள்.

இதேநேரம், தேசிய கல்விக் கல்லூரிகளில் இருந்து வெளியேறியவர்களுக்கான தேசிய பாடசாலைகளில் நியமனம் வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சை யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

ஒன்றும் உரிய பதில் தமக்குக் கிடைக்காவிட்டால் மறியற் போராட்டம் தொடரும் என தொண்டர் ஆசிரியர்கள் தெரிவித்துள்ளார்கள்.

நூற்றுக்கணக்கான தொண்டர் ஆசிரியர்கள் இம்மறியற்போராட்டத்தில் கலந்துகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (1-8[illegible])

## யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களின் பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஓக.11

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் 2000, 2001 ஆம் ஆண்டுகளில் பயிற்சியைப் பூர்த்திசெய்த ஆசிரியர்களுக்கான பட்டமளிப்புவிழா எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி ஆண்டுகளில் பயிற்சியைப் பூர்த்திசெய்த ஆசிரியர்கள் தங்கள் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளவும் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ளவும் உரிய ஒழுங்குகளை மேற்கொள்வதற்காக இணைப்பாளர் எம். பிரபாகரனுடன் தொடர்புகொள்ளுமாறு கல்லூரியின் பீடாதிபதி தி.கமலநாதன் கேட்டுள்ளார். (1-204)

### நாளை

ஆடி 27
சனிக்கிழமை
12.08.2006
திதி : திருதியை
முற்பகல் : 10.32
நட்சத்திரம் : பூரட்டாதி
பிற்பகல் : 02.24
சங்கடஹர சதுர்த்தி விரதம்
சுபநேரம் : 03.04 - 04.34
ராகுகாலம் : 09.04 - 10.34

## காலி பௌத்தகோயில் திறப்பு விழாவில் நோர்வேப் பிரதிநிதி

காலி பிரதேசத்தில் பௌத்த ஆலய திறப்பு விழாக்களிலும் கடன் உத்தரவாத நிதியம் ஒன்றின் அங்குரார்ப்பண நிகழ்விலும் நோர்வே சிறப்புத் தூதுவர் ஜோன் ஹான்சன் பௌவரும் இலங்கையிலுள்ள அந்நாட்டின் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

காலியில் ஆழிப்பேரலையின் போது சேதமடைந்து திருத்தப்பட்ட பௌத்த கோயில்களின் திறப்புவிழாவில் கடந்த 9ஆம் திகதி இவ்விரு பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

அதே தினத்தில் இடம்பெற்ற கடன் வழங்கும் நிதிய திறப்பு நிகழ்விலும் நோர்வே உதவியுடன் நடைபெறும் வீதி புனரமைப்பு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டார்கள். தென்பகுதியில் ஆழிப்பேரலையால் சேதமுற்ற 32 பௌத்த கோயில்களைப் புனரமைக்கவும் கிழக்கில் பௌத்த ஆலயங்கள், இந்துக்கோயில்கள், மசூதிகள் மற்றும் கிறிஸ்தவ தேவாலயங்களின் புனரமைப்புக்கென நோர்வே வெளியுறவு அமைச்சு 20 கோடி ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது.

காலியில் இரண்டு கோயில்கள் 9 ஆம் திகதி அதிகாரபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டன. தென்பகுதி மக்களுக்கெனக் கடன் வழங்கும் நிதியம் ஒன்றை நிறுவுவதற்கு 25 கோடி ரூபா வழங்கவும் நோர்வே ஒப்புக்கொண்டிருக்கிறது. (ப)

### உதயவாக்கு

மனம் மிகவும் தூய்மையாக இருக்கவேண்டும். தூய்மையான மனம்தான் முகத்தில் புத்துணர்ச்சியை உண்டாக்கும். - எமர்ஸன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## அக்ஷன் கொன்ர லா பாம் (அரச சார்பற்ற சர்வதேச) நிறுவனத்தில் பணிபுரிந்து அகாலமரணமானவர்கள்


A.ஜசீலன்
(உயர் கள உத்தியோகத்தர்)
09.03.1979


G.ஸ்ரீதரன்
(உயர் கள உத்தியோகத்தர்)
13.06.1970


I.முரளிதரன்
(சாரதி)
29.10.1972


Y.கோடீஸ்வரன்
(கள உத்தியோகத்தர்)
03.09.1975


S.கணேஸ்
(சாரதி)
20.07.1952



M.நர்மதன்
(உயர் கள உத்தியோகத்தர்)
16.11.1982


R.அருள்ராஜ்
(சிரேஷ்ட கள உத்தியோகத்தர்)
21.03.1982


அப்துல் ரதீப் முகமட் ஜபர்
(கட்டடத் தொழிலாளி)
13.03.1975


M.ரிஷிகேஷன்
(கள உத்தியோகத்தர்)
07.04.1983


T.பிரதீபன்
(சிரேஷ்ட கள உத்தியோகத்தர்)
01.09.1979


M.கேதீஸ்வரன்
(கள உத்தியோகத்தர்)
17.02.1970


S.P.ஆனந்தராஜா
(உதவித் திட்ட முகாமையாளர்)
09.06.1974


K.கோவர்த்தனி
(சுகாதார மேம்பாட்டாளர்)
27.09.1978


V.கோகிலவதனி
(சுகாதார மேம்பாட்டாளர்)
17.07.1977


S.ரொமிலா
(சுகாதார மேம்பாட்டாளர்)
05.04.1981


G.கவிதா
(சுகாதார மேம்பாட்டாளர்)
18.03.1979


S.கோணேஸ்வரன்
(சாரதி)
05.06.1982

கடந்த 05.08.2006 அன்று மூதூரில் ஏற்பட்ட அனர்த்தத்தில் அகாலமரணமான எம் சொந்தங்களுக்கு எமது ஆழ்ந்த கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம். எமது சக ஊழியர்களை இழந்து தவிக்கின்றோம்.

### Communiqué – 9 August 2006
### 17 members of Action Contre la Faim assassinated in Muttur: Action Contre la Faim has suspended its activities and requested for an inquiry.

It is with horror that Action Contre la Faim has learned the death of 17 of its staff in their Muttur base (Trincomalee district). The NGO has suspended its activities in the country for the time being. Theorganization is going to carry out an inquiry on this massacre which questions once again the presenceand action of non governmental organizations in conflict areas.

The town of Muttur had been the ground for heavy fighting between the Tamil Tigers and the Sri Lankan army for over a week. The Action Contre la Faim team of 17 members –which were bringing assistance to the displaced populations- could not be evacuated since none of the parties to the conflict had allowed access to the area by either sea or road. All communication had been cut with the team since the morning of Friday 4th August. Contradictory information was being spread and only onSunday 6th August did Action Contre la Faim get confirmation of the death of some members of the team.

After several attempts to reach Muttur from Friday the 4th August despite the ongoing fight an Action Contre la Faim team from Trincomalee finally managed to enter Muttur on Monday 7th August. They confirmed the massacre that occurred in the Action Contre la Faim Muttur compound : 15 of our colleagues were coldly executed by a shot in the head. they were found lined up face to the ground,while two others were shot trying to leave the office. They were wearing T-shirts that allowed them to be clearly identified as employees of Action Contre la Faim. Visibility of the Action Contre la Faim premises was obvious, with flags and signs stating the name of the organization.

The Action Contre la Faim Trincomalee team brought back the bodies of the victims to Trincomalee hospital late on the night of the 7th August. Post mortem examination was duly conducted the 8th. The bodies were finally handed over to their families for a proper funeral.

The victims are:

| | | | |
|---|---|---|---|
| Ms. K. Kovarthani, | aged 27 | Ms. G. Kavitha, | aged 27 |
| Ms. S.Romila, | aged 25 | Ms. V. Kokilavathani, | aged 29 |
| Mr. M Narmathan, | aged 23 | Mr. R Arulraj, | aged 24 |
| Mr. T. Pratheeban, | aged 26 | Mr. M. Rishikesan, | aged 22 |
| Mr. A. Jaseelan, | aged 27 | Mr. G. Sritharan, | aged 36 |
| Mr. S. Preemas Anandarajh, | aged 32 | Mr. Y. Kodeswaran, | aged 30 |
| Mr. M. Ketheeswaran, | aged 36 | Mr. S. Ganesu, | aged 54 |
| Mr. I. Muralitharan, | aged 33 | Mr. S. Koneswaran, | aged 24 |
| Mr. Abdul latheep Mohamed Jawfar, | | | aged 31 |

We sincerely sympathize with the suffering of the families and relatives of the victims and would liketo convey our deepest condolences.

Action Contre la Faim is deeply shocked and saddened. We demand full investigation on thecircumstances of this outrageous act and prosecution of its perpetrators.

Action Contre la Faim has worked in Sri Lanka since 1996. In the Muttur area Action Contre la Faimwas helping more than 1000 families to improve hygiene conditions and access to drinkable water. Thisemergency aid had been set up to assist persons displaced following the interethnic tensions and theresuming of the fighting last April and May. Other projects linked to the re-initiation of agricultural andother economic activities were being implemented to meet the needs of victims of the 2004 Tsunami and of the previous conflicts.

For the moment Action Contre la Faim has suspended all its activities in Sri Lanka (Jaffna, Batticaloa,Kalmunai, Trincomalee) and has declared one week of mourning.

In the meantime the organization is reassessing its presence in the country.

The President of Action Contre la Faim Denis Metzger has declared:
"It is the first time that Action Contre la Faim has been attacked in this way in 27 years of existence.This massacre illustrates once again the difficulties faced by humanitarian workers in conflict areas.The humanitarian values that Action Contre la Faim shows and stands for everywhere –neutrality, impartiality, free access to victims, independence- have been completely disregarded once again.Beyond horror, this act once again calls into question the position and state of humanitarian aid as upheld by NGOs like Action Contre la Faim."

### பத்திரிகைக் குறிப்பு - 2006 ஓகஸ்ட் 9
### அக்ஷன் கொன்ர லா பாம் ஐச் சேர்ந்த 17 ஊழியர்கள் மூதூரில் கொடூரமாகக் கொல்லப்பட்டுள்ளார்கள்:
### அக்ஷன் கொன்ர லா பாம் தனது நடவடிக்கைகளை இடைநிறுத்தியுள்ளது. நீதியான விசாரணை ஒன்று நடத்துமாறு கோரிக்கை விடுக்கின்றது

அக்ஷன் கொன்ர லா பாம் நிறுவனமாது தனது சக ஊழியர்கள் 17 பேர் அதன் மூதூர் உப அலுவலகத்தில் (திருகோணமலை மாவட்டம்) வைத்து கொடூரமாகக் கொல்லப்பட்டுள்ளார்கள் என்பதனை அதிர்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறது. இந்த அரச சார்பற்ற நிறுவனமானது இலங்கையில் இப்போதைக்கு தனது சகல நடவடிக்கைகளையும் இடைநிறுத்தியுள்ளது. யுத்தம்நிகழும் பிரதேசங்களில் அரசசார்பற்ற நிறுவனங்களின் இருக்கையையும் அவற்றின் செயற்பாடு களையும் மீண்டும் ஒருமுறை கேள்விக்கு உள்ளாக்கியிருக்கும் இந்தக் கொடுஞ் செயலைப்பற்றி இந் நிறுவனம் முழுமையான விசாரணையை மேற்கொள்ள உள்ளது.

ஒரு வார காலத்திற்கு மேலாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையில், முக்கியமாக மூதூர் நகரில் கடும் மோதல் நடந்து கொண்டிருந்தது. அந்த வேளையில் அக்ஷன் கொன்ர லா பாம் நிறுவனத்தின் 17 பேரைக் கொண்ட நிவாரணக் குழு ஒன்று இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப்பொருட்களுடன் அங்கு போய் சிக்கிக்கொண்டது. அந்தப்பிரதேசத்துக்குள் கடல் மார்க்க மாகவோ அல்லது தரை மார்க்கமாகவோ உட்செல்வதற்கு மோதலில் ஈடுபட்டிருந்த ஒரு சாரார் கூட அனுமதியளிக்காத நிலையில் அவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட முடியாத நிலை காணப்பட்டது. அந்தக் குழுவினருடானன சகல தொடர்புகளும் ஓகஸ்ட் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன் இல்லாமல் போய்விட்டது. அதன் பின்னர் ஒன்றுக்கு ஒன்று முரண்பாடான பல செய்திகள் வெளிவரத் தொடங்கியது. அக்ஷன் கொன்ர லா பாம் ஆனது ஓகஸ்ட் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையே தனது ஊழியர்கள் சிலர் கொல்லப்பட்டுள்ளார்கள் என்ற உறுதிப்படுத்தப்பட்ட தகவல் ஒன்றைப் பெற்றுக்கொண்டது.

ஓகஸ்ட் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் அக்ஷன் கொன்ர லா பாம் திருகோணமலை காரியாலயத்திலிருந்து ஒரு குழுவானது மூதூர் நகரத்தினுள் உட்செல்வதற்கு பல தடவைகள் முயற்சி செய்தது. கடுமையான மோதல் நடைபெற்றுக் கொண்டிருந்த காரணத்தினால் இறுதியாக ஓகஸ்ட் 7ஆம் திகதி திங்கட்கிழமையே அந்தக்குழுவினால் மூதூர் நகரத்தினுள் உட்செல்ல முடிந்தது. அவர்கள் மூதூர் அக்ஷன் கொன்ர லா பாம் காரியாலயவளவினுள் நிகழ்ந்திருந்த கொடூர சம்பவத்தை உறுதிப்படுத்தினர். அதன்படி: எமது சக ஊழியர்கள் 15 பேர் தலையில் சுட்டுக்கொல்லப்பட்டு, முகம் குப்புற வரிசையாக அடுக்கப்பட்டிருந்தார்கள். இந்தக்காட்சி இரத்தத்தை உறைய வைக்கும் படியாக இருந்தது. அதே வேளை ஏனைய இரு ஊழியர்கள் காரியாலயத்தை விட்டு தப்பி ஓட முயற்சித்த வேளை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள்.. அவர்கள் அக்ஷன் கொன்ர லா பாம் 'ரீ' ஷேர்ட் அணிந்திருந்தார்கள். அது அவர்கள் அக்ஷன் கொன்ர லா பாம் ஊழியர்கள் என்பதனை தெளிவாக அடையாளம் காட்ட போதுமானதாக இருந்தது. மேலும், அக்ஷன் கொன்ர லா பாம் காரியாலயம் ஆனது தெளிவாக கொடிகளாலும் ஸ்டிக்கர்களாலும் அந்த நிறுவனத்தின் பெயரை அடையாளம் காட்டியிருந்தது.

அக்ஷன் கொன்ர லா பாம் திருகோணமலை குழுவினரால் இறந்தவர்களின் உடல்கள ஆகஸ்ட் 7ஆம் திகதி திங்கட்கிழமை பின்னிரவளவில் திருகோணமலை வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டது. 8ஆம் திகதி பிரேத பரிசோதனை முறைப்படி நடத்தப்பட்டது. பின்னர் உடல்கள் முறைப்படியான இறுதிக் கிரியைகளுக்காக குடும்பத்த வர்களிடம் கையளிக்கப்பட்டது. இந்தக் கொடூரச்சம்பவத்தில் பலியானவர்கள் வருமாறு:-

| | |
|---|---|
| செல்வி. கே. கோவர்த்தனி | 27 வயது |
| செல்வி. ஜீ. கவிதா | 27 வயது |
| செல்வி. எஸ். றோமிலா | 25 வயது |
| செல்வி. வி. கோகிலவதனி | 29 வயது |
| திரு. எம். நர்மதன் | 23 வயது |
| திரு. ஆர். அருள்ராஜ் | 24 வயது |
| திரு. ரீ. பிரதீபன் | 26 வயது |
| திரு. எம். ரிஷிகேஷன் | 22 வயது |
| திரு. ஏ. ஜெயசீலன் | 27 வயது |
| திரு. ஜீ சிறீதரன் | 36 வயது |
| திரு. எஸ் பிறீமாஸ் ஆனந்தராஜா | 32 வயது |
| திரு. வை. கோடீஸ்வரன் | 30 வயது |
| திரு. எம். கேதீஸ்வரன் | 36 வயது |
| திரு. எஸ்.கணேசு | 54 வயது |
| திரு. ஐ. முரளிதரன் | 33 வயது |
| திரு. எஸ்.கோணேஸ்வரன | 24 வயது |
| திரு. அப்துல் லத்தீப் மொகமட் ஜௌபர் | 31 வயது |

(1 ஆம் பக்கம் பார்க்க)

### ඇක්ෂන් කොන්ට්‍රෙ ලා ෆා ආයතනයේ සාමාජිකයන් 17 දෙනෙකු මුතූර්හිදී ඝාතනයට ලක්වෙයි

ඇක්ෂන් කොන්ට්‍රෙ ලා ෆා ආයතනය ස්වකීය වැඩ කටයුතු තාවකාලිකව අත්හිටුවා ඇති අතර මෙම ඝාතනය සම්බන්ධව නිසි පරීක්ෂණයක් පවත්වන ලෙස ඉල්ලා සිටී.

ඇක්ෂන් කොන්ට්‍රෙ ලා ෆා ආයතනය තම සාමාජිකයන් 17 දෙනෙකු මුතූර්හිදී ඝාතනයට ලක්වීම දැන ගැනීමෙන් මහත් සන්ත්‍රාසයටත් සංවේගයටත් පත්විය. මෙම සමූහ මිනිස් ඝාතනය සම්බන්ධව පරීක්ෂණයක් කිරීමට ඇක්ෂන් කොන්ට්‍රෙ ලා ෆා ආයතනය කටයුතු කරනු ඇත. මෙවැනි ගැටුම් පවතින පෙදෙස්වල තවදුරටත් කටයුතු කිරීමට රාජ්‍ය නොවන සංවිධානවලට හැකියාවක් තිබේද යන්න ප්‍රශ්නයකි.

ශ්‍රී ලංකාවේ ආරක්ෂක අංශ හා කොටි සංවිධානය අතර පැවති ගැටුම් වලින් අවතැන්වූ ජනතාවට සහන සැපයීමට එහි ගිය ACF ආයතනයේ සාමාජිකයන් 17 දෙනෙකු ගැටුම් දරුණු වීම නිසා ඉවත් කරගැනීමට නොහැකි වූයේ ගැටුමට සම්බන්ධ පාර්ශව කරුවන් එම ප්‍රදේශයට මුහුදින් හෝ ගොඩබිමින් යාමට අවසර නොදීම නිසාය. අගෝස්තු මස 4 වන දින සිට එම කණ්ඩායම සමග පණිවුඩ හුවමාරුව නතර විය. විවිධ තොරතුරු ලැබුණද ඇක්ෂන් කොන්ට්‍රෙ ලා ෆා ආයතනයට තම සාමාජිකයන්ගෙ මරණය සම්බන්ධව ස්ථිරවම දැන ගැනීමට ලැබුණේ අගෝස්තු මස 6 වන ඉරිදාය.

මුතූර් නගරයට යාමට ඇක්ෂන් කොන්ට්‍රෙ ලා ෆා ආයතනයේ ත්‍රිකුණාමලයේ සාමාජිකයන් අගෝස්තු මස 4 වන දින සිට කිහිප වතාවක් උත්සාහ කලද ඔවුන්ට එහි යා හැකි වූයේ

අගෝස්තු මස 7 වන දිනය. ඔවුන් ඇක්ෂන් කොන්ට්‍රෙලා ෆා ආයතනයේ මුතූර් පරිශ්‍රයේ සිදුකරන ලද දරුණු ඝාතනය සනාථ කරන ලදි. අප සාමාජිකයන් 15 දෙනකු හිසට වෙඩි තබා කෲර ලෙස ඝාතනය කර මුහුණ බිමට හරවා පේලියට තබා තිබුණි. තවත් දෙදෙනෙක් කාර්යාලයෙන් පිටතට යාමට උත්සාහ කිරීමේදී වෙඩි තබා ඇති අයුරු දක්නට ලැබිණි. ඔවුන් ඇඳ සිටි ටී ෂර්ට් නිසා පැහැදිලිවම අප ආයතනයේ සේවකයන් අඳුනා ගත හැකිය. එහි කොඩි සහ නාමපුවරු වලින් ඇක්ෂන් කොන්ට්‍රෙ ලා ෆා ආයතනයේ පරිශ්‍රයක් බවට ඉතා පැහැදිලි දෘශ්‍යතාවයක් විය.

ඔවුන්ගේ මල සිරුරු ඇක්ෂන් කොන්ට්‍රෙ ලා ෆා ආයතනයේ ත්‍රිකුණාමල සාමාජිකයන් විසින් අගෝස්තු මස 07 වනදා රාත්‍රියේ ත්‍රිකුණාමල ආරෝග්‍යශාලාවට ගෙන එන ලදි. පශ්චාත් මරණ පරීක්ෂණය පැවැත් වීමෙන් පසු මල සිරුරු ඔවුන්ගේ ඥාතීන් වෙත අවමගුල් කටයුතු සඳහා බාර දෙන ලදි.

මිය ගිය සාමාජිකයන්ගේ නම්.

| | |
|---|---|
| කේ. කෝවර්තනී මෙණෙවිය | - වයස 27 |
| ජී. කවිතා මෙණෙවිය | - වයස 27 |
| එස්. රොමිලා මෙණෙවිය | - වයස 25 |
| වී. කෝකිලවතානි මෙණෙවිය | - වයස 29 |
| එම්. නර්මදන් මහතා | - වයස 23 |
| ආර්. අරුල්රාජ් මහතා | - වයස 24 |
| ටී. ප්‍රතිබන් මහතා | - වයස 26 |
| එම්. රිෂිකේසන් මහතා | - වයස 22 |
| ඒ. ජසීලන් මහතා | - වයස 27 |
| ජී. ශ්‍රීදරන් මහතා | - වයස 36 |
| එස්. ප්‍රීමාස් අනන්දරාජා මහතා | - වයස 32 |
| වයි. කෝඩේස්වරන් මහතා | - වයස 30 |
| එම්. කේතීස්වරන් මහතා | - වයස 36 |
| එස්. ගනේසු මහතා | - වයස 54 |
| අයි. මුරලිදරන් මහතා | - වයස 33 |
| එස්. කෝනේස්වරන් මහතා | - වයස 24 |
| අබ්දුල් ලතීෆ් මොහමඩ් ජවුෆර් මහතා | - වයස 31 |

මෙම ඝාතනයෙන් වේදනාවට පත්වූ පවුල්වල සියලුම සාමාජිකයන්ට ඇක්ෂන් කොන්ට්‍රෙ ලා ෆා ආයතනය තම සංවේගය පළ කරයි.

ඇක්ෂන් කොන්ට්‍රෙ ලා ෆා ආයතනය අතිශයින් කම්පනයට

හා සංවේගයට පත්ව ඇති අතර මෙම සාහසික ක්‍රියාව ගැන සම්පූර්ණ පරීක්ෂණයක් පවත්වා අපරාධ කරුවන්ට නිසි දඬුවම් දෙන ලෙස ඉල්ලා සිටී.

ඇක්ෂන් කොන්ට්‍රෙ ලා ෆා ආයතනය 1996 සිට ශ්‍රී ලංකාවේ වැඩ කටයුතු පවත්වාගෙන යයි. ඇක්ෂන් කොන්ට්‍රෙ ලා ෆා ආයතනය මුතූර් හි පවුල් 1000 කට පමණ සනීපාරක්ෂාව හා බීමට ජලය ලබාදීමට කටයුතු කරයි. මෙම හදිසි ආධාර සැකසුම් කර තිබෙන්නේ ජනවාර්ගික අර්බුධය හා පසුගිය අප්‍රේල් හා මැයි මාසවල ඇති වූ ගැටුම් වලින් අවතැන් වූ ජනතාවට සහන සැලසීමටය. 2004 සුනාමියෙන් හා පසුගිය කාලයේ හටගත් ගැටුම් වලින් පීඩාවිඳින ජනතාවට කෘෂිකාර්මික හා ජීවනෝපාය නැවත පටන් ගැනීමේ ව්‍යාපෘති ඇක්ෂන් කොන්ට්‍රෙ ලා ෆා ආයතනය විසින් ක්‍රියාත්මක කරනු ලැබේ.

ඇක්ෂන් කොන්ට්‍රෙ ලා ෆා ආයතනය දැනට තම සියලුම වැඩසටහන් නවතා ( යාපනය, මඩකලපුව, කල්මුනේ හා ත්‍රිකුණාමලය ) සතියක ශෝක කාලයක් ප්‍රකාශ කර ඇත.

මෙම ආයතනය ශ්‍රී ලංකාව තුළ තව දුරටත් ක්‍රියාකිරීම ගැන සලකා බලමින් සිටී.

ඇක්ෂන් කොන්ට්‍රෙ ලා ෆා ආයතනයේ සභාපති ඩෙනිස් මෙට්ස්ගර් ගේ ප්‍රකාශය

ඇක්ෂන් කොන්ට්‍රෙ ලා ෆා ආයතනයේ අවුරුදු 27 ක ඉතිහාසයේ මෙවැනි පහර දීමකට ලක්වූ පළමු අවස්ථාව මෙය වේ. මෙවැනි ගැටුම් පවත්නා ස්ථානවල මානවවාදී ක්‍රියාකාරී සංවිධානවල සාමාජිකයන්ට මුහුණ දීමට සිදුව ඇති අපහසුතා මෙම සමූහ ඝාතනයෙන් පෙන්නුම් කරයි. ඇක්ෂන් කොන්ට්‍රෙ ලා ෆා ආයතනය පෙන්නුම් කරන හා අවධාරණය කරන සාරධර්ම වන අපක්ෂපාතිත්වය , අපක්ෂග්‍රාහිත්වය හා පීඩාවට පත්වූවන් වෙනුවෙන් නිදහස්ව කටයුතු කිරීමේ අයිතිය හා නිදහස නැවතත් නොසලකා හැර ඇත.

මෙම කෲර ක්‍රියාවලිය ඇක්ෂන් කොන්ට්‍රෙ ලා ෆා වැනි රාජ්‍ය නොවන සංවිධාන මෙම රටට සපයන මානුෂික ආධාර වලට අදාල ප්‍රතිපත්තීන් ප්‍රශ්නයට නංවයි.

ACTION CONTRE LA FAIM
ACF INTERNATIONAL NETWORK

# A.C.F. பணியாளர்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மணற்காட்டில் நிரந்தர வீடு அமைக்கும் திட்டம்: நிதி கிடைக்காததால் அரைகுறை நிலையில்

கரவெட்டி,ஓக.11

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மணற்காடு மக்களுக்கு அரசசார்பற்ற நிறுவனங்களால் அமைத்துக் கொடுக்கப்படும் என உறுதியளிக்கப்பட்ட வீட்டுத் திட்டங்கள் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளன. இதனால் இப்பகுதி மக்கள் பெரும் சிரமம் அடைகின்றனர்.

ஆழிப்பேரலை இடம்பெற்று 21 மாதங்கள் கடந்துவிட்டன. பாதிக்கப்பட்ட மணற்காட்டுப் பகுதி மக்களுக்கு இதுவரை முழுமையான வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவில்லை. இதனால் இப்பகுதி மக்கள் தொடர்ந்தும் தற்காலிக குடிசைகளிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

பேரலையால் இப்பிரதேசத்தில் 75 வீடுகள் முழுமையாகவும் 111 வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்திருந்தன.

இவற்றை மீண்டும் அமைக்க ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு லட்சத்து 90 ஆயிரம் ரூபாவை உலக வங்கி வழங்கி இருந்தது.

இதனைக்கொண்டு 45 வீடுகள் கூரை மட்டம் வரையும் ஏனையவை அரைகுறையாகவும் அமைக்கப்பட்டுள்ளன.

மிகுதியை கட்டி முடிப்பதற்கான நிதி இதுவரை கிடைக்கவில்லை எனவும் -

நிதி தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் கேட்கும்போது நிதி வந்து சேர்ந்ததும் தருவோம் எனக் கூறப்படுவதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

கூரை வேலைகள் மேற்கொள்ளப்படாதால் கடும் வெயில்,மழைபோன்ற காரணிகளால் கட்டடங்கள் வெடித்துச் சேதமடைகின்றன.

கடந்த வருடம் மழை காலத்தில் இந்தத் தற்காலிகக் குடியிருப்புகள் வெள்ளத்தில் மூழ்கின. மழைகாலம் இன்னும் ஓரிரு மாதங்களில் ஆரம்பித்துவிடும்

இதனால் மீண்டும் தற்காலிகக் குடியிருப்புகளில் இருந்து இடம்பெயர்ந்து பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் தஞ்சம் அடைய வேண்டி வரலாம்.

இவற்றையெல்லாம் கருத்தில்கொள்ளாது வீட்டுத் திட்டப் பணிகளை இடைநடுவில் விடப்பட்டுள்ளமை கவலை தருகின்றது எனவும் -

வீட்டுத்திட்டத்தை பூர்த்தி செய்து தரவேண்டும் எனவும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (204-70)



யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகத்தின் ஏற்பாட்டில் பேராசிரியர் கலாநிதி சபா ஜெயராசாவுக்கு கல்விப்புலரி பட்டம் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் கல்வியியற் கல்லூரியின் மேலதிக பீடாதி பதி எஸ்.யோகநாதன் வாழ்த்துரை வழங்குவதை முதலாவது படத்திலும் பேராசிரியர் சபா ஜெயராசாவுக்கு பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படுவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

# 'கிராம உதயம்' திட்டத்தின் கீழ் புங்குடுதீவில் அபிவிருத்திப் பணி

நவாலி,ஓக.11

'கிராம உதயம்' திட்டத்தின் கீழ் புங்குடுதீவுப் பிரதேசத்தில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இவ்வாறு புங்குடுதீவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது-

புங்குடுதீவுப் பிரதேசத்தில் 'கிராம உதயம் திட்டத்தின் கீழ் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்காக தேசநிர்மாண அபிவிருத்தி அமைச்சு தேவையான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

முதற்கட்டமாக ஊரிக்காடு வீதி திருத்தப் பணிகள் இடம்பெறவுள்ளன. இதற்கென 26 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஏனைய அபிவிருத்திப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் - என்றார். (204-111)

**அதி உயர் பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட**

# வலி.வடக்கு மீள்குடியமர்வு: விசாரணைகள் நேற்று ஆரம்பம்

வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் குறிப்பிட்ட 36 கிராம அலுவலர் பிரிவுகளில் மீளக்குடியமர விரும்பும் குடும்பங்களை இனங்காண்பதற்கான நேர்முக விசாரணை நேற்று வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த குடும்பங்கள் தற்போது தற்காலிகமாக வதியும் பிரதேச செயலர் பிரிவில் சம்பந்தப்பட்ட பிரதேச செயலர்களால் நேர்முக விசாரணை நடத்தப்படும்.

இளவாலை வடக்கு (ஜே/221), இளவாலை, வடமேற்கு (ஜே/222), வித்தகபுரம் (ஜே/223), பன்னாலை (ஜே/224), கொல்லங்கலட்டி(ஜே/225), நகுலேஸ்வரம் (ஜே/226), தெல்லிப்பழை கிழக்கு (ஜே/227), தெல்லிப்பழை (ஜே/228), துர்க்காபுரம் (ஜே/229), தந்தை செல்வாபுரம் (ஜே/230).

மாவிட்டபுரம் (ஜே/231), மாவிட்டபுரம் தெற்கு (ஜே/232), காங்கேசன்துறை மேற்கு (ஜே/233), காங்கேசன்துறை மத்தி (ஜே/234), காங்கேசன்துறை தெற்கு (ஜே/235), பளை வீமன்காமம் வடக்கு (ஜே/236), பளை வீமன்காமம் தெற்கு (ஜே/237), கட்டுவன் (ஜே/238), கட்டுவன் தெற்கு (ஜே/239), தென்மயிலை (ஜே/240).

வறுத்தலை விளான் (ஜே/241), குரும்பசிட்டி (ஜே/242), குரும்பசிட்டி கிழக்கு (ஜே/243), வசாவிளான் கிழக்கு (ஜே/244), வசாவிளான் மேற்கு (ஜே/245), மயிலிட்டி வடக்கு (ஜே/246), தையிட்டி கிழக்கு (ஜே/247), மயிலிட்டித்துறை தெற்கு (ஜே/248), தையிட்டி வடக்கு (ஜே/249), தையிட்டி தெற்கு (ஜே/250).

மயிலிட்டித்துறை வடக்கு (ஜே/251), பலாலி தெற்கு (ஜே/252), பலாலி கிழக்கு (ஜே/253), பலாலி வடக்கு (ஜே/254), பலாலி வடமேற்கு (ஜே/255), பலாலி மேற்கு (ஜே/256) ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் மீளக்குடியமர விரும்புபவர்களுக்கே அவர்களின் தகுதியைத் தீர்மானிப்பதற்கான நேர்முக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் பிரகாரம் உச்சநீதிமன்றத்தின் நிபந்தனைகளுக்கமைவாக இவ்விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களின் தலைவர் அல்லது அவரால் அனுமதிக்கப்பட்ட பிரதிநிதி ஆள்பதிவு அடையாள அட்டை, காணி உரிமையை நிரூபிக்கும் ஆவணம், குடும்பப் பங்கீட்டு அட்டை / மின்கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு/ சோலை வரி செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு/ வேறு பிற (இருப்பின்), வாக்காளர் அட்டை (இருப்பின்), வாக்காளர் இடாப்பின் பிரிப்பிதழ் (இருப்பின்), காணி உரிமையையும் வசிப்பிடத்தையும் உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்கள் என்பவற்றையோ அல்லது மேலே சொல்லப்பட்ட ஆவணங்கள் இல்லாதவிடத்து உரிமையை உறுதிப்படுத்தும் சத்தியக்கடதாசியையோ நேர்முக விசாரணைக்கு பிரதேச செயலரால் அறிவிக்கப்படும் திகதிகளில் கொண்டு [illegible] பர் கே.க[illegible] (1-202)

# வலிகாமம் வடக்கில் வாக்காளர் பதிவு

யாழ்ப்பாணம்,ஓக.11

குரும்பசிட்டி, கீரிமலை, கட்டுவன், மயிலிட்டிக் கிராமங்களுக்கான வாக்காளர் பதிவு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை வயாவிளான் மத்திய மகாவித்தியாலத்தில் மேற்கொள்ளப்படும் எனக் கிராம அலுவலர் எஸ்.சிவலிங்கம் தெரிவித்தார். (1)

# புலமைப்பரிசில் நிதியம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்,ஓக.11

புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தின் ஏற்பாட்டில் இளவாலையூர் வேலுப்பிள்ளை கதிரேசு ஞாபகார்த்தமாக அவரது பிள்ளைகளால் புலமைப்பரிசில் நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியம் அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொழும்பு கதிரேசன் வீதியில் உள்ள வீரமைலன் மண்டபத்தில் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத் தலைவர் ஆர்.எம்.நாகலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

ஆரம்பிக்கப்பட்ட புலமைப்பரிசில் நிதியத்தினூடாகக் கல்வி கற்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (1-204)




# உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கு அதிகரித்த கொடுப்பனவு கிட்டவில்லை

தென்மராட்சி,ஓக.11

கடந்த 1997 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஓய்வுபெற்ற உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கு அதிகரித்த ஓய்வூதியம் இதுவரை கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

1997இற்கு முன்னர் ஓய்வுபெற்றவர்களை 1997 ஆம் ஆண்டு ஓய்வூதிய படிநிலையில் வைக்கப்பட்டு ஓய்வூதியம் கணிக்கப்பட்டு அதிகரித்த ஓய்வூதியம் இவ்வருடம் ஜனவரி தொடக்கம் வழங்கப்பட வேண்டும் என ஓய்வூதிய திணைக்கள பணிப்பாளரினால் கடந்த மார்ச் மாதம் சுற்று நிருபம் சகல ஓய்வூதியக் கிளைகளுக்கும் அனுப்பப்பட்டது.

கொழும்பு உள்ளூராட்சி ஓய்வூதியப் பிரிவில் ஓய்வூதியக் கொடுப்பனவு பெறுவோருக்கு இதுவரை இக்கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

யாழ். மாவட்ட உள்ளூராட்சி ஊழியர் தவிர்ந்த ஏனையோருக்கும் ஓய்வூதியம் வழங்கும் கிளைகள் கடந்த மே மாதம் இக்கொடுப்பனவை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதிகரித்த ஓய்வூதியக் கொடுப்பனவின் 50 வீதம் கடந்த ஜனவரி தொடக்கமும் மிகுதி 50 வீதம் 2007 ஜனவரி தொடக்கமும் வழங்கவேண்டுமென ஓய்வூதியசுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும் இது வரை தமக்கு இவ்வருடம் வழங்க வேண்டிய அதிகரித்த கொடுப்பனவு வழங்கப்படவில்லை என ஓய்வூதியர்கள் கவலையுடன் தெரிவித்தனர். (1-117)

# யாழ்.வலய தமிழ்த்தினப் போட்டிகள் ஞாயிறும் திங்களும் நடைபெறும்

அச்சுவேலி,ஓக.11

யாழ்.கல்வி வலயத்தில் உள்ள நல்லூர், கோப்பாய், யாழ்ப்பாணம் ஆகிய கோட்டங்களின் கோட்டமட்ட தமிழ்த்தின எழுத்தாக்கப் போட்டிகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையும் திங்கட்கிழமையும் நடைபெறும்.

கோப்பாய் கோட்டமட்டப் பாடசாலைகளுக்கான போட்டிகள் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் -

நல்லூர் கோட்ட மட்டத்திலான போட்டிகள் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் -

யாழ்.கோட்ட மட்டத்திலான போட்டிகள் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையிலும் - நடைபெறவுள்ளன.

ஞாயிற்றுக்கிழமை 1,2,3,4, ஆம் பிரிவுகளுக்கான எழுத்தாக்கப் போட்டிகளும், திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு 5ஆம் பிரிவு மாணவர்களுக்கான போட்டிகளும் நடைபெறும் என யாழ்.கல்வி வலய தமிழ் மொழிப்பாட உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன் தெரிவித்துள்ளார். (1-111)

# மானிப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு ஆனைக்கோட்டையில் நிரந்தரக் கட்டடம்

## உயர்மட்டக் குழு நேரில் ஆராய்வு

நவாலி,ஓக.11

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு ஆனைக்கோட்டையில் நிரந்தரக் கட்டடம் அமைக்கப்படவுள்ள இடத்தை அதிகாரிகள் குழு ஒன்று பார்வையிட்டுள்ளது.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாகத் தனியார் கட்டடமொன்றில் இயங்கிவரும் இந்த வைத்தியசாலையை சொந்தக் காணியில் அமைப்பதற்கென மக்களின் நிதி உதவியுடன் ஆனைக்கோட்டையில் 18 பரப்புக் காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டு சுகாதாரத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வைத்தியசாலைக் கட்டடத்தைக் கட்டுவதற்கு கேள்விகள் கோரப்பட்டு ஒப்பந்தக்காரரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கட்டடத் திணைக்களப் பிரதம பொறியியலாளர் எந்திரி க.குகநேசன், யாழ்.சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் கேதீஸ்வரன், மானிப்பாய் அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் பேரானந்தம் மற்றும் அதிகாரிகள் கொண்ட குழு கட்டடம் அமையவுள்ள இடங்களை பார்வையிட்டுள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் வைபவம் இம்மாத இறுதியில் நடைபெறலாமென தெரிவிக்கப்படுகிறது. (1-100)

# ஆவரங்காலில் கோஷ்டி மோதல்

அச்சுவேலி,ஓக.11

ஆவரங்கால் சர்வோதயா வீதி இளைஞர் மத்தியில் கோஷ்டி மோதலில் சிலர் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றனர்.

கத்தி, பொல்லு, வாள் முதலிய ஆயுதங்களைப் பயன்படுத்திக் குழுக்களாக மாறி மாறித் தாக்குதல் மேற்கொண்டு வருவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆவரங்கால் மேற்கு சர்வோதயா வீதியில் வசிக்கும் இளைஞர்கள் குழுநிலையில் மோதலில் ஈடுபட்டுவருவதால் வீடுகளின் கூரைகள், கண்ணாடி யன்னல்கள் சேதமடைவதாகவும்-

கோஷ்டி மோதலிடையே அகப்படும் சாதாரண பொதுமக்களும் பாதிப்புக்களுக்கு உள்ளாவதாகவும் - கவலை தெரிவிக்கப்படுகின்றது.

கோஷ்டி மோதலில் ஈடுபட்டு வரும் குழுக்களிடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கு கிராம சேவையாளர் மற்றும் ஊர்பொதுமக்கள் மேற்கொண்ட முயற்சிகளும் பலனளிக்கவில்லை எனக் கூறப்படுகின்றது. (1-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் அல்ல இராணுவமே கொன்றது...! கதறும் உறவினர்கள் இப்படிக் கூறுகின்றனர்

கொழும்பு, ஓகஸ்ட் 11

உலகளாவிய ரீதியில் கடும் கண்டனத்துக்குள்ளாகி இருக்கும் மூதூர் தொண்டு நிறுவனப் பணியாளர்களின் படுகொலைகள் தொடர்பாக முழு அளவிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்று அரசு அறிவித்திருக்கிறது.

இந்தப் படுகொலைகள் தொடர்பில் பல்வேறு கோணங்களில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்று பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்திருக்கிறார்.

'பட்டினிக்கு எதிரான நடவடிக்கை' என்ற பிரெஞ்சு தன்னார்வத் தொண்டு நிறுவனத்தில் ஆழிப்பேரலை நிவாரணப் பணிகளில் ஈடுபட்ட தமிழ் தன்னார்வத் தொண்டர்கள் 17 பேர் மூதூர் நகரில் தங்களது அலுவலகத்தினுள் வைத்தே சுட்டுக்கொல்லப்பட்டனர். இவர்களது பிரேத பரிசோதனை மற்றும் சடலங்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் திருகோணமலை வைத்தியசாலையில் கடந்த மூன்று தினங்களாக இடம்பெற்றன. இதனால் மருத்துவமனை பெரும் சோகமயமாக காட்சியளித்தது.

தங்களை யார் என்று அடையாளப்படுத்தும் 'ரீ - சேட்'களை அணிந்த நிலையில் 4 பெண்கள் உட்பட 17 பணியாளர்களினதும் சடலங்கள் திருகோணமலை மருத்துவமனைக்கு அள்ளிவரப்பட்டன. அங்கு பிரேத அறையில் தங்கள் பிள்ளைகளை அடையாளம் காண்பதற்காகத் திரண்ட உறவினர்களின் கதறல் எல்லாத் திசைகளிலும் எதிரொலித்தது.

மருத்துவமனை பிரேத அறையில் இருந்து சடலங்கள் உறவினர்களால் அடையாளம் காட்டி ஒவ்வொன்றாக எடுத்துச் செல்லப்பட்டு இறுதிச் சடங்குகள் நடத்தப்படுகின்றன.

பல சடலங்களில் பல்வேறு இடங்களிலும் - குறிப்பாக தலைப் பகுதியில் - நெருக்கமாக துப்பாக்கியை வைத்து - சுட்டதற்கான அடையாளங்கள் காணப்பட்டன என்றும் பெரும்பாலும் அனைவரும் கடந்த 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொல்லப்பட்டிருக்க வேண்டும் என்றும் மருத்துவப் பரி சோதனை அறிக்கைகள் தெரிவித்தன.

'இது இராணுவத்தின் செயல்' என்று கொல்லப்பட்டோரின் உறவினர்கள் கதறி அழுதவாறு தெரிவித்திருக்கின்றனர்.

'நாங்கள் சனிக்கிழமை (05 - 08 - 2006) வீடு திரும்பி விடுவோம்' என்று பணியாளர்கள் கடைசியாக தொலைபேசியில் உறவினர்கள் தொடர்புகொண்டு கேட்டபோது கூறியிருக்கின்றனர்.

'விடுதலைப் புலிகள் எனது மகனைக் கொன்றிருப்பார்கள் என்று நான் நம்பவில்லை' என்று கொலையுண்ட பணியாளர் ஒருவரின் தந்தையான றிச்சாட் அருள்ராஜ் 'ரொய்ட்டர்' செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

தங்களை அங்கிருந்து வெளியேறுமாறு புலிகள் கேட்டுக்கொண்டனர் என்றும் தாங்களும் (புலிகள்) நகரை விட்டுச் செல்வதால் பின்னர் அவர்களைத் தங்களால் பாதுகாக்க முடியாது என்று புலிகள் அப்போது கூறினர் என்றும் பணியாளர்கள் கடைசியாகத் தொலைபேசியில் தொடர்புகொண்டு உறவினர்களிடம் கூறியிருக்கின்றனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

'இனி நாங்கள் வாழ்வதில் பயனே இல்லை. அவர்கள் (பிள்ளைகள்) இறப்பதற்கு முன்பே நாங்களும் செத்துப்போயிருக்கலாம்' - என்று தனது மகனைப் பறிகொடுத்த தந்தையான பொன்னுத்துரை யோகராஜா (வயது - 62) என்பவர் மிகவும் உருக்கமாக 'ரொய்ட்ட'ருக்குத் தெரிவித்தார்.

இவரது மற்றொரு புதல்வர் திருகோணமலையில் கடந்த ஜனவரியில் படையினரால் தலையில் சுடப்பட்டு படுகொலை செய்யப்பட்ட மாணவர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் படுகொலைகளில் தமக்கு எந்த வித சம்பந்தமும் கிடையாது என்று அரசு கூறியிருக்கிறது. முழுவதும் தமிழர்கள் அடங்கிய இந்தப் பணியாளர் குழுவின் படுகொலைக்கு யார் பொறுப்பு என்பது தங்களுக்கும் தெரியவில்லை என்கிறது பாரிஸை தலைமையகமாகக் கொண்ட பட்டினிக்கு எதிரான அமைப்பு. Action Faim எனப்படும். (ஐ)

## வடக்கு - கிழக்குக்கு செல்லாதீர்கள்! பிரிட்டிஷ் பிரஜைகளுக்கு ஆலோசனை

லண்டன், ஓக. 11

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பிரதேசங் களுக்குச் செல்லவேண்டாம் என்று பிரிட்டன் அதன் பிரஜைகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மோதல்கள் நடைபெறும் வடக்கு - கிழக்குப் பகுதிக்குச் செல்லவேண்டாம் என்று அதன் பிரஜைகளுக்கு ஆலோசனை தெரிவித்திருக்கும் பிரிட்டிஷ் வெளிவிவகார மற்றும் கொமன் வெல்த் அலுவலகம் யாழ். குடாநாடு, புத்தளம் ஊடாகச் செல்லும் ஏ - 12 வீதி, திருகோணமலை, மட்டக்களப்பு, கரையோரப் பிரதேசமான அம்பாறை மற்றும் பொத்துவில் ஆகிய பகுதிகளைச் சுட்டிக்காட்டி இந்தப் பிரதேசங்களுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டிருக்கிறது.

ஏற்கனவே இந்தப் பகுதிகளில் தங்கியிருப்பவர்கள் அங்கிருந்து வெளியேறுவது பற்றிப் பரிசீலிக்கவேண்டும் என்றும் வெளிவிவகார அலுவலகம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் வசிக்கும் பிரிட்டிஷ் பிரஜைகளும், தொழில் நிமிட்டம் தங்கியிருப்போரும் சுற்றுலா செல்வோரும் பிரிட்டிஷ் தூதரகத்தில் தங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்றும் வெளிவிவகார அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

## இராமேஸ்வரம் ஈழ அகதிகள் பகல் நேரத்திலும் கடற்பயணம்

சென்னை, ஓக.11

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளிலிருந்து தமிழகத்துக்கு அகதிகளாக வருவோர் இப்போது பகல்நேரத்திலும் கடற் பயணங்களை மேற்கொண்டு தமிழகத்துக்கு வந்துசேர்கின்றனர்.

அகதிகளை ஏற்றிவரும் படகு உரிமையாளர்கள் தற்சமயம் பகலிலும் தங்கள் சேவைகளை ஆரம்பித்துள்ளனர் என்று 'இந்து' செய்தி தெரிவிக்கிறது.

பெரும்பாலும் இரவுநேரக் கடற்பயணங்களை மேற்கொள்ளும் அகதிகள் கடந்த சில தினங்களாக பகல் நேரப் பயணங்களை ஆரம்பித்திருக்கின்றனர். 15 அகதிகளை ஏற்றிக் கொண்டு படகு ஒன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் தமிழகக் கரையை வந்தடைந்தது.

தலைமன்னார் கரையில் இருந்து புறப்பட்டு பகல் நேரம் சுமார் இரண்டுமணிநேரம் பயணம் மேற்கொண்டு இவர்கள் தமிழகம் வந்தடைந்துள்ளனர்.

30 குடும்பங்களைச் சேர்ந்த 103 பேர் திங்களன்று இராமேஸ்வரம் வந்தடைந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

12 பேர் அடங்கிய குடும்பம் ஒன்று 62 ஆயிரம் ரூபாவை படகு உரிமையாளருக்கு கொடுப்பனவாக வழங்கித் தமிழகத்துக்கு வந்துசேர்ந்துள்ளது. - என்றும் 'இந்து' செய்தி ஒன்று தெரிவித்தது.

(ஐ)

## இந்தியா செல்ல முயன்ற 12 பேர் மன்னாரில் கைது

மன்னார், ஓக.11

இந்தியா செல்லும் நோக்கில் கடந்த 7ஆம் திகதி தலைமன்னார் கடற்கரைப் பகுதியில் படகுகளுக்காக பற்றைகளுக்குள் மறைந்திருந்த மன்னார் - வங்காலையைச் சேர்ந்த 12 பேர் தலைமன்னார் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 12 பேரையும் தலைமன்னார் பொலிஸார் நேற்று முன்தினம் காலை மன்னார் மாவட்ட மேலதிக நீதிவான் ரி. ஜே. பிரபாகரன் முன்னிலையில் ஆஜர் படுத்தினர்.

இவர்களை விசாரித்த நீதிவான் இவர்களை தலா 5 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்தார். இம்மாதம் 17 ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறும் அவர்களுக்கு நீதிவான் உத்தரவிட்டார். (த)

## முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஓக.11

உரும்பிராய் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க முன்பள்ளியின் விளையாட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு முன்பள்ளியின் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் த.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற பொறியியலாளர் இ.நடராசாவும் சிறப்பு விருந்தினர்களாக சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ம.தயாபரன், முன்பள்ளி இணைப்பாளர் ப.மகிழினி ஆகியோரும் கலந்து கொள்வர்.

(202)

## சிங்கள மொழிப்பரீட்சை சனியன்று வேம்படியில்

யாழ்ப்பாணம், ஓக.11

அரச உத்தியோகத்தர்களுக்கான சிங்கள மொழிப்பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை யாழ்.பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு பிராந்திய ஆணையாளர் திருமதி சிவலிங்கம் கேட்டுள்ளார்.

அனுமதி அட்டைகளை பெறத் தவறுபவர்கள் பரீட்சை தினத்தன்று பரீட்சைநிலையத்தில் காலை 8 மணிக்கு பெறலாம் என்றும் அவர் தெரிவித்தார். (1-202)


ஆண்டுகள் ஆறில்

மலர்வு 30 - 01 - 1942



உதிர்வு 18 - 07 - 2000

வேலுப்பிள்ளை கனகரட்ணம்
(KANEX)
(ADP, பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்)

பிரிந்து போன
உங்களை விட
எமக்கு என்றும்
நிரந்தரம்
பிரியாத உங்கள்
நினைவுகளே...

'செல்வகிரி'
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

மேகலா, திலீபன்,
கோகு, அர்ச்சா.

(53246)(21.17.15)



ஈர விழிகளுடன் 9ஆம் மாத நினைவலைகள்

மலர்வு 29 - 11 - 1996



உதிர்வு 11 - 11 - 2005

தேவராஜா கிருஷிக்கா [அம்மன்]
(யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி தரம் 4 மாணவி)

அம்மன் என்று ஆசையாய்
அழைத்திருந்தோம் அன்புடனே
அம்மன் இல்லா ஆலயமாய்
எம் இல்லம் ஆக்கி நீ
அம்மனிடமே சென்றிட்டாய்
எம் இல்லத்து இருள் நீங்க
அம்மன் அருள் பெற்று நீ
எம்மிடமே வாராயோ?

உன் பாச நினைவுடன்
அம்மா, அப்பா, அம்மம்மா,
பெரியமாமா, சின்னமாமா, சித்தி

லிங்க வாசா,
உடுப்பிட்டிச் சந்தி,
உடுப்பிட்டி.

(53219)(21.17.15)



ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 05 - 05 - 1942



விண்ணில் 06 - 08 - 2001

அமரர் சின்னக்குட்டி தியாகராசா
(தியாகு)
(முன்னாள் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்கள ஒப்பந்தகாரரும், கர்ணன் வாணிப உரிமையாளரும்)

திதி: 11.08.2006

அன்புடனே அரவணைத்து அகம் மகிழ உபசரித்து
பண்பால் உயர்ந்து நின்று பார்போற்ற வாழ்ந்திருந்து
மண்ணுலக வாழ்வை மறந்து நீ சென்று
ஆண்டுகள் ஐந்துதான் ஆனதுவோ ஐயாவே!

330, யோகபுரம்,
மல்லாவி.

- குடும்பத்தினர்.

(53213)(21.17.15)



நெஞ்சைவிட்டகலா
முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 07 - 04 - 1919



அரன் அடியில் 22 - 07 - 2005

திருமதி அருந்தவஈஸ்வரி இரகுநாதன்

திதி: ஆடி அபரபக்க துதியை
11.08.2006 வெள்ளிக்கிழமை

என் அன்னையே! ஓராண்டு என்ன
ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவு என் நெஞ்சை விட்டகலாது.

அன்பு மகள்
செல்வி செந்திற்செல்வம் இரகுநாதன்,
உற்றார், உறவினர், நண்பர்கள்

உடையார் வீடு,
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

(53218)(21.17.15)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மோடி நாட்டுக்கூத்து அமைப்பில் வரலாற்றுத் தாக்கத்தால் மாற்றங்கள்

## திருமறைக்கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் கருத்து

தென்மோடி நாட்டுக்கூத்துக் கட்டமைப்பில் வரலாற்றுத் தர்க்கத்தால் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறு திருமறைக்கலாமன்றப் பிரதி இயக்குநர் யோ. யோன்சன் ராஜ்குமார் குறிப்பிட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை குருநகர் கார்மேல் மாதா மண்டபத்தில் நடைபெற்ற போருக்குப்பின் என்ற தென்மோடி நாட்டுக்கூத்து நூல் வெளியீட்டில் கலந்துகொண்டு ஆய்வுரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:-

தென்மோடி நாட்டுக் கூத்துக் கட்டமைப்பில் வரலாற்றுத் தாக்கத்தால் பலமாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கூத்து நாடகங்களில் உரையாடல் இடம்பெற கூத்துக் கட்டமைப்பும் மாற்றமடைந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

தென்மோடி நாட்டுக் கூத்திற்கு மரபு வழியானதும் பாரம்பரியமானதுமான ஓர் அமைப்பு உண்டு. கூத்து அளிக்கையின் வரிவடிவமே கூத்து நூல். இது மேடைக்காக எழுதப்பட்டதாகும்.

வரவேற்பு, வரவு போன்ற அம்சங்களைக் கொண்டிருக்கும் தருக்களும் ஆடல் கட்டுகளும் விரவி வரும் நாடகம் மங்களத்தோடு தான் முடியவேண்டும். அவலச்சுவையோடுமுடியக்கூடாது.

ஆனால், கத்தோலிக்க கூத்து மரபு தென்மோடி மரபில் முதல் மாற்றத்தைக் கொண்டுவந்ததெனலாம். இந்த வகைக் கூத்துக்கள் அவலச்சுவையுடன் முடிவதுண்டு. ஆடல் கட்டமைப்பிலும் மாற்றம் ஏற்பட்டது.

விலாசம் வேறு, கூத்து வேறு விலாசம் கூத்தில் செல்வாக்குச் செலுத்தியதால் கூத்துக் கட்டமைப்பும் மாறியது.

விடியவிடிய ஆடிய கூத்தால் வெறுப்படைந்த மக்கள் இசை நாடகத்தை நாடினர். இதனால் கீர்த்தனை முறைகளை நாட்டுக் கூத்து உள்வாங்கியது. ஆடல் கட்டுக்கள் குறைக்கப்பட்டமை முக்கியமானதாகும். போருக்குப்பின் நூலில் கூத்தின் மையப்பொருளாக விடுதலை நோக்கிய ஒரு போக்கே உள்ளது. போர், தோல்வி, இழப்பு மீண்டும் போர், வெற்றி, விடுதலை என்ற போக்கைக் காணலாம். இது ஐம்பதுகளுக்குப் பிற்பட்ட தாக்கமாகும்.

முப்பது பாடல் மெட்டுக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளமை நூலாசிரியரின் ஆளுமையின் வெளிப்பாடாகும். கூத்து மரபுப் போக்கில் தொண்ணூறுகளுக்குப் பின் ஏற்பட்ட மாற்றங்கள் சுட்டிக்காட்டப்பட வேண்டியவை என்று அவர் தெரிவித்தார். (88)

# டீசல் தட்டுப்பாடு; மினிபஸ் சேவை குறைப்பு

தென்மராட்சி,ஓக.11

எரிபொருள் நிலையங்களில் டீசல் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்படுவதால் தனியார் போக்குவரத்துச் சேவைகள் குறைந்த அளவிலேயே நடைபெறுகின்றன.

சில எரிபொருள் நிலையங்களில் பிற்பகலில் டீசல் வழங்கப்படுவதால் வாகனங்கள் நீண்ட வரிசையில் நின்று எரிபொருள் பெறுவதைக் காணமுடிகிறது.

சில எரிபொருள் நிலையங்களில் ஆயிரம் ரூபாவுக்கு மட்டும் டீசல் வழங்கப்படுவதால் தமது சேவைகளைப் பூரணமாக வழங்க முடியவில்லை எனத் தனியார் வாகன உரிமையாளர்கள் தெரிவித்தனர். (117)

# சாவகச்சேரியில் குருதிக்கொடை

தென்மராட்சி,ஓக.11

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரின் ஏற்பாட்டில் நாளை குருதிக்கொடை நிகழ்வு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடத்தப்படவுள்ளது.

லயன்ஸ் கழக, லியோக் கழக உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் இந்நிகழ்வில் குருதிக் கொடை வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் குருதிக்கொடை வழங்க் விரும்பும் கொடையாளிகள் அன்றையதினம் காலை 8.30 மணிக்கு வருகைதருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக யாழ். போதனாவைத்தியசாலை குருதிக்காப்பகத்தில் குருதிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகக் குருதிக் காப்பகத்தினர் அறிவித்துள்ளனர். இதனையடுத்தே இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகக் கழகத் தலைவர் லயன் வ.ஸ்ரீபிரகாஸ் தெரிவித்தார். (117)

# நீர்வேலியில் மைதானம் புனரமைப்பு

அரியாலை,ஓக.11

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானம் பல லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

இந்த விளையாட்டு மைதானத்தில் மாரிகாலத்தில் வெள்ளம் தேங்கி நிற்பதைத் தவிர்க்கும் முகமாக மைதானத்தைக் கிரவில் மண் மூலம் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (17)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

நல்லூர்,ஓக.11

இந்து கலாசார திணைக்கத்தினால் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர் த.பிரதீஸ்வரன் தலைமையில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். ஆன்மீக நிகழ்வின் 13ஆம் நாளான இன்று வெள்ளிக்கிழமை 'சிந்தை மகிழும் சங்கத்தமிழ்' என்ற பொருளில் ச.சசீவனின் சிறப்புச் சொற்பொழிவும் சுழிபுரம் பண்ணாகம் ஸ்ரீமுருகன் இந்து அபிவிருத்தி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனையும் இடம்பெறும். (203-111)

# வாசகர் திருமுகம்

## சோலைவனம் ஆக்க முடியாவிட்டாலும் பாலைவனம் ஆக்கிவிடாதீர்கள்

பசுமையான குடாநாடு இன்று பாலைவனம் ஆகிவருகிறது. தமது சுயலாபத்திற்காகத் தூரநோக்குச் சிந்தனை எதுவும் இன்றி அதிகளவான மரங்கள் தறித்து விற்கப்படுகின்றன. பல்லாண்டு மரங்களான வேம்பு, தேக்கு, பாலை போன்றவை மட்டுமன்றி குறுங்கால வாழ்க்கை வட்ட மரங்களும் அழிக்கப்படுகின்றன. குறுகிய கால நோக்கத்திற்காக இவை அழிக்கப்படுகின்றன. இதனால் சூழலுக்கு ஏற்படும் பாரிய தாக்கத்தினை மக்கள் அறிந்தும் அறியாதோர் போன்று செயற்படுவது வேதனை அளிக்கின்றது.

மண் சரிவு,மண் அரிப்பு, பாலைவனம் ஆதல் போன்ற இயற்கை அனர்த்தங்கள் மரங்கள் அழிப்பதாலேயே ஏற்படுகின்றது. இன்று அதிகரித்த தோல் புற்றுநோய்க்கும் இது காரணம் ஆகின்றது. எனவே, இப்பசுமையான குடாநாட்டில் எதிர்கால சந்ததியினரும் நோயற்று இன்பமாக வாழ்வதற்கும் சூழல் சமநிலையை மாறாது பேணி சூழலைக் காப்பதற்காக மானிடராய் பிறந்த நாம் எல்லோரும் சிந்தித்து செயற்படுவது அவசியம்.குடாநாட்டைச் சோலைவனம் ஆக்கமுடியாவிட்டாலும் பாலைவனம் ஆக்காமலிருக்கவாவது முயற்சிப்போம்.

சாவகச்சேரி. ந.பிரசாந்தன் (மாணவன்)

## குடிதண்ணீர் இல்லாது மாணவர் சிரமம்

பருத்தித்துறை, புறாப்பொறுக்கி அருகில் அமைந்துள்ள இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் குடிதண்ணீர்க் கிணறு கடந்த 5 வருடங்களாகப் பாழடைந்து காணப்படுகின்றது. இதனால் பாடசாலை மாணவர்கள் குடிதண்ணீர் பெறுவதில் சிரமம் அடைந்து வருகின்றனர்.

பாடசாலைகளில் தற்போது மதிய உணவு விழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதனால் சமையல் மற்றும் இதர வேலைகளுக்குப் பெருமளவு தண்ணீர் தேவைப்படுகிறது.

பெரும்பாலான மாணவர்கள் வீடுகளில் இருந்து பாடசாலைக்கு குடிதண்ணீர் கொண்டுவருகின்றனர். அவை அவர்களுக்குபோதியதாக இல்லை.

வரட்சியான இக்காலச் சூழலில் மாணவர்கள் தண்ணீர் அருந்தாமல் இருக்கலாமா? மாணவர்கள் மேலதிகத் தண்ணீர் தேவைக்காக அயல் வீடுகளுக்குச் சென்று குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதை காண முடிகிறது. இதனால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கை பாதிக்கப்படுகிறது. இதனைக் கருத்திற்கொண்டு பாடசாலையிலுள்ள கிணற்றை புனரமைத்துச் சிரமமின்றி குடிதண்ணீர் பெற சம்பந்தப்பட்டவர்கள் ஆவணசெய்யவேண்டும்.

இமையாணன் - சமூக நலன்விரும்பி.

## சமாந்தர சைக்கிள் பயணிகள் வீதி ஒழுங்கு நூலைப் படிக்கவேண்டும்

போக்குவரத்து நெருக்கடி மிகுந்த நேரத்தில் அகலம் குறுகிய வீதிகளில் பாடசாலை மாணவ, மாணவியர் உட்பட இளைய தலைமுறையினர் ஒருவருக்குமேல் மூவர், நால்வராக சைக்கிள்களில் வீதிகளை ஆக்கிரமித்துக் கொண்டு சமாந்தரமாகப் பிரயாணம் செய்கின்றனர். வீதியால் தாம் செல்கின்றோம் என்பதனை மறந்து வீட்டில் கதைத்துக்கொண்டிருப்பது போலவே அவர்கள் செல்கின்றனர்.

அத்தோடு இளைஞர்கள் அருகே வரும் நண்பரின் கையில் அல்லது சைக்கிள் கைபிடியில் பிடித்துக்கொண்டும் செல்கின்றனர். இது மிகவும் தவறான செயலாகும். திடீரென விபத்துக்குள்ளாக நேரிட்டால் எல்லோரும் ஆபத்தான நிலையை எட்டவேண்டிய நிலை ஏற்படும்.

தற்போது நல்லூர் உற்சவ காலத்திற்காக ஆலய வீதிகள் மூடப்பட்டுள்ளன. இதனால் மற்றைய வீதிகளில் போக்குவரத்து நெருக்கடி மிகுந்துள்ளது. இதனை மறந்து சைக்கிளில் பக்கம்பக்கமாகச் செல்வோர் ஏனையோரையும் செல்லவிடாது இடையூறு செய்கின்றனர். எனவே, சமாந்தரமாகச் செல்லும் சைக்கிள் பயணிகள் கட்டாயமாக வீதி ஒழுங்கு நூல் என அச்சிட்டு புத்தகசாலைகளில் விற்கப்படும் நூலை வாங்கிப்படித்து வீதி ஒழுங்கை தயவுசெய்து கடைப்பிடிக்கவும்.

நல்லூர் - வாசன்.

# நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

# 13ஆம் திருவிழா



## பரவ வரமருள்



மரகத மயில்மேல் வருமுருகா
அரகர சிவசிவ அறுமுகவா
சரவண பவனே சண்முகனே
வரந்தர வாவா என்முன்னே
அரவணி சிவனா ரருள்பாலா
பரவ வரமருள் பரமதயாளா

- யோகர் சுவாமிகள்.

## மெய் வருத்தம் தீரும்....

செய்யும் தொழில் சிறக்கும் செவ்வேளின் செல்வாக்கால்
எய்தும் பெருமை எழிகூடும் - மெய்வருத்தந்
தீருந் திருவருளுந் தேங்குவதை நல்லூரிற்
பாருங்கள் பாடிப் பணிந்து.

- இறைமணி சி.இராசரத்தினம்

## பாவத்தை அகற்றுமையா

பஞ்சமா பாதகம் பொலியு மிந்நாட்டிலே
நெஞ்சினில் வஞ்சின மகன்று போகவே
குஞ்சித பாதரின் குமரனே வேலவனே
பஞ்சாக பாவத்தை பாரில கற்றுமையா

- குகநாதசர்மா சிவகுமார்

## தா முருகா அருள்கோடி

முத்தமிழ் குமரனே
எம் தமிழ் வேந்தனே
வேல் பிடித்து வினை அறுத்திடு
வாள்பிடித்து பகை அழித்திடு
வா முருகா மயில் ஏறி
தா முருகா அருள்கோடி.

- ப.வி.தமிழ்நிலவன்

## ஞானவொளி வழங்கிடப்பா...

அழகு மயில் ஏறி அடியாரைக் காத்திடவே
அமைதியுடன் நல்லூரில் குடியமைந்தாய் வேலா!
ஆயுள்வரை உனை நினைத்து தொழுகின்றோம் கந்தா!
இனிமை தரும் பாடல்களை உன்பதியில் கவிவடிக்க
இனிமையுடன் நாம் வாழ அருள் தருவாய் கடம்பா!
ஈசன் மைந்தனே பழனிமலை வேலனே!
ஈராயிரம் வருடங்களின் உன் புகழை அமைத்திரப்பா!
உனை நினைத்து நாள்தோறும் நாடிவரும் பக்தர்களை
உன் பாதத்திருவடியில் நாம் வாழ அருள்தாப்பா!
ஊமைக்கருள் கொடுத்தவனே உமையாள் மகனே! - உன்னை
ஊணுறக்கமின்றி இந்நாளில் நோன்பிருக்கிறோம்.
எட்டுத்திக்கிலும் உன் வேல்காத்திடவே
என்றும் எம்முள்ளத்தில் நிலைத்து நின்றிடப்பா!
ஏழைக்கு அருள் வழங்கும் உத்தம புத்திரனே
ஏறி வந்து புள்ளி மயிலிலே ஞான ஒளி கொடுத்திடப்பா!
ஐயம் இன்றி உனை நினைத்து ஆனந்தமாய் வாழ்ந்திடவே
ஐவகை நிலத்தில் ஒன்றில் அமைந்திட்டாய் குமரா!
ஒரு தலைகொண்ட ஆறுமுகவேலா
ஒற்றுமையாய் நாம் வாழ அருள்தாப்பா சண்முகா!
ஓங்கார வடிவம் கொண்ட ஐங்கரன் தம்பியரே
ஓம் என்ற மந்திரத்திற்கு உபதேசம் செய்தாயே
ஔவையை ஆட்கொள்ள நாவல்கனி கொடுத்தவனே
ஔடதமாய் அடியார்க்கு ஞான ஒளி வழங்கிடப்பா.

- சி.சிவசெந்தூரன்.

விழா சிறப்புற வாழ்த்துவோர்:
உணவுத் தேவைகளுக்கு சுத்தமாகத் தயாரிக்கப்படுவது
V.S.P
லங் ஒயில்
பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2785
(சி/50028) (24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்மராட்சி கிழக்கில் நிவாரணம்

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இடம்பெயர்ந்த மக்களுக்கான ஜூன் மாதத்துக்குரிய நிவாரணப் பொருள்களை விநியோகித்து வருவதாக சங்கத்தின் பொதுமுகாமையாளர் சி.தேவக்குமார் தெரிவித்தார். அத்துடன் ஜூன் மாதத்துக்குரிய சமுர்த்தி நிவாரணமும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. (17)





# கவனியுங்கள்! எங்களிடம்

எசன்ஸ் வகைகள் (ESSENCES), எமல்சன் வகைகள் (EMULSION), டை வகைகள், ஐஸ்கிறீம் தயாரிக்கும் பொருள்கள், வெதுப்பகத்திற்குரிய பொருள்கள், ஆயுள்வேத மருந்துகள், மூலிகைகள், பென்சிகுட் வகைகள் மற்றும் இந்தியன் ஊதுபத்தி வகைகள், பொலித்தீன் வகைகள் என்பவற்றை ஒரே கூரையின்கீழ் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

**சிவா நறுமணப் பூங்கா**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 2567
(சி/50634) (26.19.11)


## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் திருமதி
**கமலராணி ஆசைப்பிள்ளை**
[தையிட்டி, காங்கேசன்துறை -கோண்டாவில்]
திதி: திருதியை தேய்பிறை (11.08.2006)

| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 14-03-1934 | 23-07-2005 |

ஆண்டு ஒன்று சென்றாலும்
எத்தனை பந்தங்கள் இருந்தாலும்
'அம்மா' என்றழைக்கும் உறவுக்கு
நிகரில்லை!

உங்கள் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும் ...

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(53143)(26.19)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தாய் மடியில் 09 - 04 - 1960



ஆண்டவன் அடியில் 12 - 07 - 2006

**அமரர் செபஸ்ரியன் வோல்டர் இருத்ராஜன்**

அன்பின் திருவுருவே பாசத்தின் பிறப்பிடமே
விழுதுவிட்ட விருட்சமாய் நீங்கள்
நிழலாக இருந்த காலத்தை
நித்தமும் நினைந்து உருகுகின்றோம்
இவ்வுலகை விட்டு நீங்கள் பிரிந்தாலும்
எம் நினைவை விட்டு என்றுமே நீங்கள் பிரிவதில்லை!

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மச்சாள்மார், மச்சான்மார்,
பெறாமக்கள், மருமக்கள்.

இல.48,
மாட்டின் றோட்,
யாழ்ப்பாணம். (53061)(26.19)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 29 * 02 * 1937



உதிர்வு 23 * 07 * 2005

**அமரர் செல்லையா கந்தசாமி**

(உரிமையாளர்: கண்ணன் ஸ்ரோஸ், புத்தூர் சந்தி)
திதி: 11-08-2006

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
ஆறிடுமோ எம் துயரம் அப்பா!
எங்கள் குடும்ப ஒளிவிளக்கே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

மீசாலை வடக்கு,
மீசாலை. (53037)(26.19)

## முதியோர், சிறாருக்கு லயன்ஸ் கழகம் உதவி

தென்மராட்சி,ஓக.11

சாவகச்சேரி லயன்ஸ் கழக உறுப்பினர்கள் தமது உறவினர்களின் நினைவாக வழங்கிய நிதியைக் கொண்டு கழகத்தினர் கைதடி முதியோர் இல்லம், தியாகி அறக்கொடை நிதிய இல்லம் ஆகியவற்றுக்கு பொருள்களை வழங்கியுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கழகத் தலைவர் லயன் வ.ஸ்ரீபிரகாஸ் தலைமையிலான குழுவினர் இப் பொருள்களை நேரடியாகச் சென்று வழங்கியுள்ளனர்.

சாவகச்சேரி லயன்ஸ் கழக உறுப்பினரும் சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட பார்வைக்கு முதலிடம் பிரிவுத் தலைவருமான லயன் கா. சற்குணதேவன் வழங்கிய நிதியில் முதியோர் இல்ல முதியவர்களுக்கும்-

லயன் க. மோகனராஜலிங்கம் வழங்கிய நிதியில் தியாகி அறக்கொடை நிதிய இல்லத்தில் தங்கியுள்ள சிறார்களுக்கும் உணவுப் பொருள்களாகவும், அவர்களின் தேவைப் பொருள்களாகவும் வழங்கியதாக கழகச் செயலாளர் லயன் கே.எஸ்.நரேந்திரன் தெரிவித்தார். (117)

## பாரமி கொலை: விசாரிக்க விசேட குழு

லெப்டினன்ட் ஜெனரல் பாரமி குலதுங்க மற்றும் அவருடன் மூவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளவும் அவ்வாறான சம்பவங்கள் இனிமேலும் நடைபெறாதிருப்பதற்கான ஏற்பாடுகளை ஆராய்வதற்குமாக ஜனாதிபதி விசேட ஆணைக்குழு ஒன்றை நியமித்துள்ளார் என அவரது ஊடகப்பிரிவு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணைக் குழுவின் ஆணையாளராக முன்னாள் மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஜி.டபிள்யு எதிரிசூரியவும், செயலாளராக குலசேனரணசிங்கவும் கடமையாற்றுவர். இவர்களது அலுவலகம் பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் செயற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## தகவல் தொழில்நுட்பக் கருத்தரங்கு

தென்மராட்சி, ஓக.11

சாவகச்சேரி லயன்ஸ் கழக தகவல் தொழில்நுட்பப் பிரிவினர் வரணி மகாவித்தியாலய மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோருக்கு தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சிக் கருத்தரங்கினை நடத்தினர்.

வித்தியாலய அதிபர் செ.சுப்பிரமணியம் கழகத்திற்கு விடுத்த வேண்டுகோளையடுத்து இக் கருத்தரங்கு நேற்று முன்தினம் காலை வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

கருத்தரங்கில் வித்தியாலயத்தைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்து கொண்டதாக கழகச் செயலாளர் லயன் கே. எஸ். நரேந்திரன் தெரிவித்தார். (204-117)

## நாவற்காடு குடமியனுக்கு மின்சாரம்

தென்மராட்சி,ஓக.11

வரணிப் பகுதியில் உள்ள நாவற்காடு, குடமியன் ஆகிய கிராமங்களுக்கு விரைவில் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

இக் கிராமங்களுக்கு மின்விநியோகம் வழங்குவதற்கென ஆரம்பிக்கப்பட்ட வேலைகள் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளன என்றும்-

எதிர்வரும் செப்ரெம்பர் மாத இறுதிப் பகுதியில் இக் கிராமங்களுக்கு மின் விநியோகம் வழங்கப்படலாமெனவும் - தெரிவிக்கப்பட்டது. (117)

**Jaffna Study Center of Colombo Theological Seminary**
**கொழும்பு இறையியல் கல்லூரி, யாழ்.நிலையம்**
*கிறிஸ்தவ ஊழியர் பயிற்சி நெறி*

பாடம்: ஆவியின் வரங்கள்
விரிவுரையாளர்:- போதகர் ஜோன்சன் சந்திரசேகர்
திகதி:- ஒகஸ்ட் 14 -17 வரை, காலை 8.30-2 மணிவரை
இடம்:- C.T.S. Jaffna Center, 32/1, விதானையார் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்.நகர்.
(53205)(26.19)

கணபதிதுணை

## தெல்லிப்பழை - பன்னாலை
## திருவருள்மிகு வரத்தலம் கற்பக விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்
### விய வருடம் - 2006



**ஆரம்பம்: 12-08-2006 சனிக்கிழமை**
**நிறைவு: 23-08-2006 புதன்கிழமை**

### விசேட உற்சவ தினங்கள்

12.08.2006 சனி பகல் 10.45 மணி -கொடியேற்றம்
19.08.2006 சனி பி.ப. 2 மணி - வேட்டைத்திருவிழா
21.08.2006 திங்கள் மாலை 5 மணி - சப்பறம்
22.08.2006 செவ்வாய் காலை 9.30 மணி - இரதோற்சவம்
23.08.2006 புதன் முற்பகல் 10 மணி - தீர்த்தம்
24.08.2006 வியாழன் மாலை 4 மணி -வைரவர் பொங்கல்

பன்னாலை,
தெல்லிப்பழை.

பிரம்மஸ்ரீ இ.சபாரத்தினக் குருக்கள்,
பிரம்மஸ்ரீ ம.மகேந்திர சர்மர்,
ஆதீன கர்த்தாக்கள்.

(53124)(26.19)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## நாச்சிமார் கோயிலடி நாதமணிக்கு இருபத்தைந்தாவது ஆண்டு இதய அஞ்சலி

**25 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி**

தோற்றம் 11 - 10 - 1927



மறைவு 19 - 07 - 1981

**அமரர் வேலுப்பிள்ளை அம்பலவாணர்**

**21 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி**

தோற்றம் 11 - 06 - 1950



மறைவு 11 - 09 - 1985

**திருமதி அம்பலவாணர் காமாட்சிஅம்மா**

இருபத்தைந்து வருடங்களானாலும் எம் காதுகளில் மிருதங்க ஓசை ஒலித்துக் கொண்டே இருக்கிறது!

கலைஞர்களின் இருப்பிடம் நாச்சிமார் கோயிலடி. மிருதங்கம் என்றவுடனே நினைவில் இனிப்பவர் மிருதங்க வித்துவான் அம்பலவாணர்தான். அவருடைய வர்சிப்பே தனி. அவருடைய விரல்களிலிருந்து எழும் நாத ஒலி இன்றும் எமது நினைவில் இனிக்கின்றது.

இசைக்கச்சேரிக்கு இவர் மிருதங்கம் வாசித்தால் பாடுபவரின் குரலோடு இசைந்து இணைந்து இன்பநாதமாய் இதயத்தை நிறைக்கும். இவரிடம் மிருதங்கம் பயின்று திறமைமிக்க கலைஞர்களாய் பலர் இன்றும் திகழ்கின்றனர். 1947 இல் ஆவரங்கால் பொன்னுச்சாமி மற்றும் வண்ணை கோவிந்தபிள்ளை ஆகியோரிடம் பயின்ற இவர் ஏ.எஸ்.இராமநாதனிடமும் கற்று ஈழத்தில் பிரபல்யம் பெற்றார். 1952 முதல் யாழ்.ரஸிகரஞ்சன சபாவில் மிருதங்க ஆசிரியராகப் பணிபுரிந்து பல நன் மாணாக்கரை உருவாக்கினார்.

இவர் மிருதங்கம் வாசிக்காத இடமேயில்லை என்று கூறுமளவுக்கு பல பொது இடங்களிலும் ஆலய விழாக்களிலும் சங்கீத மன்றங்களிலும் இசை விழாக்களிலும் இசை விருந்தளித்தார். இசையுலகுக்கே தம்மை அர்ப்பணித்த இவர் மறைந்து இன்று இருபத்தைந்து வருடங்களாகின்றன.

அவர் மறைந்தாலும் அவரது புகழ் மறையாது. அவரது சிரித்த முகமும் காந்த ஒளி வீசும் கண்களும் இனிய அமைதி நிறைந்த சொற்களும் எம் நெஞ்சங்களில் என்றும் நிலைத்தே நிற்கும். அவருடன் சேர்ந்து எமது அன்னையையும் நினைவு கூருகின்றோம்.

தாயிற் சிறந்த கோயிலுமில்லை
அன்புத் தாயே!
இருபத்தோர் ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் நினைவுகளோ பற்பல அம்மா!
சந்திரனைப் பார்க்கும் போதோ
உங்கள் முகம்தான் ஒளிர்கின்றது அம்மா!
அம்மா என்று அழைக்க உயிரில்லையே!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

02, இராமநாதன் வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

இதய அஞ்சலி செலுத்தி நிற்கும்:
ஸ்ரீ ரகு ராம ஜெய லட்சுமி சரஸ்வதி,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(53148) (39-14-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்புலன்ஸ் வண்டிகளுக்குத் தகுந்த பாதுகாப்பை உறுதிப்படுத்தி உதவுக

## கிளிநொச்சி மருத்துவ அதிகாரி கோரிக்கை

கிளிநொச்சி,ஓக.11

ஆபத்தான நிலையிலுள்ள நோயாளிகளை வசதி கூடிய மருத்துவமனைகளுக்கு அவசரமாகக் கொண்டுசெல்வதற்கானஅம்புலன்ஸ் வண்டிகளுக்கும் அதன் ஓட்டுநர்களுக்கும் தகுந்த பாதுகாப்புகளை உறுதிப்படுத்த வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ஆர்.சதானந்தன் கிளிநொச்சி போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கேட்டிருக்கிறார்.

எங்கள் ஆஸ்பத்திரியில் ஆபத்தான நிலையில் மற்றும் சிக்கலான பிரசவ நோயாளிகளையும் மேலதிக சிசிச்சைக்காக வவுனியா அல்லது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிகளுக்கு அம்புலன்ஸ் மூலமாகவே கொண்டுசெல்ல வேண்டியிருக்கிறது. மேலும் எங்கள் மருத்துவமனையில் ஓர் ஆலோசனை வழங்கும் மருத்துவரோ ஏனைய வளங்களோ கிடையாது. அதனால் நோயாளிகளுக்கு அதிகபட்ச சிகிச்சையளிப்பது சாத்தியமில்லை. எனவே, ஆபத்தான நோயாளிகளை உயர்நிலை மருத்துவமனைகளுக்கு அனுப்பிவைப்பது அவசியமாகின்றது.

நெடுங்கேணியில் ஏற்பட்ட குண்டு வெடிப்பையடுத்து எமது அம்புலன்ஸ் ஓட்டுநர்கள் உயிருக்குப் பாதுகாப்பு இல்லை என்று கூறி மறுக்கிறார்கள்.

எனவே, நோயாளிகளுக்குச் சிறந்த உதவியை வழங்குவதற்கு உதவமுடியாத நிலையில் நாங்கள் இருக்கிறோம் - இவ்வாறு டாக்டர் சதானந்தன் கூறியிருக்கிறார். (ப)

## சேதமான வீதிகள் திருத்தப்படவில்லை

பரந்தன்,ஓக.11

கடந்த வருடம் ஏற்பட்ட பெருமழை காரணமாகப் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தின் பல வீதிகள் வெள்ளத்தினால் அள்ளிச் செல்லப்பட்டன. இதுவரையும் அவை புனரமைப்புச் செய்யப்படாமல் உள்ளன. இதனால் மக்கள் போக்குவரத்துச்செய்வதில் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை வீதியில் பிரதான வீதியிலிருந்து உள்ளே செல்லும் வீதிகளால் மக்கள் பயணம் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சில வீதிகளில் புனரமைப்பு மேற்கொள்ளப்பட்டபோதும் அவை பூரணப்படுத்தப்படாமல் குறையில் உள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மழைகாலம் தொடங்குவதற்கு முன்னர் இவ்வீதிகள் புனரமைப்புச் செய்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(203-352)

## பெரியகுளம் கிராம மக்கள் அடிப்படை வசதிகளின்றி சிரமம்

புளியங்குளம்,ஓக.11

கனகராயன்குளம் வடக்கு பெரியகுளம் கிராம மக்கள் அடிப்படை வசதிகள் எதுவுமின்றிப் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குடிதண்ணீர் வசதிகளோ, மலசலகூட வசதிகளோ இக்கிராமத்தில் இல்லை. அதுமட்டுமன்றி, இக்கிராம மக்கள் பாதுகாப்பாகக் குடியிருப்பதற்கேற்ற வீடுகளும் இல்லை.

70இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வரும் இக்கிராமத்தில் அடிப்படை வசதிகள் இல்லாமையால் சுகாதாரச் சீர்கேடு நிலவும் அபாயமும் காணப்படுகின்றது. இக்கிராம மக்கள் ஒரேயொரு பொதுக்கிணற்றையும் குடிதண்ணீரைப் பெறுவதற்கென ஒரு குழாய்க் கிணற்றையும் நம்பியே உள்ளனர்.

இவை பயன்பாட்டுக்குப் போதியனவாக இல்லாமையால் மக்கள் பெரும் இடர்களை

வன்னிச் செய்திகள்

எதிர்கொண்டு வருகின்றனர். சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடயத்தில் கவனமெடுத்து மக்களின் நலனில் அக்கறைகொண்டு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க முன்வர வேண்டுமென மக்கள் கேட்டுள்ளனர்.

(203-355)

மிதிவெடி அகற்றப்படாமையால்

## ஒட்டுசுட்டானில் சில பகுதிகளில் மீளக் குடியமரமுடியாத நிலை

ஒட்டுசுட்டான்,ஓக.11


ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பெருமளவான பகுதிகளில் மிதிவெடி அகற்றப்படாது உள்ளமையால் அப்பகுதிகளில் மக்கள் மீள் குடியேறவோ பயிர்ச்செய்கை மேற்கொள்ளவோ முடியாத நிலையிலுள்ளனர்.

ஒட்டுசுட்டான், சமளங்குளம் ஆகிய கிராமங்களே மிதிவெடிகள் அகற்றப்படாத நிலையில் உள்ளன.

பல இடங்களில் பாதுகாப்புச் சமிக்ஞைகள் மட்டுமே போடப்பட்டுள்ளன. ஆனால் மிதிவெடிகள் அகற்றுவதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

உரியவர்கள் இவ்விடயத்தைக் கவனத்திலெடுத்து மிதிவெடிகள் அகற்றப்படாத இடங்களில் மிதிவெடிகளை அகற்றி அவற்றை மக்கள் பாவனை செய்ய உதவவேண்டுமென ஒட்டுசுட்டான் பிரதேச மக்கள் கேட்டுள்ளனர்.

(203-341)



இருட்டுமடு தமிழ்வித்தியாலயக் கட்டடத் திறப்புவிழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

தமிழீழ கல்விகழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் கட்டடத்தை நாடாவெட்டித் திறப்பதையும் வித்தியாலய அதிபர் கலாதேவனிடம் கட்டடத்தை உரியமுறைப்படி தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் செ.வா.தமிழேந்தி கையளிப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். *(படங்கள்: புதுக்குடியிருப்புச் செய்தியாளர்)*

## உபகரணங்கள் வழங்கப்பட்டன

பரந்தன்,ஓக.11

'ஜேர்மன் அக்ரோ அக்ஷன்' நிதியுதவியுடன் 'சேவா லங்கா' நிறுவனத்தினர் முல்லைத்தீவில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு உபகரணங்களை வழங்கியுள்ளனர்.

21 லட்சம் பெறுமதியானஅணியிசை வாத்தியங்கள், கற்றல் உபகரணங்கள் என்பனவே வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு ம.வி., சிலாவத்தை தமிழ் வித்தியாலயம், றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கே இவை வழங்கப்பட்டுள்ளன.

(203-352)

## மருத்துவசேவை

கிளிநொச்சி,ஓக.11

தமிழீழ சுகாதார சேவையினரின் நடமாடும் பற்சுகாதாரப் பிரிவினரால் விசுவமடு தேராவில் அ.த.க.பாடசாலையில் மருத்துவசேவையொன்று அண்மையில் நடத்தப்பட்டது.

இதில் பற்சிகிச்சை, பொது மருத்துவ சிகிச்சை, கண் பரிசோதனை போன்றன மேற்கொள்ளப்பட்டன.

பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் இதில் கலந்துகொண்டனர்.

(203)

***

கிளிநொச்சி,ஓக.11

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினரால் மருத்துவ சேவைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மாத்தளன் அம்பலவன்பொக்கணை வலைஞன்மடம் இடைத்தங்கல் முகாம், தியோகுநகர் இடைத்தங்கல் முகாம் ஆகியவற்றில் வாழும் மக்களின் நலன்கருதி மருத்துவ சேவைகள் நடத்தப்பட்டுள்ளன. டாக்டர் சுகுமாரன் மருத்துவசேவையை வழங்கினார்.

அத்துடன், சுகாதார விழிப்புணர்வுச் செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டது.

(203)

***

பரந்தன்,ஓக.11

தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் உடுத்துறை மகாவித்தியாலயத்தில் சுகாதார மேம்பாட்டு நிகழ்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் தேவநேசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரினை வடமராட்சி கிழக்கு அரசியல் துறைப்பொறுப்பாளர் இசையூரான் ஏற்றிவைத்தார்.

இதனைத் தொடர்ந்து ஆண்டு ஒன்று தொடக்கம் 5 வரையான மாணவர்களுக்கான உடற்பரிசோதனையும் ஆண்டு 6 தொடக்கம் 10 வரையான மாணவர்களுக்கும் உயர்தர மாணவர்களுக்கும் மற்றும் ஆசிரியர்களுக்கும் சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும் இடம்பெற்றன.

(203-352)

## முல்லையில் உலக வங்கி உதவியுடன் இரண்டாம் கட்ட வீடமைப்புப் பணிகள்

கிளிநொச்சி,ஓக.11

உலக வங்கியின் நிதி உதவியுடன் செயற்படுத்தப்படும் வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தின்கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டாம் கட்டப் பயனாளிகளுக்கான செயலமர்வு நடத்தப்பட்டு வருகின்றது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கூழாமுறிப்பு, விளாத்திக்குளம், முத்தையன்கட்டு வலதுகரை, வித்தியாபுரம், சமளங்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த எண்பதிற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கான செயலமர்வு நடைபெற்றது.

ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெற்ற இச்செயலமர்வில் 'நேர்ப்' திட்டம் தொடர்பான விரிவான விளங்கங்களையும் ஆலோசனைகளையும் முல்லைத்தீவு மாவட்ட 'நேர்ப்' திட்டப் பொறியியலாளர் தகவல் கல்வி தொடர்பாடல் ஆலோசகர், உதவித் தகவல் கல்வி தொடர்பாடல் ஆலோசகர், தொழில்நுட்ப அலுவலர் ஆகியோரால் பயனாளிகளுக்கு விளக்கங்கள் வழங்கப்பட்டன.

(203-352-353)

## புற்பாய் நெய்தல் பயிற்சி ஆரம்பம்

கிளிநொச்சி,ஓக.11

பாலியாறு பிரதேசத்தில் புற்பாய் நெய்தல் பயிற்சி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

'ஐ.எல்.ஓ.' நிறுவன நிதியுதவியுடன் மன்னார் மாவட்டப் பொருண்மிய மதியுரையகத்தால் இப்பயிற்சி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 4ஆம் திகதி பாலியாறு பயிற்சி மண்டபத்தில் மதியுரையகத் திட்ட அலுவலர் டினேஸ் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் 'ஜெய்க்கா' நிறுவன கள அலுவலர் சூரியகுமார், மன்னார் மாவட்ட பொருண்மிய மதியுரையக இணைப்பாளர் ஜசிகரன், 'ஐ.எல்.ஓ.' இணைப்பாளர் பத்மதனேஸ் ஆகியோர் உரையாற்றினர். தொடர்ந்து வைபவ ரீதியாகப் பயிற்சிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

(203)

## வட்டக்கச்சி ம.வி. பழைய மாணவர் நடத்திய மாட்டுவண்டிச் சவாரிப்போட்டியில் வெற்றிபெற்றோர்

வட்டக்கச்சி,ஓக.11

வட்டக்கச்சி மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினரால் கடந்தவாரம் வட்டக்கச்சி கலைவாணி சவாரித்திடலில் நடத்தப்பட்ட மாட்டுவண்டிச்சவாரிப் போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

தமிழீழ விளையாட்டுத் துறையின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட மாட்டுவண்டிச் சவாரிச் சங்கத்தின் ஆதரவுடன் இப்போட்டி நடத்தப்பட்டது.

இதில் தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ காவல்துறையின் வட்டக்கச்சிப் பணிமனைப் பொறுப்பாளர் சி.இராஜகோபால் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து சாவரிப் போட்டிகளை கிளிநொச்சி மாவட்ட மாட்டுவண்டிச் சவாரிச் சங்கச் செயலாளர் வீ.சிவசுப்பிரமணியம் ஆரம்பித்து வைத்தார்.

போட்டிகள் அ,ஆ,இ,ஈ என நான்கு பிரிவுகளாக நடத்தப்பட்டன.

போட்டி முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் நான்கு இடங்களையும் பெற்ற மாட்டு வண்டி உரிமையாளர்களுக்கு கரைச்சிப் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் சிவனேசன் உட்படப் பலர் பரிசில்களை வழங்கினர்.

போட்டிகளில் வெற்றிபெற்றோர் விவரம் வருமாறு:-

'அ' பிரிவு - சி.சுதர்சன் (யாழ்ப்பாணம்), ம.றெக்ஸ் நியூட்டன் (இளவலை), அ.ரவி (வட்டக்கச்சி), ம.மணிவண்ணன் (வட்டக்கச்சி).

'ஆ' பிரிவு - த.குசன் (வட்டக்கச்சி), இ.இராமகிருஷ்ணன் (அளவெட்டி), அ.சசிக்குமார் (கோண்டாவில்), லோ.லதுசா (முரசுமோட்டை).

'இ' பிரிவு - க.அப்பன் (உடையார்கட்டு) உ.அனோஜன் (வட்டக்கச்சி), கு.றஜிகரன் (வட்டக்கச்சி), ச.திருச்செல்வம் (வட்டக்கச்சி).

'ஈ' பிரிவு - சி.இந்திரன் (வட்டக்கச்சி), கி.கஜந்தினி (வட்டக்கச்சி), கோ.உமாகரன் (வட்டக்கச்சி), கி.கிருஷ்ணகுமார் (அக்கராயன்).

இப்போட்டியில் சிறந்த சவாரியாளராக வட்டக்கச்சி, பன்னங்கண்டியைச் சேர்ந்த ஆ.ஜோர்ஜ் ஜெயசீலன் தெரிவுசெய்யப்பட்டார்.

(203-405)

## புதிய நிர்வாகம் தெரிவு

முழங்காவில்,ஓக.11

பூநகரி வீரகத்தி விநாயகர் ஆலய இந்து மாமன்றத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

முதுபெரும் காப்பாளராக ஜெயந்திநகர் மகாதேவா ஆச்சிரமத்தைச் சேர்ந்த தவத்திரு கணேசானந்த மகாதேவ சுவாமிகளும் காப்பாளர்களாக பூநகரிப் பிரதேச சபையைச் சேர்ந்த மா.ஸ்ரீஸ்கந்தகுமார், வேரவில் இ.ம.வி.அதிபர், எஸ்.ரி.இளங்குமரன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

நிர்வாகசபைத் தலைவராக வேரவில் இ.ம.வி. அதிபர் க.ஸ்ரீஸ்கந்தராஜாவும் உபதலைவராக வேரவில் இ.ம.வி. ஆசிரியர் வ.சசிகுமாரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

(203-323)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த அரசானாலும் தமிழருக்கு அச்சுறுத்தல் இருந்தே வருகிறது

## அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கண்டனம்

கிளிநொச்சி,ஓக.11

இந்த அரசின் ஆட்சிக்காலத்திலும் சரி கடந்த கால அரசுகளின் ஆட்சிக்காலங்களிலும் சரி தொடர்ச்சியாகத் தமிழ்மக்கள் அச்சுறுத்தப்பட்டும் கொலை செய்யப்பட்டுமே வருகின்றனர்.

'அக்சன் பைம்' நிறுவனப் பணியாளர்கள் 15 பேர் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் விடுத்துள்ள கண் டன அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தொடர்ச்சியாக மூதூர் பகுதியில் அரசாங்கம் விமானக் குண்டுவீச்சுக்களையும் இராணுவத்தினர் மூலம் யுத்த நடவடிக்கைகளையும் கடந்த இரு வாரங்களாக மேற்கொண்டுவருகின்றது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்துகொண்டிருக்கிறார்கள். முஸ்லிம் மக்கள் கொல்லப்படுகிறார்கள். தமிழ் பேசும் பெண்கள், ஆண்கள், குழந்தைகள் எனப் பலரும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். மக்களுடைய இருப்பிடங்கள் விமானக் குண்டு வீச்சுகளால் அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. சமாதானம் செய்வோர் வாய் மூடி மௌனிகளாக உள்ளனர்.

இந்நிலையில் இப்பகுதியில் யுத்த நேரத்திலும் மனிதநேயப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 'அக்சன் பைம்' நிறுவனத்தினுடைய 15 பணியாளர்களை முன்னேறிவந்த இராணுவத்தினர் பணியகத்துக்குள்ளேயே வைத்து நிறுவனத்தினுடைய சீருடையில் நின்றவர்களைச் சுட்டுக்கொன்றுள்ளது. இச்செய்திகேட்டு எமது இணையம் பேரதிர்ச்சியடைந்துள்ளது.

இந்த அரசு ஆட்சிக்கு வந்தகாலம் தொடக்கம் அரசசார்பற்ற நிறுவனங்களைச் சுதந்திரமாகச் செயற்படவிடாமல் இந்நாட்டில் உள்ள உள்ளூர், சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாகச் செயற்பட்டுவருகின்றது.

இவ்வருடத்தின் முதலாம் மாதம் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பணியாளர்கள், 'போரூட்' நிறுவனத்தினுடைய பயிற்சி வகுப்பில் கலந்துகொள்வதற்காகப் பயணித்துக்கொண்டிருந்தபோது, வெலிகந்த பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில் வைத்து 10 பணியாளர்கள் கடத்தப்பட்டு அதில் 7 பணியாளர்கள் இன்றுவரைக்கும் விடுவிக்கப்படவில்லை. அவர்களுக்கு என்ன நடந்தது என்பதையும் அறியமுடியாமல் உள்ளோம்.

இதேபோன்று 25.05.2006 மூதூர் பகுதியில் சர்வதேச நிறுவனங்களான 'சோஆ' (ZOA) நிறுவனத்துடன் சேர்ந்து இன்னும் இரண்டு சர்வதேச நிறுவனங்களுடைய பணிமனைகள் மீது குண்டு வீசித் தாக்கப்பட்டது. இதில் ஒரு பணியாளர் கடுமையாகக் காயமடைந்தார். சமகாலத்தில் யாழ்ப்பாணத்திலும் சர்வதேச நிறுவனம் ஒன்று தாக்கப்பட்டது. இச்சம்பவங்களைக் கண்டித்து ஐரோப்பிய ஒன்றியம் அறிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேபோல மட்டக்களப்பிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பணிமனை பல தடவைகள் தாக்கப்பட்டு காவலாளியும் இறந்தார். இறுதியாக யாழ்ப்பாணத்திலும் 20.06.2006 தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணிமனை தாக்கப்பட்டு கடமைக்குச் சென்ற பணியாளரும் இராணுவத்தினரால் தாக்கப்பட்டதை ஞாபகப்படுத்துகிறோம்.

இந்த நிலைகளை வைத்து நாம் பார்க்கும்போது தற்பொழுது 'அக்சன் பைம்' நிறு வனப் பணியாளர்களையும் அரச படைகளே கொன்றிருக்க வேண்டுமென்பதற்கான ஆதாரங்களை நாம் தேடத்தேவையில்லை.

இந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்திலும் சரி கடந்தகால அரசாங்கங்களின் ஆட்சிக்காலங்களிலும் சரி தொடர்ச்சியாகத் தமிழ்பேசும் மக்கள் மீது கொலை அச்சுறுத்தல்களையும் தமிழ்பேசும் மக்களுடைய இருப்பிடங்களை அழிப்பதையும் தமிழ்பேசும் மக்களை இடம்பெயரவைப்பதையும் ஒரு தொடர் நடவடிக்கையாகச் செய்து வந்துள்ளதைக் காணலாம். தமிழ்பேசும் ஊடகவியலாளர்கள், தமிழ்பேசும் குடும்பங்கள், பெண்கள், குழந்தைகள், குடும்பத்தலைவர்கள், இளையவர்கள், முதியவர்கள், பாடசாலை மாணவர்கள், புத்திஜீவிகள் எல்லோருமே கடத்தப்பட்டும், கொல்லப்பட்டும், காணாமற் போயிருப்பதும் ஒரு தொடர் கதையாக நடந்துவருவதை அனுபவவாயிலாக அனைவரும் கண்டிருக்கின்றோம்.

இறுதியாக சமாதான ஒப்பந்தத்தின் பின்பு படுமோசமான கொலைகள் தொடர்வதை இந்த அரசாங்கத்தினுடைய காலத்திலேயே கண்டுகொண்டிருக்கின்றோம்.

தற்பொழுது பன்னாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்களையும் கொலை செய்வதிலேயே இந்த அரசாங்கம் முனைப்போடு செயற்பட்டு வருகின்றது - என்றுள்ளது. (203)

---

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### காணி விற்பனைக்கு

கைதடி A-9 வீதியில் கைதடி வயோதிபர் இல்லத்திற்கு எதிர்ப்புறத்தில் தெற்கில் ஒழுங்கையும் மேற்கில் கண்டி வீதியும் கொண்ட 18 பரப்பு 15 குழி கொண்ட காணி ஒருமித்தோ அல்லது 4 பகுதியாகவோ விற்பனைக்குண்டு. விவரங்களுக்கு மாலை 5 மணிக்கு பின் தொடர்பு கொள்ளவும் C.அருணகிரிநாதன், G.P.S. ஒழுங்கை, கல்வியங்காடு யாழ்ப்பாணம். T.P.:0776924182 (53106)

### வீடு விற்பனைக்கு

ஈச்சமோட்டை புது வீதியில் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: K.ஜெகூ. T.P.: 0776636623 (53226)

### பெட்டிகள் விற்பனைக்கு

22 x 10.8 x 6.5cm அளவுடைய காட்போட் பெட்டிகள் (சிறிய தொழிற்சாலைக்கு உகந்தது) விற்பனைக்குண்டு. தொடர்பு: 0212225392 (சி/50742)

### தவறிவிட்டது

பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலைச் சேர்ந்த சண்முகலிங்கம் பிறம்சன் என்பவரது தே.அ.அட்டை கொக்குவில் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கவும். 0779084868 (53216)

மகாலிங்கம் ஆதவன் என்பவரது தேசிய அடையாள அட்டை (863244005V), விசேட, பாடசாலை அடையாள அட்டை என்பன சுன்னாகத்திற்கும் கந்தரோடைக்குமிடையில் தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் சி.மகாலிங்கம், 58, காளிகோயில் வீதி, சுன்னாகம் கிழக்கு எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். T.P.: 0776158794 (53201)

லவ் லேன், உடுவில் என்னும் முகவரியைச் சேர்ந்த ரவிக்குமார் இராஜினி என்பவரது தேசிய அ.அட்டை (835994791V), விசேட அடையாள அ.அட்டை என்பன உடுவில் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P.: 0773151253 (53229)

அம்பிகை நகர், வேலணை மேற்கு, 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சிவராசா சிவாஸ்கரன் என்பவரது தே.அ.அ. (730475004V), வாகன அனுமதிப் பத்திரம், காப்புறுதி, Tax என்பன யாழ்.நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (53232)

### வீடு வாடகைக்கு தேவை

அரச உத்தியோகம் புரியும் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்குத் தேவை. தொடர்புகளுக்கு: 0777 550631 (53230)

---


**40%**

மார்க்கோணியின் நினைவு தினத்தை முன்னிட்டு தபாற் கற்கைகளுக்கு 40வீத கழிவு வழங்கப்படுகிறது. இது Aug 25th வரை!! (ஒரு வருடத்தில் ஒரு முறை)

| | |
|---|---|
| Dip in TV, Radio,VCD Repair | - 1500/= |
| Dip in Cellphone Repairs | - 1200/= |
| Dip in Electrical Wiring | - 1200/= |
| Dip in Computer Hardware | - 1000/= |
| Dip Computer Device Repair | - 1200/= |
| Cer in Electronics ( For all) | - 750/= |



மணிஓடர் மூலம் அனுப்பவும் (பதிவுத்தபால்). இடம் - Wellawatte Post Office, பெறுபவரின் பெயர் Manager, Marconi Technical Institute. மேலதிக கற்கைநெறி தகவல்களுக்கு TP - 2 361 362. இல்லாவிட்டால் ரூ. 5 ஒட்டப்பட்ட நீள கடித உறையை வைத்து அனுப்புங்கள்.

Marconi Technical Institute, 410 - 2/1, Galle Road, Col- 06. 2361362


---

### முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்
### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
### முதலாம் அரையாண்டு மீள் பரீட்சைகள் - 2005/2006
(புதிய பாடத்திட்டம்)

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தைச் சேர்ந்த இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் வருட மாணவர்களுக்கான மீள் பரீட்சைகள் பின்வரும் திகதிகளில் ஆரம்பிக்கப்பட்டுத் தொடர்ந்து நடைபெறும்.

| | |
|---|---|
| இரண்டாம் வருடப் பரீட்சைகள் / மூன்றாம் வருடப் பரீட்சைகள் | 24.08.2006 வியாழக்கிழமை |
| நான்காம் வருடப் பரீட்சைகள் | 29.08.2006 செவ்வாய்க்கிழமை |

மாணவர்கள் தாங்கள் தோற்றும் பாடங்களுக்குரிய அனுமதி அட்டையையும் நேர அட்டவணையையும் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(சி/50751)(32-17-15) - பதிவாளர்.

---

### லட்சார்ச்சனை விஞ்ஞாபனம்
### ஏழாலை வசந்த நாகபூசணி தேவஸ்தானம்

காலம் 12.08.2006 சனிக்கிழமை: 7மணி - அபிஷேகம் , 9 மணி- பூசை, 10 மணி - லட்சார்ச்சனை, 12 மணி- அன்னதானம்.
13.08.2006 ஞாயிற்றுக்கிழமை: 7 மணி - அபிஷேகம், 9மணி - பூசை, 10 மணி - லட்சார்ச்சனை, 12 மணி - அன்னதானம்.
14.08.2006 திங்கட்கிழமை: 9 மணி - சங்காபிஷேகம் (1008), சுவாமி வீதி உலா, 12 மணி - அன்னதானம்

பிரதமகுரு: சிவஸ்ரீ தியாக கெங்காதரக் குருக்கள் (புன்னாலைகட்டுவன்)
ஆசி வழங்குபவர்: தா.மகாதேவக்குருக்கள் (இணுவில் தேவஸ்தானம்)

ஏழாலை. (53227)(32-17-15)

---

### C.V.வேலுப்பிள்ளையின்
### வீடற்றவன் நாவலின்
கதைச்சுருக்கம் - விளக்கம் - விமர்சனம்



கலாபூஷணம் அராலியூர்
**ந.சுந்தரம்பிள்ளை**
எழுதியது இரண்டாம் பதிப்பு
ரூபா 75.00

(53222)(32-17-15)

---

### நூல் வெளியீட்டுவிழா
### நா.யோகேந்திரநாதனின்
### "தொலைநோக்கி"
(சிறுகதைத் தொகுதி)

இடம்:- கிளிநொச்சி பண்பாட்டு மண்டபம்
காலம்:- நாளை (12-08-2006) சனிக்கிழமை
நேரம்:- பிற்பகல் 3.30 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
வெளியீட்டுப்பிரிவு,
புலிகளின்குரல் நிறுவனம், தமிழீழம்.

(சி/50750)(26-32-17-15)

---

### கண்ணீர் அஞ்சலி



பேராசிரியர்
**வி.குணானந்தம்**
(நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர், முன்னாள் சத்திர சிகிச்சைத் துறைத் தலைவர், மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்)

மண்ணிற்கு செய்த சேவை எம் மனங்களில் என்றும் வாழும்.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். அன்னாரது ஆத்மா சாந்தியடையட்டும் ஆலய வாசலில்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடப் பிரிவு,
யாழ்.போதனா வைத்தியசாலை.

(53231)
(32-15-17)

---

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 25 - 07 - 1923



உதிர்வு 12 - 07 - 2006

அருட்செல்வி **அன்ரனீனா** அ.கா.

12.07.2006 அன்று இறைவனடி சேர்ந்த அருட்சகோதரி அன்ரனீனா அவர்கள் சுகவீனமுற்று நடக்க, பேசமுடியாமல் இருந்த காலங்களில் அன்னாரை மனம் கோணாமல் இறுதி மூச்சுவரை இன்முகத்துடன் பராமரித்து நல்ல மரணம் அடையச் செய்த அச்சுவேலி லங்காமாதா மட அருட் சகோதரிகளுக்கும் அவருடைய இறுதியாத்திரையை நல்ல முறையில் நடத்திய யாழ்.மறைமாவட்ட அப்போஸ்தலிக்க கார்மேல் சபை அருட் சகோதரிகளுக்கும், யாழ்.புனித யோன் பொஸ்கோ வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்களுக்கும் மற்றும் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்தும், தொலைபேசி, தந்தி, தபால் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், யாழ். ஆயரின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்ட திருப்பலியில் பங்குபற்றிய குருக்கள், கன்னியர்கள் மற்றும் அனைவருக்கும் எங்கள் இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (12.08.2006) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு புலோலி புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் ஆத்ம சாந்தி திருப்பலியிலும் அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு எங்கள் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துசிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

புலோலி தெற்கு,
புலோலி. (53228)(32-17-15)

அன்னாரின் பிரிவால் துயருற்று நிற்கும்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளைப் பற்றி பேசக்கூடாதென்று மிரட்டினால் அதிகமாகப் பேசுவோம்

## கருணாநிதிக்கு வைகோ பதிலடி



விடுதலைப் புலிகளைப் பற்றிப் பேசக் கூடாது என மிரட்டினால் இன்னும் அதிகமாகப் பேசுவோம்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வை. கோபால சாமி.

கடலூர் மாவட்ட ம.தி.மு.க.செயல் வீரர்கள் கூட்டம் நெல்லிக்குப்பத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:

கட்சியில் இருந்து சுயநலம் காரணமாக விலகிய ஒரு சிலரால் இயக்கத்திற்கு எந்தப் பாதிப்பும் இல்லை. கட்சியை அழிக்க நினைப்பவர்கள் தோல்வியடைவார்கள். தொண்டர்களின் உழைப்பை சுரண்டி குடும்ப ஆதிக்க அரசியல் நடத்தும் கட்சியில்லை. திராவிட இயக்கம் என அக்மார்க் முத்திரை கொடுக்கும் தகுதி கருணாநிதிக்கு இல்லை. நான் கொள்கைக்காக உழைப்பவன். எனது மரணத்திற்குப் பின்னர்தான் எனக்கு ஓய்வு. நம்மிடம் இருந்து சென்ற ஒரு சிலருடன் தி.மு.கவினரை நிற்க வைத்து தனது கட்சியில் சேர்ந்து விட்டனர் என கருணாநிதி பிரமிப்பு காட்டுகிறார்.

சிறுபான்மை அரசு என்றாலே கோபப் படும் அவரது அரசு, ஐந்து ஆண்டு நீடிக்காது. விரைவில் மக்களவைத் தேர்தலும், சட்டசபைத் தேர்தலும் ஒன்றாக நடைபெற வாய்ப்புள்ளது. கூட்டணி தர்மம் அவரிடம் இல்லை. ஜனநாயகத்தை அழிக்கும் வகையில் தோல்விப் பயத்தில் பணம், அதிகார பலம் மூலம் வெற்றி பெறும் வகையில் உள்ளாட்சி தேர்தல் முறையை மாற்றியுள்ளார். இதனை அவர் கூட்டணிக் கட்சியினருடன் ஆலோசிக்கவில்லை. 'ஊமையன் கனவு கண்டது போல்' அவரது கூட்டணிக் கட்சியினர் சொல்ல முடியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றனர். மரணபூமியான இலங்கையில் போராடும் விடுதலைப் புலிகளை ஆதரிக்கும் துணிச்சல் அவருக்கு இல்லை. தமிழகத்தில் வன்முறையை நாங்கள் ஆதரிக்கவில்லை. விடுதலைப் புலிகளின் போராட்டத்தை இலங்கையில் ஆதரிக்கின்றோம். இதற்கு கருணாநிதி மிரட்டுகிறார். தனி ஈழம் கேட்டு போராடும் விடுதலைப் புலிகளை என்றும் ஆதரிப்போம்.



அவர்களைப் பற்றி பேசக்கூடாது என மிரட்டினால் அதிகமாகப் பேசுவோம்.

தமிழக வரலாற்றில் இதுவரை எந்த அரசியல் கட்சி தலைவரின் வீட்டு முன்பாக கலவரம் நடந்தது உண்டா.

ஆனால், ஸ்டாலின் மகன் குண்டர்களோடு வந்து என்வீட்டின் முன்பு கலவரம் செய்தார். பழைய வைகோவாக இருந்தால் ஒருவரும் உயிரோடு சென்றிருக்க மாட்டார்கள். காலம் என்னை பக்குவப்படுத்தியதால் அமைதியாக இருந்தேன். உள்ளாட்சித் தேர்தலிலும் அ.தி.மு.கவுடனான கூட்டணி தொடரும்- என்றார்.

## நேபாள அரசு - மாவோ ஆயுதப் பாவனை ஒப்பந்தம்

காத்மண்டு.ஓக.11

நேபாளத்தில் ஆயுதங்களைக் கையாள்வது தொடர்பாக அரசுக்கும்,-மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராலா மற்றும் மாவோயிஸ்ட் தலைவர் பிரசாந்தா இடையே நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பிற்குப் பின்னர் இந்த ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்பின்னர் இரு தரப்பினரும் கூறுகையில், ''ஆயுதங்களைக் கையாள்வது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினையை நாங்கள் தீர்த்துக்கொண்டுள்ளோம். இதன்மூலம் இடைக்கால அரசில் மாவோ இடம்பெறும் சூழ்நிலை உருவாகியுள்ளது- என்றனர். (8)

## உலக அரங்கில்


# ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள் அறுவைச் சிகிச்சை மூலம் பிரிப்பு

சால்ட்லேக்,ஓக.11

இடுப்புக்குக்கீழே ஒட்டிப்பிறந்த இரட்டைச் சகோதரிகள், அமெரிக்க மருத்துவமனையில் 24 மணி நேரத்துக்கு மேல் நடைபெற்ற மிகவும் சிக்கலான அறுவைச் சிகிச்சை மூலம் வெற்றிகரமாக தனித் தனியே பிரிக்கப்பட்டனர்.

அமெரிக்காவின் சால்ட் லேக் நகரத்தில் உள்ள குழந்தைகள் மருத்துவமனையில் கடந்த திங்கட்கிழமை காலையில் தொடங்கிய அந்த அறுவைச் சிகிச்சை கடந்த செவ்வாய்க்கிழமை காலைக்கு மேல் நீடித்தது. கேந்த்ரா, மலியா என்னும் அக்குழந்தைகளுக்கு வயது 4, அவர்கள் இருவருக்கும் ஒரே ஒரு கல்லீரல்தான். இரு கால்கள்தான். இடுப்பு எலும்பும் ஒன்றுதான். சாதாரணமாக ஒரு மனிதனுக்கு இரு சிறுநீரகங்கள் இருக்கும். ஆனால், அக்குழந்தைகளுக்கு ஒரே ஒரு சிறுநீரகம்தான் இருக்கிறது. எனவே இருவரையும் தனித் தனியே பிரித்த பிறகும், இரு குழந்தைகளுக்கும் பல அறுவைச் சிகிச்சைகளைத் தொடர்ந்து செய்ய வேண்டியிருக்கும் என்று டாக்டர்கள் தெரிவித்தனர்.

இருக்கும் ஒரே ஒரு சிறுநீரகத்தை சிறுமி கேந்த்ராவின் உடலிலே வைத்துவிடுவோம்



என்று டாக்டர்கள் கூறினர். கல்லீரல், குடல், இடுப்பு எலும்பு ஆகியவை இருவருக்கும் இருக்குமாறு பிரிக்கப்படும். இரு கால்களில் ஒன்று கேந்த்ராவின் உடலிலும் மற்றொன்று மலியாவின் உடலிலும் இருக்கும். அதன் பிறகு, இருவருக்கும் மீதிப் பாதி இடுப்பு எலும்பு புதிதாக உருவாக்கப்படும். மலியாவுக்கு சிறுநீரகம் இல்லாததால், தற்போதைக்கு அவளுக்கு டயாலிஸிஸ் (இயந்திரம் மூலம் சிறுநீர் சுத்திகரிப்பு) சிகிச்சை அளிக்கப்படும். சிறிது காலம் கழித்து, அவளது தாய் தானமாகக் கொடுக்கும் சிறுநீரகம் மலியாவுக்குப் பொருத்தப்பட்டுவிடும். இருவருக்கும் மற்றொரு காலும் செயற்கையாகப் பொருத்தப்படும் என்று அறுவைச் சிகிச்சைக்கு முன்னர் டாக்டர்கள் தெரிவித்தனர்.

அவர்களைத் தனித்தனியே பிரிப்பதில் இத்தனை சிக்கல்கள் இருந்தபோதிலும் அவர்களது தாய் எரின், தந்தை ஜேக் ஹெர்ரின் ஆகியோர் அந்த அறுவைச் சிகிச்சைக்கு ஒப்புக்கொண்டனர். இருவரும் தனித்தனியாக வாழ்வதைப் போல கருதத் தொடங்கி விட்டதால் அந்த அறுவைச் சிகிச்சை செய்து விடத் தீர்மானித்தோம் என்று அவர்கள் கூறினர். (8)

## கொக்கா கோலா, பெப்சி நிறுவனங்களை வெளியேற்ற கேரள அரசு முடிவு

திருவனந்தபுரம்.ஓக.11

கொக்கா கோலா, பெப்சி நிறுவனங்களை உடனடியாக கேரளத்தை விட்டுவெளியேற்ற கேரள அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டுள்ளது. திருவனந்தபுரத்தில் கடந்த புதன்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பின் முதல்வர் அச்சுதானந்தன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கொக்கா கோலா மற்றும் பெப்சி குளிர் பானங்களில் அளவுக்கு அதிகமாக பூச்சிக் கொல்லி மருந்துகள் இருப்பதாகவும் அவை உயிருக்குத் தீங்கு விளைவிக்கும் எனவும் தன்னார்வ நிறுவனமான அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் ஆய்வுமையம் சமீபத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு இந் நிறுவனங்களை உடனடியாக கேரளத்தை விட்டு வெளியேற்ற முடிவுசெய்யப்பட்டுள்ளது - என்றார்.

கடந்த 1996-2001 ஆம் ஆண்டில் ஈ.கே. நாயனார் ஆட்சிக்காலத்தில் இந்த நிறுவனங்களுக்கு பாலக்காடு மாவட்டத்தில் அனுமதியளிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (8)

## 1993 இல் 257 பேரை பலிகொண்ட

# மும்பை குண்டு வெடிப்பு வழக்கு; தீர்ப்பு செப்.12 இற்கு ஒத்திவைப்பு

மும்பை,ஒக்.11

பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்பு (1993) நாட்டையே உலுக்கிய மும்பை தொடர்குண்டு வெடிப்பு வழக்கின் தீர்ப்பு செப்ரெம்பர் 12ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மும்பையில் 1993ஆம் ஆண்டு மார்ச் 12ஆம் திகதி தொடர்குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. இதில் 257 பேர் பேலியாயினர். மேலும், 700 பேர் படுகாயமடைந்தனர். 54 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் சேதமடைந்தன. இவ்வழக்கை விசாரித்த குற்றப்புலனாய்வுப் பொலிஸார் பொலிவுட் நடிகர் சஞ்சய்தத் உட்பட 123 பேர் மீது வழக்குப் பதிவு செய்தனர். வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சஞ்சய்தத் உட்பட 94 குற்றவாளிகள் பிணையில் வெளிவந்தனர். மீதமுள்ள 29பேர் சிறையில் அடைக்கப்பட்டனர். வழக்கு விசாரணை நடக்கும்போது 11 குற்றவாளிகள் மரணமடைந்தனர்.

பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்பு (1993) நாட்டை உலுக்கிய மும்பை தொடர் குண்டு வெடிப்பு வழக்கில் நேற்று தடா நீதிமன்றத்தில் நீதிபதி தீர்ப்பு வழங்குவார் என எதிர்பார்க்கப்பட்டது. நடிகர் சஞ்சய்தத் உட்பட 123 குற்றவாளிகளின் தலைவிதியை நிர்ணயிக்கும் தீர்ப்பு என்பதால் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியது. ஆனால், அபு சலீமின் மனு மும்பை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் அபுசலீமின் சட்டத்தரணி வழக்கின் தீர்ப்பை ஒத்திவைக்க கோரிக்கை விடுத்தார். இதையடுத்து தீர்ப்பு செப்ரெம்பர் 12ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. இதனால் வழக்கின் தீர்ப்பு வெளியாவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

## சத்துணவில் கண்ணாடித்துண்டுகள்: 102 மாணவர்கள் வைத்தியசாலையில்

விழுப்புரம்,ஓக.11

திண்டிவனம் அருகே பாடசாலை மாணவர்கள் சாப்பிட்ட சத்துணவில் உடைந்த கண்ணாடித்துண்டுகள் கிடந்ததால் 102 மாணவர்கள் திண்டிவனம் அரசு மருத்துவமனையில் கடந்த புதன்கிழமை அனுமதிக்கப்பட்டனர்.

மரக்காணம் அருகே நகர் கிராமத்தில் உள்ள அரசு நடுநிலைப் பாடசாலையில் சத்துணவு சாப்பிட்ட 6ஆம் வகுப்பு மாணவர் ஜெயப் பிரகாஷ், சத்துணவில் உடைந்த கண்ணாடித்துண்டுகள் கிடப்பதாகக் கூறியதோடு வாந்தி எடுத்தார்.

இதைத் தொடர்ந்து சத்துணவு சாப்பிட்ட சில மாணவர்களும் வாந்தி எடுத்தனர். இப்பாடசாலையின் ஆசிரியர்கள், 102 மாணவர்களை முருக்கேரி ஆரம்ப சுகாதார நிலையத்தில் அனுமதித்தனர்.

அங்கு முதலுதவி சிகிச்சை அளித்தபின் இந்த மாணவர்களை திண்டிவனம் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு இவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இது பற்றி தகவலறிந்ததும் அதிகாரிகள் நேரில் சென்று விசாரணை நடத்தினர். (8)



தெற்கு லெபனானில் நிலை கொண்டுள்ள இஸ்ரேலியத் துருப்பினர் அங்குள்ள ஹிஸ்புல்லாக்களின் மறைவிடம் ஒன்றைத் தாக்குவதற்குத் தயாராகும் காட்சி இது.

## ஹிஸ்புல்லா போராளிகளுடன் கடும் போர்: இஸ்ரேலிய இராணுவத்தினர் 15பேர் காயம்

ஜெருசலேம்,ஓக.11

லெபனானின் தென்பகுதியில் ஹிஸ்புல்லா இயக்கத்தினருக்கும் இஸ்ரேல் இராணுவத்தினருக்கும் இடையே நேற்றுமுன்தினம் புதன்கிழமை கடும் போர் நிகழ்ந்தது. இதில் இஸ்ரேல் வீரர்கள் 15 பேர் காயம் அடைந்தனர். இந்த மோதலில் ஹிஸ்புல்லா இயக்கத் தரப்பில் ஏற்பட்ட உயிர்ச்சேதம் பற்றிய விவரம் தெரியவில்லை.

லெபனானின் தென்பகுதியை ஹிஸ்புல்லா போராளிகள் தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டுள்ளனர். லெபனான் நாட்டின் எல்லைக்குள் அப்பகுதி இருந்த போதிலும் லெபனான் அரசின் கட்டுப்பாட்டில் அப்பகுதி இல்லை.

லெபனானின் தென்பகுதி இஸ்ரேல் எல்லைக்கு அருகே உள்ளது. எனவே அப்பகுதியில் பதுங்கியுள்ள ஹிஸ்புல்லா போராளிகள் இஸ்ரேல் எல்லையோர நகரமான கிர்யத் சமோனா மீது ஏவுகணைகளை சரமாரியாக வீசி பெருத்த சேதத்தை விளைவித்து வருகின்றனர்.

மேலும் எல்லைப் பகுதியிலிருந்து இஸ்ரேல் வீரர்கள் இருவரை ஹிஸ்புல்லா போராளிகள் கடத்திசென்றுவிட்டனர். இதனால் ஆத்திரம் அடைந்த இஸ்ரேல் லெபனானின் தென்பகுதி மீது விமானங்கள் மூலம் குண்டுகளை வீசி நாசப்படுத்தி வருகிறது. அத்துடன் ஹிஸ்புல்லா பயங்கரவாதிகளை அடியோடு ஒழிக்க தரைப்படையையும் இஸ்ரேல் களத்தில் இறக்கியுள்ளது.

இதற்கிடையில் கிர்யத் சமோனா மீது ஹிஸ்புல்லா பயங்கரவாதிகளின் ஏவுகணை தாக்குதல் அதிகரித்து வருவதால் அந்நகரை காலி செய்ய இஸ்ரேல் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. (8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அக்ஷன் கொன்ர லா பாம்......

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாம் இவர்களை இழந்து சலிக்கும் குடும்பத்தவர்களினதும் நண்பர்களினதும் துயரத்தினையும் துன்பத்திலையும் பகிர்ந்து கொள்வதுடன் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அக்ஷன் கொன்ர லா பாம் பலத்த அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளதுடன் ஆழந்த கவலையிலும் மூழ்கியுள்ளது. அதிர்ச்சி ஏற்படுத்தியதும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததுமான இந்தச்சம்பவத்தைப் பற்றிய முழுமையான ஒரு விசாரணை நடத்தப்பட்டு குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என நாம் கோரிக்கை விடுக்கின்றோம்.

அக்ஷன் கொன்ர லா பாம் இலங்கையில் 1996ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்டு வருகிறது. மூதூர் பிரதேசத்தில் அது சுமார் 1000க்கு மேற்பட்ட குடும்பங்களின் சுகா தார நிலைமைகள், மற்றும் குடிதண்ணீர்த்தேவைகளினை பூர்த்தி செய்வதற்கான வேலைத் திட்டங்களை அமுல்ப்படுத்தி வருகிறது. இந்த செயற்பாடுகள் , கடந்த ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் அங்கு தோன்றிய இனங்களுக்கு இடையிலானமுறுகல் மற்றும் மீளத்தொடங்கிய யுத்த பதற்ற நிலை காரணமாக இடம் பெயர்ந்த மக்களுக்கான அவசர மனிதாபிமான உதவிகளாக செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றினை விட ஏனையவேலைத்திட்டங்களாக, 2004ம் ஆண்டு சுனாமியாலும் அதற்கு முன்னர் நிகழ்ந்த யுத்தநிகழ்வுகளினாலும் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதர செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கானவிவசாய மற்றும ஏனைய வருமான செயற்பாடுகளுக்கான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.தற்போதைய நிலைமையில் அக்ஷன் கொன்ர லா பாம் தனது எல்லாச் செயற்பாடுகளையும்

இலங்கையில் (யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கல்முனை, திருகோணமலை ஆகிய இடங்களில்) இடைநிறுத்தியுள்ளது. அத்துடன் ஒரு வார காலத்திற்கு துக்கம் பிரகடனப்படுத்தியுள்ளது.

அதே வேளை நிறுவனமானது இந்த நாட்டில் தொடர்ந்து வேலை செய்வது பற்றி மீளாய்வு செய்து கொண்டிருக்கிறது.

அக்ஷன் கொன்ர லா பாம் நிறுவனத்தின் தலைவர் பின்வருமாறு பிரகடனம் செய்துள்ளார்:

அக்ஷன் கொன்ர லா பாம் ஆனது தனது 27 வருட கால வரலாற்றில் முதன் முறையாக இவ்வாறன முறையில் தாக்கப்பட்டுள்ளது. இந்தக் கொடுஞ்செயல் மீண்டும் ஒரு முறை, யுத்த பிரதேசங்களில் மனிதாபிமான சேவையில் ஈடுபடும் ஊழியர்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகளை வெளிக் கொண்டு வந்துள்ளது. அக்ஷன் கொன்ர லா பாம் எப்போதும் எல்லா இடத்திலும் மதித்துப்போற்றும் மனிதாபிமான விழுமியங்களான 'நடுநிலைமை, பாகுபாடு காட்டாமை, உதவி தேவைப்படுகின்றவர்களை நேரடியாக அடையக்கூடிய தன்மை மற்றும் சுயாதீனம்' ஆகியன மீண்டும் ஒரு முறை மதிக்கப்படாமல் போய்விட்டுவிட்டது.. இது ஒரு பயங்கரமான சம்பவம் என்பதற்கு மேலாக அக்ஷன் கொன்ர லா பாம் போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களையும் அவற்றின் செயற்பாடுகளையும் மீண்டும் ஒரு முறை கேள்விக்கு உள்ளாக்கியுள்ளது.


### சேவைநலன் பாராட்டு



எமது கல்லூரியில் ஆசிரியராகவும்
பிரதி அதிபராகவும் பணியாற்றி
10.08.2006 அன்று தமது அறுபதாவது
அகவையை அடைந்து ஓய்வுபெறும்

**திரு.வை.சிவராசா**

அவர்களின் சேவையைப் பாராட்டி ஓய்வு காலத்தில் நல ...ன் வாழ வாழ்த்துகின்றோம்.

ஆ ...ரியர் கழகம்,
யா/அருணோதயக் கல்லூரி,
அளவெட்டி.

(53237)(32.21.17.15)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையில் நீண்ட காலமாக
அதிபராக சிறப்பாக சேவையாற்றிய

**திரு.பி.முத்துலிங்கம்**

அவர்கள் தென்மராட்சி வலயக் கல்விப்பணிமனைக்கு பிரதிக் கல்விப்பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுச் சென்றமையை பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேன் மேலும் கல்விப் பணியில் உயர்வடைய வேண்டும் என வாழ்த்துகின்றோம்

- பாடசாலைச் சமூகம்

யா/கைதடி முத்துக்குமாரசுவாமி,
மகா வித்தியாலயம்,
கைதடி.

(53236)(21.17.15)

### தொழில் வாய்ப்புடன் உயர்கல்வி

Singapore, Malaysia போன்ற நாடுகளில் உங்கள் உயர்கல்வியை தொடர்வதன் மூலம் U.K., Australia போன்ற நாடுகளுக்கு தொழில் வாய்ப்புடன் குடியேற எம்மை தொடர்பு கொள்ளுங்கள்

- Computer, Accouting, MBA, Travell & Tourisum கற்கைகள்
- தொழில் வாய்ப்புடன் Hotel Management (சம்பளம் 40000/-)
- G.C.E. (O/L) சித்தி போதுமானது

சனி, ஞாயிறு தினங்களில் எமது அலுவலகத்தை தொடர்பு கொள்ளுங்கள். தொலைபேசி மூலம் நேர ஒதுக்கீடு செய்வது விரும்பத்தக்கது.

**Golden Education Services** T.P. 0773256575
**C/O Spider Games Spot**
**No.561 Kasthuriyar Road,**
(இந்து ஆரம்ப பாடசாலை அருகில்) (53235)(21.17.15)

### கண்ணீர் அஞ்சலி

எமது நகரசபையில் சாரதியாக கடமையாற்றி கடந்த
05.08.2006 அன்று அகால மரணமடைந்த

**ஆறுமுகம் உதயசூரியன்**

அவர்களது பிரிவுச் செய்தி கேட்டு துயருறும் அதேவேளை, அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

செயலாளரும்,
உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்,
நகரசபை, பருத்தித்துறை

(சி-50752)(21.15.17)


## உழைப்பாளர் சங்கத்தின் ஒன்று கூடல் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக.11

யாழ்.மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கங்கள் ஒன்றிணைந்து நடத்தும் மாநாட்டுக்கான முன்னோடி ஒன்றுகூடல் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு மருதனார்மடத்திலுள்ள விவசாயக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிராமிய உழைப்பாளர் சங்கத் தலைவர் என்.இன்பம் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் உடுவில் பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் பிரதம விருந்தினராகவும் சமூக சேவை உத்தியோகத்தர் வ.சுரேஸ் குமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

இதில் யாழ்.பல்கலைக்கழக பொருளியல்துறையைச் சேர்ந்த வி.பி.சிவநாதன், அகதிகள் புனர்வாழ்வுக் கழக திட்ட இணைப்பாளர் எம்.சாம்பவி ஆகியோரின் கருத்துரைகள் இடம்பெறும்.

## மதிப்பீட்டுப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஓக.11

யுனிசெவ் அனுசரணையுடனான இழந்த கல்வியை மீட்டல் செயற்றிட்டத்தின் தரம்11 தரம்(6-9) வகுப்புகளிற்கான தமிழ், கணித பாடங்களின் மதிப்பீட்டுப் பரீட்சைகள் யாழ்.மாவட்டத்தில் 5 வலயங்களிலும் நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளது என யாழ். வலய கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

(1)

## கல்வியியற்கல்லூரியின் உள்ளகப் பயிற்சி ஆசிரியர்கள் கொடுப்பனவு நாளை

யாழ்ப்பாணம்,ஓக.11

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வழங்கப்படவுள்ளது.

உரியவர்கள் வந்து கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் கேட்டுள்ளார்.

(1-204)

### வெள்ளவத்தையில் 15 பேர் கைதாகி விடுவிப்பு

கொழும்பு - வெள்ளவத்தைப் பகுதியில் இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கையின் போது பெண்கள் இருவர் உட்பட 15 தமிழர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

தகுந்த ஆள் அடையாளங்களை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் வைத்திருக்காததாலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வெள்ளவத்தைப் பொலீஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, நீர்கொழும்புப் பிரதேசத்தில் சந்தேகத்தின் பேரில் 10 பேர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

### ஒத்திவைப்பு

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் இன்ரறக்ட்கழக உறுப்பினர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவம் பிற்போடப்பட்டுள்ளது.

தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்ட நிகழ்வு நடைபெறும் திகதி பின்னர் அறியத் தரப்படும் எனவும் - கல்லூரி அதிபர் திருமதி வி.பேரின்பநாதன் தெரிவித்தார்.

(1-204)

## இறைவன் அன்புக்கு வசப்படுவான்

அன்பெனும் பிடிக்குள் அகப்படும் மலையே, அன்பெனும் குடத்துள் அடங்கிடும் கடலே என்று இறைவனைப பாடியிருக்கிறார்கள். அன்பே சிவம் என்பதுதானே நம் சமயம்.

இறைவன் அன்பிற்கு வசப்பட்டுத் தலைகுனிந்த கதையொன்று கேளுங்களேன். திருப்பனந்தாள் என்று ஓர் ஊர் தமிழ் நாட்டிலே. அங்கே செஞ்சடையப்பர் கோயில் ஒன்று உண்டு. அங்கே நடந்த கதை தான் இது.

முன்னொரு காலத்திலே திருப்பனந்தாள் சிவன் கோயிலிலே ஓர் அம்மையார் தொண்டுசெய்து வாழ்ந்தார். தாடகை என்பது அவர் பெயர். நந்தவனம் அமைத்து, பூக்கள் எடுத்து மாலைகள் தொடுத்துக் கொடுப்பார். தமது கையாலே சிவலிங்கப் பெருமானுக்கு மாலைசூட்டும் பணியையும் கூடச்செய்து வந்தார். அந்தக் கோயிற் பூசகரும் ஏனையோரும் அந்த அம்மையாரை மிக மதித்து நடந்தனர்.

ஒருநாள் இந்தத் தாடகை அம்மையார் நந்தவனத்திலே பூக்களைக் கொய்து வந்து மாலைகட்டும் இடத்தில் இருந்து பலவித மாலைகள், ஆரங்கள், தூக்குகள், தொடைகள், சரங்கள், செண்டுகள், எனப்பல வகையாகத் தொடுத்துக் கொண்டுபோய்க் கொடுத்தார். பின்பு தன்கையால் சிவலிங்கப் பெருமானுக்குச் சாத்துவதற்காக அழகான மாலை ஒன்றைத் தொடுத்தார். அதை எடுத்துக்கொண்டு வேகமாகச் சந்நிதானத்திற்குப் போனார். மணி அடித்துப் பூஜை தொடங்கும் நேரம். கோயிலுக்குள் பக்தர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். அந்தணர்கள் பல பணிகளில் விரைந்து நடந்துகொண்டிருக்கிறார்கள். அந்த நேரம் இந்த அம்மையார் சிவலிங்கத்திற்கு மாலை சூட்ட வந்துவிட்டார். அதே நேரம் அவரது ஆடை மெல்ல நெகிழ்ந்து அவிழ்வதை அவர் உணர்ந்தார். கையிரண்டும் மாலையை தூக்கிப்பிடித்த நிலையில் இடுப்பில் நெகிழும் சேலையைத் தன் இரு முழங்கைகளாலும் தடுத்துக்கொண்டு நிற்கிறார். தாடகை என்ற இந்த அம்மை. குருக்கள் பூஜைக்கு உள்ளே வரப்போகிறார். திரை விலகப் போகிறது! "அப்பா! என்னைக் காப்பாற்று" என்று

**ஞானக்கதிர்**

அந்த அம்மா கண்ணீருடன் பிராத்திக்கிறார். அதே விநாடியில் சிவலிங்கத் திருவுருவின் சிரசுப் பகுதி அப்படியே தாடகை முன் வளைந்து குனிந்தது. அம்மையின் கையிலிருந்த மாலையை ஏற்றுக் கொண்டது. அந்த ஒரு விநாடியில் அந்தப் பக்தை தன் ஆடையைத் திருத்தியபடி வெளியே வந்தார். நடந்த அற்புதத்தை நேரே கண்டார் பூசகர். அவரும் இறை வனின் இந்த அன்பிற்கு இரங்கும் எளிமையில் உருகினார்.

தாடகை என்ற அம்மையாளருக்குப் பூஜை செய்து வழிபடும் பேற்றையும் வழங்கினார். தாடகையும் இறைவனை முறைப்படிப் பூஜைசெய்து, முத்தியும் அடைந் தார். அவருக்காக வளைந்த சிவலிங்கப் பெருமானை நிமிர்த்தி வைக்கச் சோழ அரசன் முயன்றான். முடியவில்லை. குங்கிலியக் கலய நாயனார் பட்டு நூலைச் சிவலிங்கப் பெருமானில் சுற்றி, அதன் மறு நூலைத் தமது கழுத்தில் கட்டி இழுத்தார்.

குங்கிலியக் கலயரின் கழுத்தில் பட்டு நூல் வெட்டிக் காயம் ஏற்பட்டது. ஆனால், கலயர் கவலைப்படாமல் சிவலிங்கப் பெருமான் நிமிர்ந்து இருக்கவேண்டும் என்று மனம் உருகிப் பிரார்த்தித்தபடி மீண்டும் கழுத்தாலேயே பட்டு நூலைக்கட்டி இழுத்தார். அவருடைய அன்பிற்குக் கட்டுப்பட்ட இறைவன் சிவலிங்கத் திருமேனி யைப் பழையபடி நேராக நிமிர்த்திவிட்டார். "தாடகை ஈச்சரம்" என்ற பெயரில் இன்றும் திருபனந்தாளிலே அந்தச் சிவாலயமும் அன்பிற்குக் கட்டுப்பட்டுக் குனிந்து, நிமிர்ந்த சிவலிங்கப் பெருமானும் உண்டு.


## வலி. கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
# மீள் கேள்வி அறிவித்தல் - 2006

கீழ்க்குறிப்பிடப்படும் சந்தை, இறைச்சிக் கடைகளினை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

*கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி:* *11.08.2006 - 14.08.2006 பிற்பகல் 3 மணி வரை*
*கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி:* *15.08.2006 பி.ப.2 மணி வரை*
*கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி:* *15.08.2006 பி.ப.3 மணி*

**(கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் போது கேள்விப்பத்திரதாரரும் சமுகமளிக்கலாம்)**

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை **'செயலாளர், வலி கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்'** என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை " **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி,** (ரெலிக்கோம் அருகில்) **யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கும் எதிர்வரும் 15.08.2006 பிற்பகல் 2 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்

| இல. | வேலையின் பெயர் | மீளளிக்கப் படக்கூடிய வைப்புப்பணம் | கேள்விப் பத்திரபணம் வற் நீங்கலாக | ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 01 | உரும்பிராய் ஆட்டிறைச்சிக்கடை | 2000.00 | 250.00 | 36000.00 |
| 02 | அச்சுவேலி ஆட்டிறைச்சிக்கடை | 2000.00 | 250.00 | 12500.00 |
| 03 | புத்தூர் மத்திய சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 250.00 | 2500.00 |
| 04. | ஆவரங்கால் பொதுச் சந்தை | 250.00 | 100.00 | 3500.00 |
| 05. | நீர்வேலி மீன் சந்தை | 250.00 | 100.00 | 2000.00 |

மேலதிக விவரங்களையும், விண்ணப்பப் படிவங்களையும் அலுவலக நேரத்தில் உப அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**தம்பையா நடராசா**
செயலாளர்

வலி.கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
புத்தூர்
10.08.2006

(சி-50753)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலிகள்

எமது கல்லூரியின் 2004 'A' பிரிவு தாதிய மாணவி செல்வி பிறேமி கொன்சலா அவர்களின் அன்புத் தந்தை மன்னார், அடம்பன்தாழ்வு வட்டக்கண்டலைச் சேர்ந்த

### ஆலத்தூர் ராமசாமி செட்டியார்

அவர்கள் காலமாகிவிட்டார். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

தாதிய பயிற்சிக்கல்லூரி
யாழ்ப்பாணம். (53240)

அதிபர், போதனாசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்
03 - 05 - 1949



ஆண்டவன் அடியில்
12 - 07 - 2006

### திருமதி இராமலிங்கம் பரிமளாதேவி

12.07.2006 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (11.08.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 387/1, நாவலர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (53239) (49-12)

குடும்பத்தினர்.

## அந்தியேட்டி கிரியை அழைப்பு

அன்னை மடியில்
23 . 04 . 1953



ஆண்டவன் அடியில்
12 . 07 . 2006

கடந்த 12.07.2006 அன்று அமரத்துவம் அடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் பொன்னையா அருள்தாசன்

(அதிபர் (இணைப்பு) கட்டைவேலி G.T.M.M. School)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (11.08.2006) வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் நுணுவில் பிள்ளையார் கோவிலில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோவிற்கடவை,
துன்னாலை மத்தி, கரவெட்டி. (சி-50775) (49-12)

குடும்பத்தினர்.

## 31ஆவது நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



(53243)

12.07.2006 புதன்கிழமை சிவபதமடைந்த

### அமரர் தருமலிங்கம் இராசேஸ்வரன்

அவர்களின் வீட்டுக் கிருத்தியம் இன்று (11.08.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய். தொ.பே.: 0773144806

குடும்பத்தினர்.

## திருமலையில் இரு இளைஞர்கள் சுட்டுக்கொலை

திருகோணமலை, ஓக.11

திருமலை அலஸ்தோட்டப் பகுதியில் இரு இளைஞர்கள் இனந் தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் அலஸ்தோட்டம் - நிலாவெளிப் பகுதியில் இத்துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர்களையே தாக்குதலாளிகள் சுட்டுக் கொன்றுள்ளனர். (ஐ)

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தசாமி வள்ளிப்பிள்ளை

கரவெட்டி கிழக்கு, கேவளையைப் பிறப்பிடமாகவும், நெல்லியடி கிழக்கு புதுத்தோட்டத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி வள்ளிப்பிள்ளை நேற்று (10.08.2006) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்தி-கண்ணகையின் அன்பு மகளும் கந்தசாமியின் மனைவியும் ஜெகநாதன் (கனடா), பே.பவானி (டென்மார்க்), ர.சுமதி (புதுத்தோட்டம்), தேவகுமார் (கனடா), சுந்தர் (கனடா) ஆகியோரின் அன்புத்தாயும், ஜெயா (கனடா), பேரம்பலம் (டென்மார்க்), ரவீந்திரன் (புதுத்தோட்டம்), ராஜி (கனடா), தேவகி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், அச்சுதன், விந்துஜன் (டென்மார்க்), டிலுக்ஷா, சுயானா (கனடா), அகிலா, அபிராமி, அக்ஷியா (புதுத்தோட்டம்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 12 மணியளவில் நடைபெற்று சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

புதுத்தோட்டம்,
நெல்லியடி கிழக்கு.

தகவல்:
ரவீந்திரன் (மருமகன்)


நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்.

குடும்பத்துடன் பார்த்து மகிழ வேண்டிய படம்

சூப்பர்மான் ரிட்டேன்ஸ்

காட்சி நேரம்:10.30,2.30 (superman returns)

12.08.2006 சனிக்கிழமை கட்டட நிதியுதவிக்காட்சி
சிவாஜி, பத்மினி நடித்த

தில்லானா மோகனாம்பாள்

ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
ஜெயம்ரவி, திரிஷா, தேஜாஸ்ரீ, ரிச்சாட்பட்டேல்

சம்திங் சம்திங் உனக்கும் எனக்கும்

காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்
ரிக்கட் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

(சி-47139)




உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 201348730 முதல் 201359439 வரை. சீட்டிழுப்பு இல. 1734 திகதி 09-08-2006

வெற்றி எண்கள் 24 26 56 60

சுப்பர் இல. 02

ஜக்பொட் பரிசு ரூ. 8,264,300/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இல. + சுப்பர் இல. | 0 | 8,264,300/- | |
| 4 இல. | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 3 இல. + சுப்பர் இல. | 21 | 5,000/- | 105,000/- |
| 3 இல. | 276 | 1,000/- | 276,000/- |
| 2 இல. + சுப்பர் இல. | 869 | 500/- | 434,500/- |
| 2 இல. | 13550 | 40/- | 542,000/- |
| 1 இல. + சுப்பர் இல. | 12854 | 20/- | 257,080/- |
| 1 இல. | 191755 | 10/- | 1,917,550/- |
| மொத்தம் | | | 4,532,130/- |
| தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் சைக்கிளின் பெறுமதி | 5 | 120,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 219331 | | 5,132,130/- |

ரூ. 120,000 பெறுமதியான தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் சைக்கிளை வெற்றி பெற்ற 05 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| அம்பாறை | 201349645-1-38 |
| கம்பஹா | 201348950-0-84 |
| கொழும்பு | 201354435-1-34 |
| குருணாகல் | 201352350-5-90 |
| பொலனறுவை | 201351010-1-06 |

தொடர் இல. 201265197 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2006 ஆகஸ்ட் 12 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 8,777,250/-

அபிவிருத்தி லொத்தர் சபை
33, ... கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.


## மரண அறிவித்தல்

### திருமதி சிவசுப்பிரமணியம் தெய்வநாயகி

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் தெய்வநாயகி நேற்று (10.08.2006) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சிவசிதம்பரம் சிவசுப்பிரமணியம் (பெற்றோலியக் கூட்டுத்தாபன வடக்கு - கிழக்கு முகாமையாளர்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற பாலச்சந்திரன், பானுமதி, பவானந்தன், பத்மநாதன் (வனிக்கா மெடிக்கல் விற்பனைப் பிரதிநிதி), பவானி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், நாகேஸ்வரி (R.D.A), சறோஜினிதேவி, ஜெயசிங்கம், தயாநிதி, விக்னேந்திரா ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, கந்தையா, காலஞ்சென்ற லட்சுமி, வள்ளியம்மா, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சுகன்யா, சரண்யா, மதுராந்தி, சிவானந்தி, துஷாந்தி, பார்த்தீபன், கோபிகா, சுபராஜ், கௌதமன், ஜீவித், சாம்பவி (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஏழாலை உசத்தியேடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மூண்டிலுப்பை,
ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி

எங்கள் அன்புக்குரிய சக ஊழியர்

**பத்மநாதன் (பாபு)**

அவர்களின் பாசமிகு தாய்

**திருமதி தெய்வநாயகி சிவசுப்பிரமணியம்**

(ஏழாலை மேற்கு சுன்னாகம்)

அவர்களின் மறைவையிட்டு ஆறாத் துயரத்தில் மூழ்கி இருக்கும் அனைவருக்கும், அன்னாரின் சக குடும்பத்தினருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவர்களின் ஆத்மா சாந்தியடைய மனமுருகிப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளரும் ஊழியரும்,
வனிக்கா மெடிக்கல்ஸ்,
85, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
### இராமலிங்கம் பரிமளாதேவி

மண்ணில் 03.05.1949
விண்ணில் 12.07.2006

அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா
விளையாட்டுக்கழகம்.

(53238)


## பதவி வெற்றிடங்கள்

ஆசியாவின் சமூகப்பொறுப்பு வாய்ந்த நிறுவனத்திற்கான விருது பெற்றதும், இலங்கை ஆயுள் காப்புறுதித்துறையில் தலைமைத்துவ வெற்றியாளராகத் திகளும் சிலிங்கோ ஆயுள் காப்புறுதி நிறுவனத்தின் சாவகச்சேரி கிளைக்கான பதவி வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.

பதவி I Sales Consultant
பதவி II Team Leader
பதவி III Sales Exeacutive

பதவி நிலை II, III க்கு காப்புறுதி துறையில் அல்லது சந்தைப்படுத்தல் துறையில் 02 வருடங்கள் அனுபவம் உள்ளவர்கள் எதிர்பார்க்கப்படுகின்றார்கள்.

★ கல்வித்தகைமை:
G.C.E O/L சித்தி
G.CE A/L 2006 ல் தோற்றியவர்களும் விண்ணப்பிக்கலாம்

★ மேலதிக சலுகைகள்
வாகனக் கடன், வீட்டுக்கடன், இலவச காப்புறுதி பாதுகாப்பு, இலவச மருத்துவ காப்புறுதி.

சுயவிவரக்கோவையுடன் நேர்முகத் தேர்வுக்கு 12.08.2006 சனிக்கிழமை 9மணிக்கு செலான் வங்கி கட்டடம் 2ம் மாடிக்கு நேரில் சமுகம் தரவும்.

சிலிங்கோ இன் சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட்
560, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
0778726097/ 021 222 5061


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவிடம் போராயுத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள விடுதலைப் புலிகளைத் தடைசெய்துள்ள இந்தியா, இலங்கைக்கு மேலும் மேலும் உதவிகளை வழங்கவேண்டியது அவ்சியம் என்று இலங்கை எதிர்பார்ப்பதாக இலங்கையின் உயர்மட்ட வட்டாரங்கள் கூறுகின்றன.

தற்போது இந்தியாவிடம் சமர்ப்பிக்கப் பட்டிருக்கும் போராயுதத் தேவைகள் அடங்கிய பட்டியலில் விடுதலைப் புலிகளின் கிளைமோர் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய இராணுவ வாகனங்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. கடந்த ஜனவரி முதல் புலிகள் நடத்திய இதுபோன்ற தாக்குதல்களில் இலங்கை இராணுவம், கடற்படை மற்றும் பொலிஸ் படைகளைச் சேர்ந்த 400இற்கும் அதிகமானோர் உயிரிழந்திருக்கின்றனர்.

போரில் ஒரு குறிப்பிடத்தக்க சக்தி என்று கடற்படையால் கணிக்கப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகளின் கடற்புலிகளை ஒடுக்குவதற்கான உதவிகளையும் இந்தியாவிடமிருந்து இலங்கை எதிர்பார்த்துள்ளது.

விடுதலைப் புலிகளின் இராணுவ விநியோகங்களைத் தடுக்கும் வகையில் வடக்கு - கிழக்கு கடலில் இந்தியக் கடற்படையும் கரையோரக் காவல் படையும் ஒரு தடையை ஏற்படுத்த வேண்டும் என்றும் இலங்கை அரசு எதிர்பார்க்கிறது.

இதைவிட தொழில்நுட்ப ரீதியான உதவிகளையும் அதாவது 'ராடர்' கண்காணிப்புக்கு மேலதிகமாக விடுதலைப் புலிகளிடம் கண்டறியப்பட்டிருக்கும் அவர்களது விமான பலத்தைக் கண்காணிக்கக்கூடிய தொழில்நுட்ப உதவிகளையும் புதுடில்லி[illegible]டம் இலங்கை நாடியிருக்கிறது.

"வானத்தில் இருந்து படங்களை எ[illegible]பது போன்ற உதவிகள்கூட எங்களுக்கு பிரயோசனமாக இருக்கும்" என்று இலங்கை அரச வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

அத்துடன், உளவுத் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளவும் இலங்கை விரும்புகிறது. "நாங்கள் இவற்றில் எதையுமே தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்த மாட்டோம்" என்று கூறிய அந்த வட்டாரங்கள் "விடுதலைப் புலிகளின் இலக்குகளுக்கு எதிராக மட்டுமே இவை பயன்படுத்தப்படும்" என்றும் குறிப்பிட்டன.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே நீண்ட காலமாக இராணுவ ஒத்துழைப்பு இருந்து வருகின்றபோதிலும் இலங்கைக்கு யுத்தம் புரிவதற்கான ஆயுதங்களைவிட பிரதானமாக அதன் பாதுகாப்புக்குத் தேவையான இராணுவ உபகரணங்களையே இந்தியா வழங்கி வந்துள்ளது.

இலங்கை எதிர்பார்க்கும் இராணுவ ஒத்துழைப்பு உடன்படிக்கையில் இந்தியா இன்னமும் ஒப்பமிடவில்லை. வேறு நாடுகளிடம் இருந்தும் இலங்கை இராணுவ உதவிகளைப் பெற்று வருவதை இந்திய அதிகாரிகள் தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

இலங்கை தற்போது கோரியுள்ள உதவிகளை இந்தியா வழங்குமா என்பது தொடர்பில் எந்தவித அறிகுறிகளும் தென்படவில்லை.

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் அனுதாபிகளான கட்சிகள் கொடுத்த அழுத்தம் காரணமாக இந்தியாவில் இலங்கைப் பொலிஸ் குழு ஒன்றுக்குப் பயிற்சி வழங்கும் நடவடிக்கையை சடுதியாக நிறுத்த நேரிட்டிருக்கிறது.

இலங்கையில் இரத்தக் களரியை ஏற்படுத்தக்கூடிய போர் ஒன்றைத் தடுப்பதில் சர்வதேச சமூகத்துக்கும் இலங்கையின் எண்ணங்களுக்கும் இடையே வேறுபாடுகள் ஏற்பட்டதைத் தொடர்ந்தே தற்போது கொழும்பு அரசு இந்தியாவிடம் இராணுவ உதவிகளை நாடும் அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் விடுதலைப் புலிகளைத் தடைசெய்ய முடிந்தபோதிலும் இந்நாடுகளில் புலிகளின் நிதிசேகரிப்பு மற்றும் பிரசார செயற்பாடுகளை நிறுத்து வதற்கு இலங்கை அரசால் முடியவில்லை.

இந்நிலையில் இலங்கை அரசு புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளை எடுக்க முயற்சிக்கின்ற வேளைகளில் எல்லாம் மேற்கு நாடுகளும் இந்தியாவும் அதைத் தாமதப்படுத்துமாறு ஆலோசனைகளை வழங்கி வருவது இலங்கை அரச மட்டத்தில் பெரும் எரிச்சலையும், அதிருப்தியையும் தோற்றுவித்துள்ளது.

- இவ்வாறு 'ரைம்ஸ் ஒவ் இந்தியா' வெளியிட்ட செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தொண்டு நிறுவன..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களினதும், சர்வதேச தொண்டு நிறுவனங்களினதும் ஊழியர்களை கலந்துகொள்ளுமாறும்-

பேரணியில் கலந்துகொள்வோரை பிற்பகல் 2 மணிக்கு கண்காணிப்புக்குழுவின் அலுவலகம் முன்பாக ஒன்றுகூடுமாறும் - அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் அழைப்பு விடுத்துள்ளது.

இதற்கிடையில் - உள்ளூர், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்கள் அனைவரும் தத்தமது நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நிறுவனங்களுக்குரிய ரீசேட், ஜக்கெட் என்பவற்றை அணிவதுடன், நிறுவனக் கொடிகளை எடுத்துவரவேண்டும் என்று பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் அழைப்பு விடுத்துள்ளார். (எ)

## கிழக்கில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோர்வேயின் விசேட தூதர் ஹன்சன் போவருக்கும் இதுபற்றி அறிவிக் கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பின் வடக்கே வாகரையில் சிக்குண்டுள்ள பொதுமக்களுக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு மற்றும் ஐ.நா. நிறுவனங்களின் உணவு நிவாரண விநியோகங்களை இராணுவம் தடுத்து நிறுத்தி இருக்கிறது.

செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் நிவாரண உதவிப் பொருள்களை ஏற்றிச் சென்ற வாகனங்கள் மாங்கேணி படைமுகாமில் கடந்த இருதினங்களாகத் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

இடம் பெயர்ந்து சிக்குண்டுள்ள 42 ஆயிரம் பொதுமக்களில் அநேகர் பெண்கள், குழந்தைகள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பகுதிகளில் உருவாகிவரும் பட்டினி நிலைமையைத் தடுக்க உதவுமாறு புலிகள் சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஐ- 12)

## நெடுங்கேணி கிளைமோர்: கண்டித்து அடையாள பகிஷ்கரிப்பு

குருநகர், ஓக 11

நெடுங்கேணி மருத்துவர் மற்றும் மருத்துவ பணியாளர்கள் கிளைமோர் தாக்குதலில் கொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து யாழ்.பிரதி மாகாண சுகாதாரத் திணைக்களத்திலும் ஏனைய வைத்தியசாலைகளில் கடமையாற்றும் ஊழியர்கள் இன்று வெள்ளிக்கிழமை ஒரு மணிநேரம் அடையாள வேலைப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளனர்.

வவுனியா பொது வைத்தியசாலையில் கடமைபுரியும் வைத்தியர்கள், ஊழியர்கள் நேற்று பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். (எ-51)

## அல்லை - கந்தளாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சண்டையில் காயமடையும் படையினரை ஏற்றிவரும் வாகனங்கள் அதி கரித்திருப்பதை அடுத்தும், அந்த வாகனங் களை இலக்குவைத்து கிளைமோர் தாக்கு தல்கள் நடத்தப்படுவதைத் தடுப்பதற்காக வும் இந்த வீதியில் சிவிலியன் போக்குவரத்து தடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. (ஐ-12)

## நாச்சிமார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தல் நடத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் மற்றுமிருவர் காயமடைந்தனர். காயமடைந்த இருவரும் உடன் பலாலி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டனர்.

சம்பவத்தையடுத்து அந்த இடத்திற்குச் சென்ற யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் விசாரணைகளை நடத்தினார்.

பாதுகாப்புப் பணிக்காக அடுக்கப்பட்டிருந்த மண்மூட்டைக்குள்ளே வைக்கப்பட்ட கிளைமோரே வெடித்தது என்று கூறப்பட்டது. (எ-1)

## விமானத் தாக்குதலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு - வாகரை, கதிரவெளி, திருகோணமலை - வெருகல், ஈச்சிலம்பற்று, மூதூர் கிழக்கு, சேனையூர், சம்பூர், கட்டைப் பறிச்சான், நல்லூர், அத்தியடிபுரம், இலங்கைத்துறை முகத்துவாரம், புன்னையடி, சறுக்கல்முனை, பூநகர் ஆகிய பகுதிகள் மீதே இரக்கமற்ற இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன.

நேற்றுக் காலை முதல் இடம்பெற்ற இந்தக் கொலைவெறித் தாண்டவத்தில் - சில மணி நேரத்தில் மட்டும் - நூறு பொதுமக்கள் வரை உயிரிழந்தனராம்.

விமானங்களில் இருந்து வீசப்படும் குண்டுகளும், ஷெல்களும் விழுந்து வெடிக்கும் இடங்கள் தீப்பற்றி எரிகின்றன என்றும் கூறப்படுகின்றது.

இதனால், பொதுமக்களுக்குப் பெரியளவில் உயிர், உடைமைச் [illegible]தங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

குண்டு வீச்சில் சிக்கிய கால் நடைகள் ஆங்காங்கே உடல் சிதறிக் கிடக்கின்றன. படுகாயமடைந்த கால்நடைகள் குற்றுயிருடன் துடித்துக் கொண்டிருப்பதாகவும் கூறப்பட்டது.

வான் வழித் தாக்குதல்களும், ஷெல் வீச்சுகளும் அப்பிரதேசங்களை விடாது அதிர வைத்து பெரும் பதற்றத்துக்குள் ஆழ்த்தியிருப்பதால் தாக்குதல்களுக்கு உள்ளான பிரதேசங்களில் மீட்புப் பணியும் தடைப்பட்டுப் போயிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பேரழிவுத் தாக்குதலினால் இப்பிரதேசத்தில் வழமை நிலைமை பாதிக்கப் பட்டு மக்கள் குழம்பிப் போயிருப்பதும், தாக் குதல் தொடரும் அச்சம் நீடிப்பதும் மீட்பு நடவடிக்கைகளை இக்கட்டில் ஆழ்த்தியுள்ளன.

புதிதாக மேற்குலக நாடுகளிடமிருந்து பெற்ற நவீன எறிகணைகள், விமானக் குண்டுகளை இத்தாக்குதல்களில் அரசுத் தரப்பு பயன்படுத்துவதாகவும் -

அரசுத் தரப்பின் பெரும் சூட்டு வலுவை (Fire Power) வெளிப்படுத்துவனவாக சிவிலியன் நிலைகள் மீதான நேற்றைய தாக்குதல்கள் அமைந்துள்ளன எனவும் -

சில செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

ஏற்கனவே, கொழும்பில் இராணுவத் தளபதி மீதான தற்கொலைத் தாக்குதல் முயற்சியை அடுத்து, திருகோணமலை, சம்பூர்ப் பிரதேசத்தில் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அத்தாக்குதல்களினால் அகதிகளாகி இடம்பெயர்ந்த மக்களே நேற்றைய தாக்குதல்களுக்குப் பெரிதும் இலக்காகினர் என்று கூறப்படுகின்றது.

மூதூர் கிழக்கில் இருந்த தமிழ் மக்கள் நேற்றைய கொலை வெறித் தாக்குதல்களை அடுத்து கையில் அகப்பட்ட பொருட்களை எடுத்துக் கொண்டு மட்டக்களப்பு, வாகரை நோக்கிக் கால்நடையாக ஓடித் தப்பும் முயற்சியிலே ஈடுபட்டிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அகதிப் பேரவல நிலை எழுத்தில் வடிக்க முடியாத அளவுக்கு அங்கு மோசமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.(உ)

## மாவிலாறில் நேற்று ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றைய நகர்வில் படைகள் முன்னேறி அணைக்கட்டுக் கால்வாய்க் கதவை நெருங்கியிருக்கின்றன என்று ஒரு தகவல் தெரிவித்தது.

கால்வாய்க் கதவுகளுக்கு நெருக்கமாக உக்கிரச்சமர் நேற்றுப்பகல் நடைபெற்றமையை 'தமிழ்நெட்' இணையத்தளமும் ஊர்ஜிதப் படுத்தியது.

இரு முனைகளில் நகரும் படையினரை புலிகளின் போர் அணிகள் நேருக்குநேர் பொருதி, உக்கிரப் பதிலடித் தாக்குதல்களை நடத்தி வருகின்றன என்றும் புலிகள் தரப்பில் கூறப்பட்டது.

புலிகள்எதிர்ப்பு,பெரும்எடுப்பில்நகர்வை முன்னெடுக்கும் அரசுப் படைகளுக்கு திண றலை ஏற்படுத்தியிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

பெருமெடுப்பில் சுடுதிறனையும், படைக்கல சக்தியையும் பிரயோகித்து மாவிலாறு அணைக்கட்டைக் கைப்பற்றுவதற்கு, கடந்த இரு வாரங்களுக்கு மேலாக அரசுப் படைகள் மேற்கொண்ட வலிந்த படையெடுப்புகள் பயன்தராத நிலையில், தற்போது கூடுதல் ஆள் பலத்தைப் பயன்படுத்தி, பாரிய வலிந்த படையெடுப்பொன்றை அரசு முன்னெடுத்துள்ளது என்று புலிகள் தரப்பில் கூறப்பட்டது.

நேற்றுப்பகல் முழுவதும் நீடித்த சண்டையில் இராணுவத்தரப்பில் 41 சிப்பாய்கள் பலியாகியிருப்பதுடன் 98 பேர் காயமடைந்திருக்கின்றனர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகள் தரப்பில் 10 போராளிகள் உயிரிழந்தும், 20 பேர் வரை காயமடைந்தும் உள்ளனர் என்று புலிகளின் இராணுவப் பேச்சாளர் தெரிவித்திருக்கிறார்.

மாவிலாற்றின் மேற்குப் பகுதியில் திறக்கப்பட்ட முனையிலேயே கூடுதலான இழப்புகள் ஏற்பட்டிருக்கின்றன என்று படை வட்டாரங்களைக் காட்டி இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

காயமடைந்த படையினர் களத்தில் இருந்து முதலில் கந்தளாய் மருத்துவமனைக்கே கொண்டு செல்லப்படுவதால் அங்கு பெரும் மருத்துவ மற்றும் இட நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கின்றன. (ஐ)

## அல்லை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரித்து பீரங்கியொன்று திடீரென வெடித்தபோது ஆயுதக் களஞ்சியத்திலிருந்த ஏனைய குண்டுகள் தன்பாட்டில் வெடிக்கத் தொடங்கின என்று ஒரு தகவல் தெரிவித்தது. இந்த அனர்த்தத்தில் இராணுவத்தினருக்கு பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டிருப்பதாக நேற்றிரவு வெளியான ஊர்ஜிதப் படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன.

தற்போது கடும் சண்டை நடைபெற்றுவரும் மாவிலாறு பகுதிக்கான பிரதான பின்தளமாக அல்லைப்படைமுகாம் உள்ளது. இங்கிருந்தே களத்தில் உள்ள படையினருக்கான ஆயுத விநியோகங்கள் இடம் பெறுகின்றன.

அல்லைப் படைமுகாம் சோமபுரவிலிருந்து 8 கிலோமீற்றர் தூரத்தில் சோமபுர - கந்தளாய் வீதியில் அமைந்துள்ளது.(ஐ - 12)

## தோப்பூரிலும்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோப்பூர் இராணுவ முகாம் மீது புதிய தாக்குதல் ஒன்றை நடத்தி மற்றொரு களமுனையைத் திறந்திருக்கின்றனர்.

இந்தத் தாக்குதல்களில் படையினருக்குச் சேதம் ஏற்பட்டிருப்பதாகப் புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டது. (உ)

G.A.Q , B.A Part I, II
(யாழ்., பேராதனை)
துரித மீட்டல் வகுப்புகள்
ஆரம்பம்: 12.08.2006 10 a.m
அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.
திகழ் கல்வி நிறுவனம்
கே.கே.எஸ் வீதி, இணுவில்.

அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்
பயிற்சி வகுப்புக்கள்
ஆரம்பம்
12.08.2006 சனி 3 p.m
திகழ் கல்வி நிறுவனம்
கே.கே.எஸ் வீதி, இணுவில்.

CHEMISTRY A/L 2007
★சேதன இரசாயனம்
★பௌதீக இரசாயனம்
ஆரம்பம்: 11.08.2006 (இன்று)
Fri 3 pm
★முற்றிலும் அச்சடிக்கப்பட்ட பாடக்குறிப்புகள் இலவசமாக வழங்கப்படும்.
★மாதாந்தப் பரீட்சைகள் நடைபெறும்.
★சில பரிசோதனைகள் செய்து காண்பிக்கப்படும்.
★மாணவர்களின் வசதிப்படி நேரம் ஒழுங்கு செய்து தரப்படும்.
By : S.VASU
நாவலர் இன்ஸ்ரிரியூட்
ஆனைப்பந்தி.

பிரத்தியேக வகுப்புகள்
2008 - A/L
PHY - S.விஜயன்
CHE - J. ரஞ்சித்காந்
★ தெளிவாகவும், சிறப்பாகவும் கற்பிக்கப்படும்.
★ தனிப்பட்ட கவனம்
BRAIN POWER INSTITUTE
குருநகர். யாழ்ப்பாணம்

Paper Class
A/L தமிழ்
By: குழந்தை
ஆரம்பம்:
11.08.2006 வெள்ளி
3.30 p.m
யூனிவேர்சல்

கணக்கீடு
A/L 2007
ஆரம்பம்
கம்பனி நாளை 2 p.m
A/L 2008
ஆரம்பம்
தரேடு நாளை 1, 4 p.m
S.தவா
NEW SCIENCE COLLEGE JAFFNA

BITSMANS
கல்வி நிறுவனம். மானிப்பாய்.
பௌதீக இரசாயனவியல்
A/L 2007 2008
PHYSICAL CHEMISTRY
ஆசிரியர்:
N. மகேஸ்வரன்
ஆரம்பம் : 12.08.2006 சனி 4.30 p.m.

ஐடியல் அக்கடமி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
தரம் 9, O/L, Paper Class
ஆரம்பம் : 12.08.2006 10.30 a.m
கணிதம் : V.N.பத்மநாதன்
விஞ்ஞானம் : A.தபேசன்
தமிழ் : P.தமிழ்மாறன்
ச.கல்வி : A.K.றொபின்சன்
ஆங்கிலம் : P.மதன்
நேர அட்டவணை அலுவலகத்தில்

விமானக் கட்டணம்
★ யாழ். - கொழும்பு இருவழி 11500/-
★ யாழ். - கொழும்பு ஒருவழி 6500/-
★ கொழும்பு - சென்னை இருவழி 18000/-
★ கொழும்பு - லண்டன் இருவழி 63700/-
பார்சல் சேவை
லண்டன் கனிறாவில்
1kg 550/-
MANOJ AIR TOURS (PVT) LTD.
MANOJ AIR TOURS (PVT) LTD
இல.06, நவீன சந்தை கட்டடம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 3916, 222 2007, 0777 517019

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.08.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org